
தமிழரசு
மலர் 3.
1-9-1972
இதழ் 5.



இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள் அடங்கிய நள்ளிரவு (14, 15-8-72) சட்டசபைக் கூட்டத்தில், மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய உரை.

# தியாகிகளுக்கு நன்றி

## மேதகு ஆளுநர் கே.கே.ஷா

ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியாவின் தலை எழுத்தை நிர்ணயித்த நாளாகும். இந்நாள், இந்திய மக்களின் குறிக்கோள்களையும், அவாவையும் உருவகப்படுத்துகிறது.

இந்தச் சிறப்புமிகு நாளில், இந்தியாவின் மற்ற பகுதிகளைப் போல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நாட்களைக் கொண்டாடப் பேரார்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் தமிழ்நாடு முழுவதும் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும் செய்த தியாகங்களையும், நாட்டுக்காக அவர்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டதையும் இன்று நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

இந்த மண்ணில் பிறந்த பெருமகன்களும், மகள்களும் செய்த மாபெரும தியாகங்களை நினைவு கூர்வதில் தமிழ்நாடு அரசு எவருக்கும் இரண்டாவதாக இல்லை. இந்திய அரசால் வழங்கப்பெறும் தாமிரப் பத்திர விருது பெற 81 விடுதலைப் போராட்ட வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் மேலும் பல விடுதலைப் போராட்ட வீரர்கள் பெருமைப் படுத்தப்படுவார்கள். அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பாராட்டு மரியாதை செலுததவும், நன்றி கூறவும் நான் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன். நன்றி மறவாதவர்களான தமிழ்நாட்டு மக்கள் என்றும் உங்களுடைய பணியை நன்றியுடன் நினைவு கூர்வார்கள், என அத் தியாகிகளுக்கு உறுதி கூறுகிறேன்.

தமிழ்நாடு, தொழில் மேம்பாட்டைப் பொறுத்த வரையில் மூன்ருவது இடத்தைப் பெற்றுள்ளது. பசுமைப் புரட்சி மலர குறிப்பிடத் தகுந்த பங்கினைத் தமிழ்நாடு செய்து வருகிறது. தமிழ்நாட்டில் ஏக்கருக்கு உற்பத்தியாகும் அரிசி விளைச்சலே, இந்தியாவிலேயே மிகவும் அதிக அளவாகும். மின்சாரம் உற்பத்தி செய்வதிலும், வழங்குவதிலும், அதுபோலவே கிராமப் புறங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலும் நாம் இணையற்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளோம்.

நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கைப் பாதையில் நாம் செல்கின்ருேம். விரைவான மேம்பாடு அடைவதற்கு எல்லா வகையான ஆர்வமும் தமிழ்நாட்டில் காணக் கிடைக்கிறது. குடிசைமாற்றுதல், கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி, பிச்சைக்காரர் மறுவாழ்வு போன்ற தீவிர புனரமைப்புத் திட்டங்கள், நமது திட்டங்களின் மூலாதாரமாக அமைந்துள்ள பொது மனிதனின் நல்வாழ்வுக்கு உதவுகின்றன. ஏழை எளிய மக்களின் வாழ்வில் குறிப்பிடத் தகுந்த உயர்வை ஏற்படுத்த நமது சக்திகளை ஒருமுகப்படுத்துகின்ருேம்.

சட்டமன்றம்தான் ஜனநாயக வாழ்வின் மூச்சாக இயங்குகிறது. அதன் குரல்களே, மக்களின் நல்வாழ்விற்கான கொள்கைகளாகவும் திட்டங்களாகவும் உருவாகின்றன. அரசின் நாடாளுமன்ற முறை நன்கு செயல்படுவதால், முழுமையான மன நிறைவு பெற்றுள்ளதை தமிழ்நாடு உணர முடிகிறது. சட்ட மன்ற உறுப்பினாகள், கடந்த 25 ஆண்டுகளில், நாடாளுமன்ற நடைமுறைகளையும், பாரம்பரியத்தையும் மதிப்பதிலும், காப்பதிலும், அதன் தரத்தைப் பெருமைப்படுத்துவதிலும் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்துள்ளனர். இந்த 25 ஆண்டுகளில் நடைபெற்ற எல்லாப் பொதுத் தேர்தல்களும் அமைதியாகவே நடைபெற்றுள்ளன. அப்பொதுத் தேர்தல்கள், ஓட்டுரிமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாக்காளர்கள் அதிகமாகி வருவதை உணர்த்தியுள்ளன. கூடுமான வரையில் முழக்கங்கள் நிறுத்தப்பட்டுள்ளன; பயமோ அல்லது விருப்போ அன்றி எல்லா கருத்துக்களையும் கேட்பதற்கு வசதியளித்து, ஓட்டளிக்கும் முறையை வாக்காளர்களுக்குக் கற்பிக்க எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்க, எந்தவிதத் தியாகமும் செய்யத் தயங்கமாட்டோம் என்ற புனித, சிறப்பான, உறுதி மொழி எடுத்துக்கொள்வோமாக. பிரிக்க முடியாத ஒருங்கிணைப்பு என்னும் மந்திரத்தை நமது குருதியில் ஏற்றிக்கொண்டு, இந்தியா வாழ வேண்டுமென்ற தணிக்க முடியாத தாகத்தை ஏற்படுத்திக்கொள்வோமாக. நாம் எல்லாரும் இந்தியாவின் புகழ் பாடுவோமாக. நாம் கனவில் கண்ட பாரதத்தை நிர்மாணிப்போமாக. அங்கு இல்லாமை என்பது இல்லாது செய்து, செழுமை என்பது என்றும் நின்று நிலவச் செய்வோமாக.

வணக்கம்.



# தியாகத்தைப் போற்றிடுவோம்!



இந்திய அரசாட்சிக்கு இன்று வயது
இருபத்தைந்து. முழுக்கால பருவம்.
வெள்ளித் திருமேனி கண்டு வெள்ளிச்
சிறப்புக்கொண்டு இன்று கொண்டாடுவோம்.
இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட
விருப்புடன் பெற்றோர் — விழி இழந்தோர் —
உயிரிழந்தோர் — உடைமை பறிகொடுத்
தோர் — இளமை பாழ்ந்தோர் — சொத்திழந்
தோர் — சிறைச்சாலை சென்றோர் —
கொள்ளையாக மாண்டோர் — துப்பாக்கிக்
குண்டுக்கு இரையானோர் — தூக்குக்
கயிற்றை முத்தமிட்டோர் —
அவரது கொடுமைகளும்
அன்னாருக்கு மலர்களைத் தூவி
வணங்குகின்றோம். அவர்கள் சிலர்
சிலையாகி விட்டனர். சிலர் படமாகி
விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலை
யாகி விட்டனர்.

நெடுங்காலமாக போராடி இந்த சுதந்திரத்தை அன்று பெற்றுத் தந்திட்ட
பெருமான் காந்தியண்ணல் — அவர் வழி
நின்று தியாக விளக்கேற்றித் தன்னலம்
துறந்து களம் புகுந்த தமிழ்நாட்டுத்
தலைவர் பெருமக்கள் —

இனி இளையோர்க்குத் தீரனெனும்
இந்திய அட்சிக்குத் தலைவர் வீர
முழக்கம் உரிமைக் குரல் கொடுத்த
மூவர் குருப் பெருமக்கள்! XVC: 29

அவர்களெல்லாம் இந்திய விடுதலை வெள்ளம் —
பெற்றிட்ட பெருமை — பொற்குவியலி
அதற்குப் பயிர்செய்த உழவர்கள்!
பயிர் நடவே களையின்றிப் பாதுகாப்பது
ம் — எண்ணங்களை பதர்களை
பார்த்துத் தடுப்பதும் — நேரம் பார்த்து
நீர் பாய்ச்சுவதும் — நோய்நொடிகள்
புழுபூச்சி அழுகலை விரட்டுவதும்.
இந்த இருபத்தைந்து ஆண்டுகள்
இடைவிடாது பணியாற்றியுள்ளோம்.
இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா!
எதிரிகளின் அம்புகள் போல இடையே தோன்றும்
தடைகள்!
இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம் —
இன்று வெள்ளிச் செப்பேடு அதை இமயத்
தின் நெற்றியிலே பொறித்துக் காட்டு



முத்து



இங்கெல்லாம் மட்டுமென்ன,
எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றனரோ
காணீர் என்று பறை அறைவிக்கிறோம்.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
உள்ளத்தால் ஒருவரே – மற்று
உடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணாதே – என
வையம் கலங்கக் கண்டு –
உள்ளம் துள்ளும் நாள்

இந்நாள் என்று மகிழ்கின்றோம் –
இத்தரணி அமைதி காண –
முகமலர ஆர்த்து இசைப்பண்ணிசைப்
பாடுகின்றோம்!

இம்மேடையில் இடம்பெற்றுக் கொண்டு
கட்டுக்கோப்புடன் ஏற்றிவைக்கப்பட்ட
தீப விளக்கு!
இதைப் புலவரும் பெருமையினரும்
அளவாது காக்கின்ற ஐம்பதாண்டு
மக்களின் தொண்டர்கள்!
இந்தத் தொண்டர்கள், மிகப் பெரும்பாலும்
உழைக்கும் தொண்டர்கள்!
அப்படிப் பிறந்துத் திரண்டு வந்த
தொண்டர்கள்!



ஒரே நாட்டுக் கூட்டம் பேசிய தொண்டர்கள்!
கழகத்தின் சக்கரம் சுழலுவிக்கும் தொண்டர்கள்!
நாட்டு நலம் காக்கின்ற தொண்டர்கள்! இன
நலத்துக் காக்கின்ற தொண்டர்கள்!
பால் வெள்ளம் போலும் தூய்மை – பழந்தமிழ்ச்
சேய்களை எண்ணும் நெஞ்சம் – பாதாம் –
பிஸ்தா – பச்சை முந்திரி – பொருத்தும்
தோள் – மிகமிகத் தூய்மை!

எல்லாக் கொள்கையும் இந்திய
மண்ணில் மிளிர்த்த தொண்டர்களே!
இவற்றில் சில தொண்டர்களையும் பல
மாணவர்களையும் இழப்போமோ?



வெற்றித் தாளம் இன்னும் இசைக்கப்பட
இந்தச் சுதந்திரம் பெற்றோம் என்று!
இன்ப – இன்ப – இன்பவே இன்ப!
தென்ன நட்ட தென்னையிலே தேன்
தோப்பானேன்? காய்ச்சி குடித்து
தேன்பட தாவுவானேன்?

இந்தக் கேள்விக்கு விடை
கண்டுபிடித்தான் என்று சொல்கின்றோம்
அதும்!

இனி நம் நாட்டில் இன்னல் இல்லை –
இன்னல் இல்லை –
மின்னல் மிகுந்த வன்னல் இல்லை –

எங்கும் புதுமை!
எதிலும் புதுமை!
எல்லாம் பெரு வளமை!

இப்படி நோக்கப் புதுப்புதுமையாய்
உருவாக நாளை போகும் நம் அரசு
என்பதை நாடறியும் -

எத்தனையோ சாதனைத் திட்டங்கள்
கொணர்ந்திடும் செயல்பத்தி
புகழோங்கும்!

செய்வதையே அறிவித்து வரும்
பொதுத்துறையின் தொழிலாளர்க்கு
மேலும் இப்பொது நாளைக்கு அறிவிக்கும்
பங்கு ஒதுக்கப் பெறுமென்று முடிவெ
டுத்து இந்நாளில் தெரிவிக்கின்றேன்.

சிறப்பாடிய விருதுப் பேரா
சிரியர் முன்னூற்றுவர்
சென்னையில் பட்டியலில் இப்போது
75 பேருக்கு மாதந்தோறும்
ஐம்பது ரூபாய் மானியமாய் வழங்கு
கின்றோம் - அவர்கள் கோரிக்கை
நிறைவேற்ற - இப்பொழுதைய கிரமப்



நிலவாக - இன்னும் இப்பொழுது
ரூபாய் உயர்த்தி மொத்தம்
ஐநூறாக வழங்கப்படுமென அறிவிக்
கின்றேன்.

இந்த விழா நாள் முதல் -
சிறுவர் மைதானத் திட்டங்கள்
சலுகைகள் தெரிவிக்கின்றேன்.

இன்று விழா எடுத்துக் கொண்டு
விட்டோம், விழா நோக்கம் நிறைவாகி
விட்ட -
அதனோடு, சில மகிழ்ச்சிச் செய்தி
சொல்லுகின்றேன்.

பேருந்துத் தொழில் முழுதும்
நாட்டுடைமையாக்கப்பட்டுப் பொதுத்
துறையாய் ஆக்கப்பட்டு இன்று
முதல் முழுமை எட்டப்படும் -
விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

* பத்திரிகையாளருக்கு மேல் கிடைக்க
பெறுவோர்க்கு 1/2 கிரவுண்டு
கிடைக்கும்படி -

[illegible]




கல்வி

நடக்கின்ற சேதி தனை அறிவீரோ
என்னவோ நானறியேன்!
இந்தச் சிதம்பரனார் இழுத்த
செக்கிலை - இங்கே சென்னைக்கே
கொணர்ந்து சேர்ப்பன இடமென்
நில் கோட்டைப் பொட்டலாய் ஆக்கித்
திருத்தத் திட்டம் தீட்டிவிட்டோம்!
இத்திசையில் புதுவழியில் இன்று
நிறைவேறும் அந்தக் காரியம்
என்று கூறுகின்றேன்!









தியாகத் தீயின் சின்னமன்றோ
இந்தச் செக்கு!
தியாகத்தை மதிப்பதன்றோ நம்
அரசு!
திட்டமிட்டுப் பணியமைக்கத் திறனை
அமைத்ததன்றோ நம் அரசு!
அதனாலே தியாகத்தைப்
போற்றுவோம்!
தியாகச் சுடர்த் தெய்வமனைத்
தொழுதிடுவோம்!

மண் காத்த - மான மொழி காத்த -
கண் காக்கும் இமைபோல் வாழ்ந்து
வீழ்ந்துபட்ட வீரத்திரு நாயகர்க்கு
இந்நாளில் அனைவருமே வணக்கம்
செய்வோம்.

15/8/1972





விடுதலை நாள் விழாவையொட்டி ஆகஸ்டு 14-ஆம் நாளன்று. அகில இந்திய வானொலியின் சார்பில் இராசாசி மண்டபத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'விடுதலை வீரர்கள்' கவியரங்கக் காட்சி.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் த மி ழ க முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்ற "தன்னிறைவில் 25 ஆண்டுகள்" என்னும் பொருட்காட்சி



# உள்ளம் கொள்ளை கொள்ளும்
# வெள்ளி விழா நிகழ்ச்சிகள்

இந்தியா விடுதலை யடைந்த 25-ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பொருட்டு இந்தியா முழுவதும் இந்த ஆண்டு விடுதலை நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### கவியரங்கம்

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் விடுதலை நாளை யொட்டிப் பல்வேறு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 14-8-1972 காலை 10 மணி அளவில் சென்னை வானொலி நிலையத்தின் சார்பில் வெள்ளி விழாக் கவியரங்கம் பொது மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. கவியரங்கத்திற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

'விடுதலை வீரர்கள் என்ற பொதுத் தலைப்பில்' பாரதியார் பற்றி யோகி சுத்தானந்த பாரதியாரும், வ உ. சிதம்பரனாரைப் பற்றித் திரு எஸ். டி. சுந்தரமும், வ. வே. சு. ஐயரைப் பற்றித் திருமதி சௌந்தரா கைலாசம் சார்பில் அவர் மகள் செல்வி பத்மினியும், சுப்பிரமணிய சிவா பற்றி திரு கொத்தமங்கலம் சுப்புவும், சண்பகராமன் பிள்ளையைப் பற்றித் திரு வானம்பாடியும், வாஞ்சிநாதனைப்பற்றித் திரு கே. சி. எஸ். அருணாசலமும், திருப்பூர் குமரனைப் பற்றித் திரு தொ. மு. சிதம்பர ரகுநாதனும் பெயர் தெரியாத் தியாகியர் பற்றிக் கவிஞர் கண்ணதாசனும் கவிதை பாடினர்.

மாலை 4 மணிக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையும், இந்திய அரசினர் செய்தித் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'தன்னிறைவை நோக்கி 25 ஆண்டுகள்' என்னும் கண்காட்சி மற்றும் கலை விழாவினை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில், சட்டப் பேரவைத் துணைத்தலைவர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும், தமிழ்நாடு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கே. இராசாராம் அவர்களும் பங்கு கொண்டனர்.

### ஆளுநர் மாளிகையில் விருந்து

விடுதலைநாள் வெள்ளிவிழாவை யொட்டித் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் கிண்டி ராஜபவனில் ஒரு மாபெரும் தேநீர்விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழக முதல்வர் கலைஞர், அமைச்சர்கள், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள், தியாகிகள், அரசாங்க அலுவலர்கள், நகரப் பிரமுகர்கள் உட்பட மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் விருந்தில் கலந்து கொண்டனர்.

விழாவில் திருமதி கே. பி. சுந்தராம்பாள், இசைச் சித்தர் சி. எஸ். ஜெயராமன் ஆகியோரின் இன்னிசை விருந்தும், ஸ்ரீவித்யாவின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

விழாவில் பங்கு கொண்ட போலீஸ் பாண்டு வாத்தியக் குழுவினருக்கும், சென்னை 'ரெஜிமெண்டல் சென்டர்' பாண்டு வாத்தியக் குழுவினருக்கும் ஆளுநரும் முதல்வரும் கேடயங்கள் வழங்கினர்.

விழாவை யொட்டி ஆளுநர் மாளிகையும், கிண்டி காந்தி மண்டபமும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

### போர் நினைவுச் சின்னத்தில்

தலைமைச் செயலகத்தின் அருகே உள்ள போர் நினைவுச் சின்னத்தில் முதல்வர் கலைஞர் விளக்கேற்றி வைத்தார். முதல் வரைச் சென்னை நகர ஷெரீப் திரு எம்.ஏ.எம். இராமசாமி வரவேற்றார். நாட்டுப் பாதுகாப்புப் பணியில் உயிர்நீத்த தமிழ் நாட்டு வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட அந்தச் சின்னத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் மலர் வளையம் வைத்தார். இரு மணித்துளிகள் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்கள்.

### மாநகராட்சியில்

விடுதலை வெள்ளி விழாவை யொட்டிச் சென்னை மாநகராட்சி மன்றம் வண்ண விளக்குகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. முதல்வர் கலைஞர் அவர்கள் அங்கு ஒளி விளக்குகளை ஏற்றிவைத்தார்கள்.

மாநகராட்சி மன்றத்தில், நள்ளிரவுக் கூட்டம் நடைபெற்றது. மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்கள் துணை மேயர் திரு என். வி. என். சோமு அவர்கள், மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் திரு வி. முனுசாமி அவர்கள்,













எதிர்க் கட்சித் தலைவர் திரு குப்புசாமி அவர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

### நள்ளிரவில் சட்டமன்றம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற இந்திய நாடு விடுதலை பெற்று இருபத்தைந் தாண்டுகள் உருண்டோடிச் சுதந்தர வெள்ளி விழாவைக் கொண்டாடும் வகையிலும், சுதந்தரத்திற்காகத் தங்கள் இன்னுயிரையும் ஈந்தத் தியாக சீலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், இருபத்தைந்நாண்டுகளுக்கு முந்திய அந்த ஆகஸ்டு 14-ஆம் நாளை நினைவுகூரும் வகையிலும், கடந்த ஆகஸ்ட் 14-ஆம் நாள் இரவு 10.45 மணிக்குத் தமிழ்நாடு சட்ட மன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சட்ட மன்றக் கூடம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, அந்தப் பேரொளியில், அவையே பட்டப் பகல் போல விளங்கியது. மேலும், கூடம் முழுவதும் மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, எங்கும் மணம் கமழ்ந்தது.

அவையில், சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ஒருசேர அமர்ந்திருந்தனர். வலது பக்க முன் வரிசையில் அமைச்சர்களும், இடதுபுற முன்வரிசையில் இரு அவைகளின் எதிர்க்கட்சித் தலைவர்களும் அமர்ந்திருந்தனர்.

10.45 மணிக்குத் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் இரு மன்றங்களின் தலைவர்களாலும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களாலும், சட்டமன்ற வாயிலில் வரவேற்கப்பட்டார். பின்னர் சட்ட மன்றத்தில், சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு மதியழகன் அவர்களும், மேலவைத் தலைவர் மாண்புமிகு சி. பி. சிற்றரசு அவர்களும் இருபுறமும் வர, அவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று வரவேற்றனர்.

'நீராருங் கடலுடுத்த என்று தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் சுதந்தர வெள்ளி விழாவின் சிறப்புகளை எடுத்துரைத்தார். (ஆளுநர் உரை பிறிதொரு பக்கத்தில் வெளியிடப் பெற்றிருக்கிறது.)

பிறகு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். (உரை பிறிதொரு இடத்தில் வெளியாகியுள்ளது)

அதன்பிறகு, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் பேசினார்கள். உழைப்பாளர் பொதுநலக் கட்சித் தலைவர் திரு எஸ். எஸ். இராமசாமிப் படையாட்சி, மேலவை ஐக்கிய கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். தாமோதரன், தேசியக் காங்கிரஸ் சார்பில் திருமதி டி. என். அனந்தநாயகி, சுதந்திராக் கட்சித் தலைவர் திரு சா. கணேசன், சட்டமன்ற முஸ்லீம் லீக் தலைவர் திரு மொய்தீன், பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி, மேலவை ஸ்தாபனக் காங்கிரஸ் தலைவர் திரு கே. இராசாராம் நாயுடு, மேலவைத் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவை முன்னவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு, சட்டமன்றத் தலைவர் திரு கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர்.

பின்னர், நள்ளிரவு 12 மணிக்கு விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவையினர் அனைவரும் இரு மணித்துளிகள் அமைதியாக எழுந்து நின்றனர். 12-02 மணிக்கு நாட்டு வணக்கத்துடன் வெள்ளி விழாச் சிறப்புச் சட்டமன்றக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

### ஆகஸ்ட் 15-ஆம் நாள்

காலையில் கோட்டை கொத்தளத்தில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் நாட்டுக் கொடி ஏற்றி வைத்







தார்கள். முதல்வர் கலைஞர் அவர்களும், அமைச்சர்கள் குழுவினரும், சட்டமன்றத் தலைவர் அவர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுர்கள். கொடி வணக்கத்துக்கு முன்பு நடைபெற்ற இராணுவ மரியாதையைத் தமிழக ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

அன்று மாலை 5 மணியளவில் சென்னைக் கடற்கரைச் சாலையில் அணிவகுப்பு ஊர்திகளை ஆளுநர் அவர்களும், முதல்வர் கலைஞர் அவர்களும், மத்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும் பார்வையிட்டார்கள்.

ஊர்வலத்தைக் காண மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. வங்கக்கடல் இடம் மாறி வந்துவிட்டதோ, தங்கத் தமிழ் நாட்டார் அனைவருமே சென்னைக்குக் குடிபெயர்ந்து வந்துவிட்டார்களோ என்று எண்ணுமளவுக்கு மக்கள், பெருங் கூட்டமாகத் திரண்டிருந்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்துக்குப் பிறகு, அதற்கு அடுத்தபடி என்று சொல்லத்தக்க அளவுக்கு ஒரு பெரும் ஜனத்திரளை 15-ஆம் நாளில் சென்னை சந்தித்திருக்கிறது.

அணிவகுப்பு ஊர்தி ஒவ்வொன்றும் தனிச் சிறப்புப் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது. அவை கண்களுக்கு மட்டுமல்ல-கருத்துக்கும் விருந்தளித்ததை மறக்க முடியாது.

அணிவகுப்புக்குப் பின்னர், சீரணி அரங்கில் அனைத்துக் கட்சியினர் பங்கு பெறும் விடுதலை நாள் விழாக் கூட்டம், சீரணி அரங்கில் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களின் உரை பின்வருமாறு :—

தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு ஜெயராம ரெட்டியார் முதலில் பேசினுர்.

''நாட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்ருலும் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிருேம். அந்த முன்னேற்றம் ஏற்பட அனைவரும் பாடுபட வேண்டும். நமது முதலமைச்சர் நல்ல பல காரியங்களைச் செய்து வருகிருர். மேலும் அவர் நற்காரியங்களைச் செய்திட அவர் நலம் பெற்று நீண்ட நாள் வாழ ஆசைப்படுகிறேன்'' என்ருர் அவர்.

உழைப்பாளர் பொது நலக் கட்சியின் தலைவர் திரு எஸ்.எஸ். இராமசாமிப் படையாட்சி பேசுகையில்—''வறுமை ஏழ்மை இன்னும் தொலைக்கப்படவில்லை. தொடர்ந்து விரட்டிக் கொண்டிருக்கிறது. பின்தங்கிய மக்கள் இன்னும் முன்னேற வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் பொறுப்பு அரசாங்கம் என்று பழி போடுவதை விடுத்து—கட்சி வித்தியாசங்களை மறந்து பின்தங்கிய மக்களை வறுமையிலிருந்து விடுபடச் செய்வதே நமது கடமை'' என்று குறிப்பிட்டார்.

பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திரு ஏ. ஆர். பெருமாள் பேசுகையில்—''வாணிகம்நடத்த இந்தியா வந்த வெள்ளையர்கள் நாடு பிடிக்கத் தொடங்கினர்கள். அப்படியும் ஒரு மாதத்தில்-ஓர் ஆண்டில் அவர்களால் இந்தியாவைப் பிடிக்க முடியவில்லை. 90 ஆண்டுகள் கழித்துத்தான் இந்தியாவைப் பிடித்தார்கள். வாளுக்கு வாள் என்று போரிட்ட நிலைமாறி அகிம்சை முறையில் போரிடச் சொன்னுர் காந்தியார். சுதந்தரம் வந்தது, வந்த சுதந்தரம்—பின்தங்கிய மக்களையும் வாழ்விக்கும் சுதந்ரமாக இருக்க வேண்டும் என்று பாரதியார் பாடினர். அவரது கனவை நனவாக்கிட நாம் அனைவரும் பாடுபட வேண்டும்'' என்ருர்.

மேலவை சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு சா. கணேசன் பேசியதாவது :

''உலகத்திற்கு ஒரு புதுமையாக எம்மான் காந்தி காட்டிய போர்முறை—அகிம்சா முறை. அந்த முறை தந்த வெற்றியே சுதந்தரம். நாம் முழுமையான செழுமைப் பெற்றிருக்கின்ருேமா?—என்று நம்மை நாமே கோபித்துக் கேட்டுக் கொண்டு முன்னேற வேண்டும்''.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு கே. டி. கே. தங்கமணி பேசியதாவது: ''இந்தியச் சுதந்தரத்திற்காக சிங்காரவேலர், திரு வி. க. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரும் பாடுபட்டனர்.

''அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் நமக்கு நான்கு சுதந்தரங்கள் வேண்டும் என்ருர். பயத்திலிருந்து விடுதலை—வெறுப்பிலிருந்து விடுதலை—வறுமையிலிருந்து விடுதலை—சுரண்டலிலிருந்து விடுதலை! அத்தகைய விடுதலை பெற்ற நாடாக இந்தியா விளங்க வேண்டும்''.

மேலவை ஐக்கிய கட்சித் தலைவர் திரு ஏ. ஆர். தாமோதரன் பேசியதாவது :—

'' நாம் நமது சுதந்திரத்தைப் புதுமையான — வன்முறையற்ற வழியில் பெற்ருேம். இந்தியா



ஒன்றுதான் மக்கள் ஜனநாயக முறையில் ஆட்சி செய்யும் பெருமை பெற்ற நாடு. அந்தப் பெருமை என்றும் நிலைக்க நாம் பாடுபடுவோமாக !''.

மேலவை உறுப்பினர் குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசியதாவது :

''இந்தச் சுதந்தர நாள் வெள்ளி விழா எல்லாருக்குமுரிய விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும்— என்ற நோக்கத்தோடு தமிழக முதல்வர் நன்முயற்சி எடுத்தது பாராட்டத்தக்கது. 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனப் பாடிய பாரதி சாதிசமய வேறுபாடுகளை மறக்க வேண்டும் என்பதற்காக எல்லாரும் ஓர் குலம் எனவும் பாடினர். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும் என்பதற்காக எல்லாரும் ஓர் நிலை என்றும் பாடினர். அத்தகைய நிலை எய்திட நாம் முன்னேறிட வேண்டும்''.

மேலவை ஸ்தாபனக் காங்கிரஸ் தலைவர் கே. இராசாராம் நாயுடு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

**'ஆராய்ச்சி மணி'**

படக்கதை

அடுத்த இதழில்

இடம் பெறும்

''1947-ஆம் ஆண்டு விடுதலை விழாக்கொண்டாடப்பட்டபோது அதைப் பார்த்து மகிழ்ந்தவன் நான். வெள்ளி விழாவின் போது, இருப்போம் என்ற நினைவு எங்களுக்குச் சுதந்தரப் போராட்டக் காலத்தில் இருந்ததில்லை. ஆனால் கோலாகலமாகக் கொண்டாடப்படும் வெள்ளி விழாவைக் காணும் பேறு கிடைக்கப் பெற்றதற்காக நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்''.

முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் வகாப் பேசியதாவது :—

''இந்து முஸ்லீம் ஒற்றுமை வேண்டும் என்று பாடுபட்டார் காந்தியார், அவரது கனவைத் தென்னகத்தில் நிறைவேற்றியவர் அண்ணா. அந்த அண்ணா சகாப்தம் தகர்ந்து விடாமல் பாதுகாப்பவர் கலைஞர் அவர்கள்.''

மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் பேசியதாவது.

''1947-ஆம் ஆண்டு சுதந்தர நாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட போது அதனைப் பார்த்துப் பூரித்தவன் நான். இன்று அதே காட்சி—அதே மக்கள் வெள்ளம்.

''இது எதனைக் காட்டுகிறது? இங்கே மாநில அரசில் வேறு ஒரு கட்சி ஆட்சியிலிருந்தாலும், நாங்கள் ஒதுங்கி வாழ விரும்வில்லை. மத்திய அரசு ஒதுங்கிச் செல்லவும் விட மாட்டோம் என்பதைத்தான்.

''இங்கே தேச பக்திக்குக் குறைவில்லை; எங்கள் தேச பக்தியில் மாசில்லை; மருவில்லை. இந்திய ஒருமைப்பாட்டில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்பதற்குச் சாட்சிதான் இந்த அரசு நடத்தும் இந்த விழா.


91 நாட்கள் 4¾%

6 மாதங்கள் 5¼%

12 மாதங்கள் 6¼%

2 வருடங்கள் 6¾%

3 வருடங்கள் 7¼%

5 வருடங்கள் 7½%

தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்வது மிகவும் சிறந்தது. எங்கள் வட்டி விகிதங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதென்பதுடன் உங்களுக்கு அதிக வருமானத்தையும் தருகிறது. ரூ. 3,000 வரை உள்ள வட்டிக்கு வருமான வரி கிடையாது. எங்கள் வங்கியில் செலுத்தும் முதலீடுகள் விவசாயிகளுக்கு விதைகள், உரம் முதலியவைகள் வாங்க உபயோகப்படுவதால் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

½% கூடுதல் வட்டி, மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு தரப்படும்.

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

இதர விவரங்களை எங்கள் கிளை அலுவலகங்களிடமிருந்து பெறலாம்.

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.
போன் : 20367, 20368, 20369. தந்தி : ''அர்பாங்க்''
டெலக்ஸ் எண் : MS 7225.

தலைவர்: ஆர். கனகசபை. செயலர்: பி. என். டி. சாரி.








"எங்கள் தமிழ் - ஊருடன் கூடி வாழ் என்றுதான் போதித்திருக்கிறது. 'யாது ஊரே; யாவரும் கேளிர்'- எனும் பொன்மொழிதான் எங்களுக்குப் போதிக்கப்பட்டது.

ஆகவே, இந்தச் சுதந்தரத்தைக் காக்க நாங்கள் பாடுபடுவோம்''

மத்திய அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் பேசியதாவது!—

''விடுதலைநாள் 25-வது ஆண்டு விழாவின் போது தமிழகத்தில் இருப்பது பெரும்பேறு என நான் கருதுகிறேன்.

"அறிவுக் களஞ்சியமான திருக்குறள் தந்த நாடு-தமிழ்நாடு. எண்ணற்ற சுதந்தரப் போர்த் தியாகிகளைத் தந்த நாடு-தமிழ்நாடு. இங்கே நான் மக்கள் கடலைக் காண்கிறேன். இந்திய நாடே தமிழகத்தில் புகுந்து விட்டதோ என அஞ்சுகிறேன். இந்தியா என்பது இமாலயத்திலிருந்து இந்தியக் கடல்வரை -அரபிக் கடலிலிருந்து வங்கக் கடல் வரை பரந்திருப்பது.

"தமிழர்களையும்-மலையாளிகளையும், ஆந்திரர்களையும், உத்திரப் பிரதேசத்தாரையும் உள்ளடக்கியிருப்பது இந்தியா. ஆகவே, தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பாகம். இந்தியா என்பது தமிழ் நாட்டினை உள்ளடக்கமாகக் கொண்டது. முழுமை என்பது பகுதிகள் சேர்ந்ததுதான். பகுதிகள் இல்லாமல் முழுமை இல்லை.

"மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் தரத்தைத் தர நாம்ஒன்று கூடிப் போராட வேண்டும். இந்தியாவின் ஒரு பகுதி வறுமையுற்றிருந்தால் இந்தியாவிற்கு அது பெருமை இல்லை. வளர்ச்சி ஒரே சீராக இருக்க வேண்டும். இந்தியா என்பது ஒரு தனிப்பட்ட கட்சிக்குச் சொந்தமானதல்ல; எல்லா மக்களுக்கும் சொந்தமானது.

"இப்போது நம்முன் நிற்கும் கொள்கை-சோசலிசப் பயணத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே. சாதியுள்ள நாட்டில் ஜனநாயகம் வெற்றி பெறாது. சமூக ஏற்றத் தாழ்வும்-வர்த்தக ஏற்றத் தாழ்வும் புரையோடிப் போன நாட்டில் சோசலிசம் வெற்றி பெறாது. சாதிக் கொடுமையை எதிர்த்துக் காந்தியார் பாடுபட்டார். இங்கே அதே கொள்கைக்குப் பாடுபட்ட-சமுதாய சீர்திருத்த வீரர்கள் பலர் உள்ளனர். பெரியார் இராமசாமி, மதிப்பிற்குரிய அண்ணா ஆகியோர் அந்த வீரர்கள்.

"இந்தச்சாதிக் கொடுமையை அழிக்கப் பாடுபட்ட சமுதாய வீரரான அண்ணா அவர்களின் வீரப் போர்த்தளபதி கருணாநிதி.

"அவர் தமது போரில்வெற்றிகரமான சாதனைகளைப் புரிந்து விரைவில் சாதியை ஒழித்த பெருமையைப் பெற வேண்டுகிறேன்.

ஒரு மாநில அரசு நடத்தும் விழாவில் மத்திய அரசின் அமைச்சரை முதலமைச்சர் கருணாநிதி அழைத்தது - அவரது பெருந்தன்மையைக்காட்டுகிறது.

"மாநிலத் தலை நகரில் விடுதலை நாள் விழாவில் பிரதமர் கலந்து கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் கூறிய யோசனை அடிப்படையான உறவை வளர்க்கும் யோசனை என்று நான் தனிப்பட்டமுறையில் கருதுகிறேன். இந்த யோசனையை நான் பிரதமரிடம் கூறுவேன். அவரும் இதுபற்றிப் பரிவுடன் பரிசீலிப்பார் என்று நம்புகிறேன்.''

> **வெண்பாப் போட்டி-42**
>
> 'பண்' எனத் தொடங்கிப்
> 'பாட்டு' என முடிக்க.
>
> இறுதி நாள் : 16-9-72
>
> ஏனையவை வழக்கம்போல்

தலைமை வகித்த முதல்வர் கலைஞர் அவர்கள் தமது முடிப்புரையில் குறிப்பிட்டதாவது:—

''இங்குப் பேசிய தலைவர்களெல்லாம் நல்ல அறிவுரைகளைத் தந்திருக்கிறார்கள். சுதந்தரத்திற்குப் பிறகு நாம் செய்து முடிக்க வேண்டிய வேலைகளைச் செய்யாமல் தயக்கம் காட்டியிருக்கிறோம் என்கின்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் சொன்னார்கள். அந்தக் குற்றச் சாட்டுகள் யாரையும் நோக்கி வீசப்பட்டவைகளல்ல; நமக்கு நாமே வீசிக் கொண்ட குற்றச்சாட்டுகள். ஆகவே எல்லாக் குற்றங்களுக்குமே நாமனைவரும் பொறுப்பாளிகள் என்கின்ற உணர்வோடு அந்தக் குற்றங்களைக் களைய எதிர்காலத்திலே அனைவரும் சேர்ந்து சபதமெடுத்துக் கொள்வோம்.''

''உயர்ந்தவன் - தாழ்ந்தவன் இல்லை; சாதிப் பிரிவுகள் இல்லை; வகுப்புவாத எண்ணங்களில்லை; மதவேறுபாடுகள் இல்லை. ஆண்டவனின் பெயரால் - இதிகாசங்களின் பெயரால் - புராணங்களின் பெயரால் - எதன் பெயராலும் மக்களை ஏமாற்றுகின்றவர்கள் இல்லை என்கின்ற புதிய உலகத்தை-புதிய நாட்டை புதிய தேசத்தை உருவாக்குவதற்கு - புதிய எழுச்சி பெறுகின்ற நாளாக இந்த நாளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

இந்த உரைக்குப் பின்னர், மெல்லிசை மன்னரின் இசை விருந்து நடைபெற்றது. அதன் பிறகு, வாண வேடிக்கைகள் சென்னை நகரத்தையே ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

நகரத்தில் காணப்பட்ட ஒளியமைப்புகளும் - ஆர்வமிக்க, மக்கட் கூட்டமும் - நாடு இந்த ஆகஸ்ட் 15-ல் தான் விடுதலை பெற்றதோ என்று எண்ணுகின்ற அளவுக்கு, மகிழ்ச்சி வெள்ளத்தை உருவாக்கி விட்டன.

நெஞ்சில் நிறைந்த இந்தக் காட்சிகளை நாம் என்றும் மறக்க முடியாது.

# கப்பலோட்டிய தமிழனின் கனித் தமிழ்த் தொண்டு!



"கப்பலோட்டிய தமிழன்' என்றும், 'செக்கிழுத்த செம்மல்' என்றும் இன்று பாராட்டப் பெறுகிற வ.உ. சிதம்பரனார் அவர்கள் வெறும் அரசியல் வாதியாக மட்டுமன்றித் தமிழ் இலக்கிய உலகிற்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

வ.உ. சிதம்பரனார் இளமைக் காலந் தொட்டே தமிழ் நூல்களைப் படிப்பதில் பேரார்வம் காட்டினர். அவர் அரசியலில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்துச் சொல்லொணுத் துயருற்ற காலத்திலும் அவர் எழுதுகிற கடிதங்களில் தமிழ் மணக்கும்; பல கவிதை மலர்கள் பூத்து மணம் பரப்பும். வெண்பாக்களையும், அகவற்பாக்களையும் விரைந்து பாடுவார்.

வ.உ. சிதம்பரனார் சென்னையில் இருந்த போதும், கோவில் பட்டியில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த போதும் பல பழம் ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சில பழைய தமிழ்நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வாறு தமிழ் நூல்களைப் பதிப்பித்ததோடு ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துத் தாய்த் தமிழகத்திற்குத் தந்துள்ளார்.

அரசியல் வரலாற்றில்—குறிப்பாக விடுதலை வரலாற்றில் வ.உ. சிதம்பரனர்க்கு உள்ள தனிப் பெருமை, தமிழ் இலக்கியத் துறையிலும், தமிழ் இலக்கிய வளர்ச்சி வரலாற்றிலும் உண்டு என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் தந்து சென்றுள்ள அவரது 'செல்வக் குழந்தைகள்'—ஆம் இலக்கியச் செல்வங்கள் என்றும் நின்று அவரது ஈடிலாப் புகழை இசைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய அவரது இலக்கியப் பணியை, அப்பெரியாருக்கு நூற்றுண்டு விழாக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் நினைந்து பார்ப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு அன்று முதல் இன்று வரை உரை எழுதித் தந்துள்ளவர்கள் பலர். அவர்களுள் இளம்பூரணர், நச்சினர்க்கினியர், சேனுவரையர், பேராசிரியர், தெய்வச் சிலையார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் இளம்பூரணர் என்பார் காலத்தால் பேராசிரியருக்கு முற்பட்டவர். கி. பி. 9 அல்லது 10-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறர். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்கட்கு இவர் எழுதிய உரையை 1928-ல் அச்சிட்டு உதவிய பெருமை வ.உ. சிதம்பரனர் அவர்கட்குண்டு.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் திருக்குறளும் ஒன்று; எனினும் திருக்குறள், தமிழில் எழுந்த உலகப் பெருநூலாக மட்டுமன்றி, உலகப் பொது நூலாகவே போற்றப்படுகிறது. அத்தகைய திருக்குறளுக்கு அந்நாளில் உரையெழுதிய பதின் மருள் சிறந்தஉரையாசிரியராகப் பலரால் கருதப்படுகிற பரிமேலழகரையும் விடக் காலத்தால் சற்று முற்பட்டவர் மணக்குடவர். இவரது உரையே பரிமேலழகர் உரைக்கும் முற்பட்ட உரையாகும். இந்த உரையை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை வ.உ. சிதம்பரனர் அவர்களையே சாரும். மேலும், திருக்குறள் படிக்காத தமிழன், தமிழனல்ல என்று கருதிய சிதம்பரனர் 1935-ல் தம் அறத்துப் பால் ஆராய்ச்சியை வெளியிட்டார்.

திருக்குறள் பாயிரத்தில் காணப்படுகிற 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' ஆகிய மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்பது சிதம்பரனர் கருத்து.

'இன்னிலை' என்பதும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகும். பொய்கையாரால் இயற்றப்பட்ட இந் நூலையும் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் வ.உ. சிதம்பரனர் அவர்களே யாவர்.

### சிவஞான போதம்

சிதம்பரனர் சைவ சித்தாந்தத்தில் அழுத்தமான ஈடுபாடு கொண்டவர். சித்தாந்த வரிகளின் மூல நூலாக—மூல மந்திரமாகக் கருதப்படுகிற இந்நூலுக்கும் சிதம்பரனர் ஒரு நயமான உரை எழுதியிருக்கிறர்.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்ததோடன்றிப் பிற நாட்டு இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்துத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமையும் வ.உ. சிதம்பரனர் அவர்களுக்கு உண்டு.

ஆங்கில நூலாசிரியரான ஜேம்ஸ் ஆலன், சிறந்த ஒழுக்க நூலாசிரியராகப் பாராட்டப் பெறுபவர். அவரது சீரிய சிந்தனைகள் தமிழ் மக்களிடையே பரவவேண்டும் என்று பெரிதும் விரும்பினர். அவ்விழைவின் விளைவே, 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' ஆகிய நூல்கள்.

'மனம் போல வாழ்வு'—மனத்தின் தன்மையைத் தெளிவு படுத்துகிறது; அந்த மனத்தை மாசற்றதாக—தூய்மையுடையதாக வைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.





'அகமே புறம்'—என்பது இப்போதும் எப்போதும் இங்கும் எங்கும் நமது உயிர் வாழ்வு நிலை பேறடைவதற்கான வழி முறைகளை வகுத்துக் கொடுத்துரைப்பது ; அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு ஒரு விரிவான விளக்கமாகத் திகழ்வது.

'வலிமைக்கு மார்க்கம்'—என்பது உடலும் உள்ளமும் சோம்பி நலிந்து வாழ்வோர், வலியுடையராக ஆதற்குரிய உடற் பயிற்சி, உளப் பயிற்சி ஆகிய இரண்டினையும் தெளிவான முறையில் சித்திரித்துக் காட்டுகிறது.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்தும், பிற நாட்டு நல்லறிஞரின் சிந்தனைச் செல்வத்தைத் தமிழ்ப் பெருமக்கள் கற்றுத் தேர்ந்து தெளிய வழி செய்தும், இலக்கியப் பணியாற்றிய வ.உ. சிதம்பரனார் அவர்கள் புது நூல்கள் பல இயற்றியும் உதவியிருக்கிறார்கள்.

அவையாவன :—

மெய்யறிவு :— அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அடைதற்கான வழி வகைகளையும் உவமைகளோடு சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவது. பல்வேறு நீதி நூல்களின் பிழிவென விளங்குவது இந்நூல்.

மெய்யறம் :—திருக் குறளின் வழிநூல் எனத்தகும் இந்நூலில் மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தண இயல், மெய்யியல் என்னும் ஐந்தியல்கள் உள்ளன. சிதம்பரனார் கண்ணனூர்ச் சிறையில் இருந்த போது எழுதப்பட்ட இந்நூலில் கைம்மை மணத்தை ஆதரிக்கிறார்.

**வள்ளியம்மை சரித்திரம்:**—இது வ.உ. சிதம்பரனார் அவர்களின் முதல் துணைவியாரின் வரலாறு. இது, செய்யுள் வடிவானது. ஆடவர் தம் வாழ்க்கைத் துணைவியாரிடத்தும், உற்றாரிடத்தும், மற்றவர்களிடத்தும் பின்பற்ற வேண்டிய முறைகளையெல்லாம் எழிலுற விளக்கும் அறிவு நூலாகும்.

**என் பாடல் திரட்டு** :—பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு காலகட்டங்களில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் இயற்றிய நூறு பாக்களைக் கொண்ட தொகுப்பு இது. மக்கள் அனைவர்க்கும் பொதுவான ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தத் தக்க பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்போர்க்கு விருந்தாகிப் பயன் தரத்தக்கது.

**சொற்பொழிவு நூல்** :—*1927*-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் வ. உ. சிதம்பரனார் அவர்கள் ஆற்றிய பேருரையே இந்நூல். இந்நூலில் தன் ஆட்சி என்றாலென்ன, அதனை அடைவதற்குரிய வழிகள் யாவை, என்பவையெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**தற்சரிதை:**—வ. உ. சிதம்பரனார் அவர்களின் 'தற்சரிதை'யாக விளங்கும் இந்நூல் முற்றும் அகற்பாவால் ஆனது. சிதம்பரனார் சிறைக் கோட்டத்தில் இருந்த போது, 'லோகோபகாரி' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் வேண்டுகோட்கிணங்க இந்தத் 'தற்சரிதை' எழுதப்பட்டது. நூலின் பிற்பகுதி, சிதம்பரனார் அவர்கள் சிறைக் கோட்டத்தினின்றும் வெளிவந்த பின் இயற்றி இணைக்கப்பட்டது.




சிதம்பரனார் 'விவேக பானு' என்னும் பெயரில் திங்கள் இதழ் ஒன்றை நடத்தினார்.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில், வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறந்த பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், தத்துவ ஞான வித்தராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கி ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். அவருடைய நூற்றாண்டு விழாவில், அவரது தமிழ்த் தொண்டினை மனத்தகத்தே எண்ணி மகிழ்ந்து பாராட்டுவோமாக.

பழ

---

## சிந்தனைசெய் நெஞ்சே !

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டூழி விளங்குகவே—வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



தமிழ்நாடு அரசின்
சாதனைகளுக்குச்
சான்றுதரும் பட்டயம்!
அரசின் ஆக்கப்பணிகளை
அழகுறக் காட்டிடும்
கேடயம்!
தமிழரசு
திங்களிருமுறை இதழ்
செப்டம்பர் 16 உ முதல் புதியபொலிவுடன்
கருத்துக் கருவூலமாக
பாதுகாக்கவேண்டிய பெட்டகமாக வெளிவரும்!
புதிய புதிய பகுதிகள்! புத்தம் புதிய செய்திகள்!!
இன்றே உங்கள் பிரதிக்துப் பதிவுசெய்க!
64 பக்கங்கள்
விலை 40 காசு
செப்டம்பர் 16 உ இதழிலிருந்து ஒப்பந்தப்புள்ளி-
குத்தகை விளம்பரங்கள் தமிழரசு
இதழில் இடம்பெற மாட்டா!

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

வினா: எங்கள் குழு உறுப்பினர்கள் எல்லாரும் 'தமிழரசு' இதழை மிகவும் விரும்பிப் படிக்கிறார்கள். அதில் விவசாயக் கேள்வி பதில்கள் மிகவும் நன்றாக உள்ளது. எனவே, எங்கள் சந்தேகங்கள் சிலவற்றிற்குப் பதில் கூறவும். நெற்பயிருக்கு வரும் 'காம்பு அழுகல்' நோய் (Sheath rot), 'தண்டு அழுகல்' நோய் (Stem rot) ஆகியவை எதனால் வருகிறது? அவை வராமல் இருக்க எந்த மருந்து அடிக்க வேண்டும்?

—பி. எஸ். சங்கரநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
ரமண சமுத்திரம்,
நெல்லை மாவட்டம்.

விடை: நெற்பயிரில் காம்பு அழுகல் நோய் என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளது இலைப்புள்ளி நோயையே என்று கருதுகிறோம். நேரடியாகப் பயிரைப் பார்க்காமல் திட்டவட்டமாக இன்ன நோய் என்று கூறுதல் நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று கூற முடியாது. ஏனெனில் காம்பு அழுகல் நோய் என்பது ஒரு தனிப்பட்ட நோயல்ல.

''ஹெல்மின் தோஸ்போரியம் ஒரைசே'' என்னும் பூசணம் தாக்கும் போதுதான், நெற்பயிரின் தோகைகளும், காம்புகளும் அழுகிவிடுகின்றன. இந்நோய் தாக்கினால் நெற்பயிரின் தோகைகளிலும், காம்புகளிலும் நீண்ட செங்கல் வடிவப் பழுப்பு நிறப் புள்ளிகள் முதலில் காணப்படும். நோய் கடுமையாகத் தாக்கும் பொழுது நெற்பயிரின் தோகைகளும், காம்புகளும் அழுகிவிடும். கதிரின் கழுத்தும், கதிரிலுள்ள மணிகளும் தாக்கப்படும். கதிர் முழுவதுமோ, அல்லது ஒரு பகுதியோ சாவியாகி விடக்கூடும். இந்நோய் விதைகளின் மூலம் பரவுகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்த, முன்னெச்சரிக்கையாக விதை நெல்லுடன் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' போன்ற மருந்துகளை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் கலந்து, நாற்றுவிட வேண்டும். இந்நோய் பயிரில் காணப்படின், 1 கிலோ தாமிரப் பூசணக் கொல்லி மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து, 15 நாட்களுக்கொரு முறை வீதம் 2 முறை தெளித்தல் நல்லது. ஐ. ஆர். ரகங்களெனில் தாமிரப் பூசணக் கொல்லி தெளிக்கக் கூடாது. 'டைத்தியோ கார்பமேட்' மருந்துகளையே தெளிக்க வேண்டும்.

'தண்டு அழுகல்' நோய் என்பது ''ஸ்கிளிரோசியம் ஒரைசே'' என்னும் பூசணத்தால் ஏற்படுகிறது. இந்நோய் பொதுவாக வடிகால் வசதியற்ற இடங்களில்தான் தோன்றுகிறது. இந்நோய் தாக்கிய நெற்பயிரின் அடிப்பகுதியில் பச்சையான சிம்புகள் வெளிவரும்; தண்டின் கீழ்ப்பகுதி அழுகியிருக்கும். அழுகிய தண்டு ஒடிந்து சாய்ந்து விடும்; கதிர்கள் அரைகுறையாக விளைந்திருக்கும். அழுகிய தண்டைப்பிரித்துப் பார்த்தால் அதில் கடுமையான பூசணக் கொத்துகளைக் காணலாம். பூசண விதைகள் பளபளப்பான புள்ளிகளாகத் தோன்றும். இந்நோய் நிலத்தின் மூலமும், பாசன நீரின் மூலமும் பரவுகிறது.

முன்னெச்சரிக்கையாக இந்நோயைத் தடுக்கப் பழைய நெற்கட்டைகளை எரித்து விட வேண்டும். இந்நோய் உள்ள நிலத்தில் அதிகமாக நீர் விடாமல், காய விட்டு நீர்விட வேண்டும். இந்நோய் உள்ள நிலத்திலிருந்து, அடுத்த நிலத்திற்கு நீர் செல்லாமல் பாதுகாக்க வேண்டும்.

இந்நோய் தாக்கிய நிலத்தில் திட்டுத் திட்டாகப் பயிர்கள் தீய்ந்து, அழிந்து காணப்படும். தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த வயலில் உள்ள நீரை வடித்து விட்டு, 500 கிராம் நீரில் கரையும் செரசான் மருந்தை 500 லிட்டர் நீரில் கலந்து, நெற்பயிரின் அடியில் படும்படியாக 3 வார இடைவெளியில், 3 முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இந்நோய்கள் உங்கள் நெற்பயிரில் தாக்கியுள்ளது என்று கருதினால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் தாக்கப்பட்ட நெற்பயிரைக் காட்டி, நோயை உறுதி செய்துகொண்டு, மருந்து தெளிப்பதே சிறந்தது.

* * *

வினா: 'பொன்னி' என்ற நெல்லை எந்தப் பருவத்தில் பயிரிடலாம்? நன்செய் நிலத்திலா? அல்லது புன்செய் நிலத்திலா? எந்தச் சமயம் உரமிட வேண்டும்? எந்தச்சமயம் மருந்து தெளிக்க வேண்டும்? இதன் வயது, மகசூல் என்ன என்பதை''ம் விளக்கமாகத் தெரிவிக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—கே. எஸ். பூபதி,
கட்டமுத்துப்பாளையம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை: 'பொன்னி' என்ற நெல் ரகம் தாளடியில் முன் பட்டத்திற்கு ஏற்றது. நன்செய் நிலத்திற்கு ஏற்றது. இந்த ரகத்தைப் புரட்டாசி 24-ஆம் தேதிக்குள் (அக்டோபர் 10-ஆம் தேதிக்குள்) நாற்று விட வேண்டும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 35 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 30 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளைக் கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும். விதைத்த 50-வது நாளிலும், 80-வது நாளிலும் ஆக இருமுறை ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை மேலுரமாகத் தெளிக்க வேண்டும்.

விதைத்த 50-வது நாள் மேலுரமிட்ட பின்பும், 72-வது நாளும், 93-வது நாளும் ஆக 3 முறை மருந்து தெளித்தல் வேண்டும்.

'பொன்னி'யின் வயது 140 நாட்கள். இந்த ரகம் ஏக்கருக்குக் குறைந்தது 2 டன் மகசூல் கொடுக்கவல்லது.

**வினா:** என் வீட்டு மச்சில் போட்டு வைத்திருக்கும் நெல்லில் 'அந்து' என்ற வெள்ளை நிறமுள்ள கொசு போன்ற பூச்சிகள் நிறைய மொய்த்து நெல்லைச் சேதப்படுத்துகின்றன. இவற்றிலிருந்து நெல்லைப் பாதுகாக்க ஒருவழி கூறுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

—மீ. கிருஷ்ணசாமி,
அன்னவாசல் (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.

**விடை:** தங்கள் வீட்டு மச்சில் இருக்கும் நெல்லை எடுத்துத் தூய்மைப் படுத்தி, வெய்யிலில் காய வைக்க வேண்டும். இவ்வாறு காயவைக்கும் பொழுது, அந்தப் பூச்சிகள் இருட்டான இடத்தை நோக்கிப் பறந்து விடும் அல்லது வெய்யிலில் இறந்து விடக்கூடும். தங்கள் வீட்டு மச்சிலை நன்கு தூய்மைப் படுத்திய பின், அந்துப் பூச்சிகள் நீங்கிய நெல்லை மச்சில் நிரப்ப வேண்டும். மச்சின் வாயிலை நன்கு மூடி, வாய்ப்பகுதியில் பி.எச்.சி.5 சதம் அல்லது டி.டி.டீ. 10 சதம் தூளை இலேசாகத் தூவுதல் நல்லது.

தாங்கள் விதைக்காக நெல்லைச் சேமித்து வைத்திருந்தால், 500 பங்கு நெல்லிற்கு ஒரு பங்கு டி.டி.டீ 10 சதம் அல்லது கார்பரில் 10 சதம் தூளைக்கலந்து சேமித்து வைத்தால், அத்தானியம் ஓர் ஆண்டுக் காலம் வரை பூச்சிகளால் தாக்கப்படுவதில்லை என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வருகிறது. முளைக்கும் சக்தியும் குறைவதில்லை.

உணவுக்குப் பயன்படுத்தும் நெல்லானால், இம் மருந்துகளைக் கண்டிப்பாய் பயன்படுத்த கூடாது.

'பாஸ்டாக்சின்' என்ற மருந்து வில்லைகளை உபயோகிப்பது தற்காலத்தில் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ஒரு டன் தானியத்திற்கு ஒரு வில்லை போதுமானது. ஒரு வில்லையை ஒரு சிறிய துணிப்பையில் போட்டுக்கட்டி தானியத்திற்குள் திணித்துவிட வேண்டும். மச்சின் வாயிலைக் காற்றுப் புகாமல் நன்கு மூடி விடவேண்டும். 2 நாட்கள் கழித்து மச்சு வாயிலைத் திறந்துவிட்டுக் காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும். அதன்பின் தானியங்களை எடுத்து உபயோகிப்பதில் எவ்விதத் தீங்கும் ஏற்படாது.

'பாஸ்டாக்சின்' வில்லைகள் பெற 'இராஜா நிலையம்' 12, ரேஸ் கோர்ஸ் லேன், திருச்சிராப்பள்ளி-1 என்ற முகவரியில் உள்ள பயிர்ப் பாதுகாப்பு அலுவலர் அவர்களின் உதவியை நாடலாம்.

**வினா:** முப்பது அடி ஆழமுள்ள எங்கள் கிணற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தால் மேலும் 100 அடி ஆழப்படுத்த எவ்வளவு செலவாகும்? மின்சார போரிங் செட் எங்குக் கிடைக்கும்?

—மோகன்,
மோசூர்,
அரக்கோணம்,

**விடை:** தங்கள் கிணற்றை மேலும் 100 அடி அளவில் ஆழப்படுத்த வேண்டியதில்லை. 100 அடி ஆழத்திற்கு கிணற்றில் துளை போட்டாலே, போதுமான அளவிற்குத் தண்ணீர் கிடைக்கக் கூடும். 100 அடி ஆழம் துளையிட எவ்வளவு செலவாகும் என்பதை நாங்கள் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம். ஏனெனில் தங்கள் கிணற்றின் கீழ்ப்பகுதி பாறையாக இருக்கிறதா அல்லது கல்லாக இருக்கிறதா என்பதைத் தாங்கள் தெரிவிக்கவில்லை. 100 அடி ஆழம் துளையிட 'பவர் டிரில்' பயன்படுத்துதல் நல்லது. தங்கள் கிணற்றில் 100 அடி ஆழம் துளையிட எவ்வளவு செலவாகும் என்பதை அறியவும், பவர் டிரில் வாடகைக்குப் பெறவும் கீழ்க்கண்ட அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.

உதவி வேளாண்மைப்
பொறியாளர் (பார்வை),
ஆபீசர்ஸ் லைன், வேலூர்-1.

> வேளாண்மை வினாக்களுக்கு மட்டுமல்ல-வேறு துறைகள் பற்றிய வினாக்களுக்கும் இந்தப் பகுதியில விடை கிடைக்கும்: விவகாரத்திற்கோ, பிரச்சினைக்கோ இடம் தரும் வினாக்களைக் கேட்க வேண்டாம் - அவற்றிற்கு விடை கிடைக்காது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால் தவணை முறைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட டிராக்டர்கள் பம்பு செட்டுகள்.

| ஆண்டு. | டிராக்டர்கள். | பம்பு செட்டுகள் |
|---|---|---|
| 1968–69 | 84 | 3,799 |
| 1969–70 | 104 | 5,384 |
| 1970–71 | 64 | 1,360 |
| 1971–72 | 43 | 141 |

மேற்கூறப்பட்டுள்ள அலுவலரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதே தங்களுக்கு நல்லது.

பொதுப்பணி

**வினா:** எங்களுக்குக் கொஞ்சம் சொந்த நிலம் இருக்கின்றது. அந்த நிலம் மழைக் காலத்தில் நீரோடும் ஆற்றின் பக்கத்தில் உள்ளது. மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளத்தின் காரணமாக எங்களுக்கும், எங்களைப் போன்ற ஏழைகளின் நிலமும் 30 ஏக்கர் அளவுக்குப் பாதிக்கப் படுகின்றது. நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். முன்பு 100 மீட்டர் அகலத்தில் ஆற்றில் வந்து கொண்டிருந்த தண்ணீர், இன்று 500 மீட்டர் அகலத்தில் பரவி இருக்கிறது. எங்கள் நிலம் இதனால் பாதிக்கப்படாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்யுமா? ஏழைகளின் துயர் துடைக்கும் நல்லரசு எங்களுக்குக் கரை கட்டித் தரவேண்டும். விவரம் தெரியாமல் உங்களுக்கு எழுதுகிறேன். நாங்கள் பயன்பெற விவரம் கூறவும்.

—வெ. அர்ச்சுனன்,
மினிக்கியூர்,
கோவில்பட்டி அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிட்டுள்ளது போல் உண்மையாக இருப்பின், தமிழ்நாடு அரசு தங்களுக்கு உதவ முன்வரும். ஆற்றின் வெள்ளத்தினால், பயிராகும் நிலங்கள் பாழாவதைத் தடுக்கக் கரை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். அவ்வாறு கட்டித்தர வேண்டுமானால் அரசின் 'உதவியைப் பெறப் பின்கண்ட முறையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் ஆற்று வெள்ளத்தினால் ஏற்படும் சேதம் எவ்வளவு இருக்கும் என்பதையும், இதுபோல் எத்தனை ஆண்டுகளாக ஏற்படுகிறது என்பதையும் விளக்கமாகக் குறிப்பிட்டு, இதைத் தவிர்க்க ஆற்றோரத்தில் கரை கட்டிக் கொடுக்கும்படி உங்கள் ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டு, அதை உங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பி, அங்கும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்டு இயங்கும் மாவட்ட வளர்ச்சி மன்றத்

தில் இதைப்பற்றி விவாதித்து ஆவன செய்யப்படக்கூடும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நீங்கள் இதுபற்றி மனு அனுப்பலாம். உங்கள் ஊருக்கு மனு நீதித் திட்டத்தின் கீழ், குறைகளைக் கேட்க வரும் அலுவலர்களிடமும் இதுபற்றி முறையிடலாம். இம்முயற்சிகள் எதுவும் பயனளிக்கா விட்டால், இறுதியாகப், பொதுப்பணித் துறை அமைச்சருக்கு மனு அனுப்பலாம்.

### கால்நடை

**வினா :** 'குதிரை மசால்' ('லூ சர்ன்,') என்னும் கால்நடைத் தீவனத்தின் சிறப்புகள் என்னென்ன? அதன் விதைகள் அல்லது நாற்றுகள் எங்குக் கிடைக்கும்? அதன் சாகுபடிக் குறிப்புகள் யாவை? தென்னந் தோப்புகளில் வெயில் படும் இடங்களில் குதிரை மசாலை வளர்க்கலாமா?

—பி. கோமதிநாயகம்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
புளியங்குடி,
நெல்லை மாவட்டம்.



'குதிரைமசால்' செடி

**விடை :** 'குதிரை மசால்' என்னும் கால்நடைத் தீவனத்தில் 20 சதம் புரதச் சத்து அடங்கியுள்ளது. குறிப்பாக மாடுகள் இத்தீவனத்தை மிகவும் விரும்பித் தின்கின்றன. இதைப் பச்சையாகவோ அல்லது வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தேவையான போதோ மாடுகளுக்குப் போடலாம்.

குதிரை மசால் கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாக இருப்பதுடன், காற்றிலுள்ள தழைச் சத்தை இழுத்துக் கொண்டு தானும் பயன் பெறுவதோடு, நிலவளத்தையும் பெருக்குகிறது.

குதிரை மசால் விதைகள் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய ஊர்களில் உள்ள கடைகளில் கிடைக்கின்றன. கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களாலும் ஒரு சில இடங்களில் இதன் விதைகள் வழங்கப்படுகின்றன.

### சாகுபடிக் குறிப்புகள்.

செஞ்சரளை மண் அல்லாத மற்றெல்லா மண்களிலும் குதிரை மசாலைத் தோட்டக்கால் பயிராகப் பயிரிடலாம். ஆனல் வடிகால் வசதியற்ற நிலங்களிலும், களர்-உவர் நிலங்களிலும் இது நன்கு வளராது.

நிலத்தை நன்கு உழுது கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிட்டு, நிலத்தைச் சிறு சிறு பாத்திகளாக அமைத்துக்கொள்ள வேண்டும். பாத்திகளில் கூரிய குச்சியால் 9 அங்குல இடைவெளிக்கு ஒரு கோடு வீதம் ஏற்படுத்த வேண்டும். கோட்டின் கீறலில் குதிரை மசால் விதைகளை விதைத்து, மண்ணைத் தள்ளி, மூட வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 3½ முதல் 4½ கிலோ விதை தேவைப்படும். அடைமழை பெய்யும் அக்டோபர், நவம்பர் மாதங்கள் தவிர மற்ற எல்லா மாதங்களிலும் இதை விதைக்கலாம்,

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால் விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்கள்.

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1969–70 | 761 |
| 1970–71 | 760 |
| 1971–72 | 779 |

விதைத்த உடன் தண்ணீர் கட்ட வேண்டும். 3 அல்லது 4 நாட்களுக்குப் பிறகு 2-வது முறை தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து தவருமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

களைகளை எடுத்துக் குதிரை மசால் பயிரிட்டுள்ள வயலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். விதைத்த 6 அல்லது 7-வது வாரத்தில் குதிரை மசால் செடிகள் அறுப்பதற்குத் தகுந்த அளவில் வளர்ந்து விடும். மேல் பகுதியை மட்டும் அறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அடிக்கட்டைகளில் புதிதாகத் துளிர்த்து மறுபடியும் செடிகள் வளரும். 6 வாரத்தில் மீண்டும் அறுக்கலாம். குதிரை மசால் செடிகளை ஓர் ஆண்டில் 8 அல்லது 10 முறை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் ஓர் ஆண்டில் 30,000 கிலோ பசுந்தீவனம் கிடைக்கும். இதைக் காயவைத்தால் 12,000 கிலோ உலர்ந்த தீவனம் கிடைக்கும்.

ஒரு தடவை விதைத்து முளைத்த குதிரை மசால் பயிரை, 4 ஆண்டுகள் வரை வளர்க்கலாம். ஆண்டிற்கொரு முறை ஏக்கருக்கு 50 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரமிட்டால் தொடர்ந்து நல்ல தீவன மகசூல் கிடைக்கும். இப்பயிருக்குத் தழைச்சத்து உரமிட வேண்டிய அவசியமில்லை.

குதிரை மசால் விதை எடுக்க விரும்பினல் செடிகளை அறுக்காமல் விட்டுப் பூத்துக் காய்த்து முற்றவிட வேண்டும். நெற்றுகள் மஞ்சள் நிறமாக மாறும் பொழுது, செடிகளை அறுத்துக் காயவைத்து, அடித்து, விதைகளைச் சேகரிக்க வேண்டும்.

மாடொன்றுக்கு 4 கிலோ பச்சைத் தீவனம் அல்லது 2 கிலோ உலர்ந்த தீவனம் கொடுத்தால் போதுமானது.

தென்னந் தோப்புகளில் வெய்யில் நன்ருகப்படும் இடங்களில் குதிரை மசால் வளர்க்கலாம்.

—ஆர். எம்.

# விரைந்து பணியாற்றும்

''பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க
வழியுண்டு ;
உழக்குத்தான் மிச்சமென்ற
இருட்டுநிலை
கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்துவிடும்.''

என்று முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியதைப் பின்பற்றித் தமிழ்நாட்டுஉழவர்பெருமக்களிடையே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் புதிய முறைகளையும் புதிய இயந்திரச் சாதனங்களையும் பரப்பி, ''மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை'' என்ற நிலைக்கு உழவர்களை உயர்த்தி வருகிறது தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்.

தமிழ்நாட்டு வேளாண்மையில் பல்வேறு வியத்தகு சாதனைகள் ஏற்பட்டுள்ளது போலவே, சென்னை கிண்டியில் உள்ள தொழிற்பேட்டைக்கு அருகில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமும் குறுகிய காலத்திலேயே வியத்தகு சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் நோக்கம், செயல்முறை, எதிர்காலத் திட்டம் ஆகியவைகளைப் பற்றித் ''தமிழரசு'' இதழ் மூலம் விரிவாகத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத் தலைவர் திரு கே. வி. சுப்பையா, பி.ஏ., எம்.எல்.ஏ. அவர்களைச் சந்தித்தோம்.

சந்திப்பின் போது தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு இராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., அவர்களும் உடனிருந்து உதவியதுடன், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் பல்வேறு பணிகளைப் பற்றியும் குறிப்பிட்டார். ''தமிழரசு'' இதழின் உதவி ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகத் தலைவர் அளித்த பதில்களைத் தொகுத்துத் தந்துள்ளோம்.

உதவி ஆசிரியர் : வேளாண்மைத் தொழிற் கழகம் துவக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

தலைவர் : முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முறையே வேளாண்மை, தொழில்வளம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றிய அனுபவத்திலிருந்து, நம் நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மை ஆதலாலும், நமது மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வேளாண்மையை நம்பி வாழ்பவர்கள் ஆதலாலும், நாடு சிறக்கவும், மக்கள் நலமடையவும் வேளாண்மை வளர்ச்சி சீரிய முறையில் முன்னேற வேண்டும் என்று 'பசுமைப் புரட்சி'யினைத் தோற்றுவிக்க அரசு முனைந்தது.

இதை அடுத்து உழவு தொழில் வளர்ச்சிக்கும், மற்றும் வேளாண்மையைச் சார்ந்த தொழில்கள் வளரவும், அதன் மூலம் நாட்டில் 'பசுமைப் புரட்சி' வெற்றி அடையவும் பலவகையான புதிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

அவற்றுள் முதலிடம் வகிப்பது வேளாண்மைத் தொழிற் கழகம் ஆகும். ஒவ்வொரு மாநிலத்திலும் வேளாண்மைத் தொழிற் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் உழவுத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத நவீன இயந்திரக் கருவிகளை உழவர்களுக்கு வழங்கவும், உழவுத் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், கால்நடை அபிவிருத்தி, கோழிப்பண்ணை, மீன்வளப் பெருக்கம் ஆகியவற்றில் புதுமைகளைப் புகுத்தவும் 1968 முதல் செயல்பட்டு வருகிறது.

உ. ஆ. : இக் கழகம் எப்பொழுது துவக்கப்பட்டது?

த. : 1966, ஜூலை 5-ஆம் நாள் நிறுவன ரீதியில் இக்கழகம் அமைக்கப்பட்ட போதிலும், 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் செயலாற்றி வருகிறது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற் கழகத்திற்கு நிதி எவ்வாறு கிடைக்கிறது?

த. : இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 4 கோடியாகும்.

அதில் செலுத்தப்பட்ட மூலதனமாகிய ரூபாய் 3.30 கோடி தொகையை மாநில, மைய அரசுகள் சம விகிதத்தில் அளித்துள்ளன.

நிறுவனத்தின் தேவைகளுக்கு மேலும் சுமார் ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகளிடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளது.



தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள்.

# வேளாண்மைத் தொழிற் கழகம்

## தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவரின் சந்திப்புக் கட்டுரை

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற்கழகம் செய்யும் பணிகள் யாவை?

த. : 1968 முதல் 1970 வரை இக்கழகம் டிராக்டர் மற்றும், மின்சார மோட்டார், எண்ணெய் இயந்திரங்கள் ( Oil Engines ), பம்புசெட்டுகளைத் தவணைமுறையில் வழங்கியுள்ளது.

அத்திட்டத்தின் கீழ் 10,684 பம்புசெட்டுகளும், 292 டிராக்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களில் 75 உழவர்களுக்கு அவர்கள் விரும்பியுள்ள டிராக்டர்-டிராக்டர்கள் உற்பத்தித்தடைகள் நீங்கியதும்-அளிக்கப்படும்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்கள் யாவும் இக்கழகம் மூலமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை உழவர்களுக்கு 1,500 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் 1,000 டிராக்டர்கள் இவ்வாண்டு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களைச் சீர்நிலையில் வைத்திருப்பது, அவற்றைப் பழுது பார்ப்பது, அவற்றிற்குத் தேவையான துணைக் கருவிகளை வழங்குவது ஆகியவற்றிற்காக இக்கழகம் மதுரை, திருச்சி, சேலம், விழுப்புரம், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் கிளை அலுவலகங்களை அமைத்துள்ளது.

அனுபவமிக்க பொறியாளர்களும், பயிற்சிபெற்ற இயந்திரக் கம்மியர்களும் ( Machanics ) இப் பணிகளைத் திறம்படச் செய்கின்றனர்.

இக்கழகத்தின் கிளை நிறுவனங்கள் மூலம் கல்டிவேட்டர் (Cultivator), 'கேஜ்வீல்' ( Gage Wheel ) ஆகிய துணைக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சிறு உழவர்கள் நலன் கருதி டிராக்டர்களும், துணைக் கருவிகளும் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. அதற்காகத்துணை நிலையங்கள் மதுராந்தகம், திருவண்ணாமலை, பொன்னேரி, பரமக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இக்கழகத்தின் ஆழ்கிணறு அமைக்கும் பிரிவு கோவை, தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் கிணறுகள் அமைந்துள்ளது.

'என்ட்ரின் 20 சத விகிதம் இ.சி.' என்ற பூச்சிக் கொல்லி மருந்தைக் கலப்படமற்ற நல்ல தரத்தில் தயாரித்து உழவர்களுக்கு வழங்கும் பணியில் இக்கழகம் நல்ல வெற்றி கண்டுள்ளது. மற்றும் டி.டி.டி. (D.D.T.) பி.எச்.சி. ( B.H.C ), மாலதியான் ( Malathian ) ஆகிய பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயாரித்து வழங்கவும் இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வேளாண்மைக்கான தரமான இரசாயன உரங்களை நியாய விலைக்கு வழங்க இக்கழகம் தென் ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்களில் முன்னோடி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

உ. ஆ. : வேளாண்மைத் தொழிற் கழகம், துவக்கத்தில் இருந்து இதுவரை எவ்வளவு டிராக்டர், பம்பு செட்டுகள் வழங்கியுள்ளது?

த. : ரூபாய் 1.12 கோடி மதிப்புள்ள 292 டிராக்டர்களும், ரூபாய் 3 கோடி மதிப்புள்ள பம்புசெட்டுகளும் உழவர்களுக்குத் தவணை முறையில் வழங்கப்பட்டுள்ளன. டிராக்டர்கள் கோரியுள்ள பழைய விண்ணப்பதாரர்களுக்கு டிராக்டர் வழங்குவது பூர்த்தி செய்யப்பட்டால், மேலும் ரூபாய் 25 இலட்சம் கடனுதவியாகச் செலவிடப்படும்.

மேலும் ரூபாய் 3 கோடி மதிப்புள்ள 1,464 டிராக்டர்கள் உழவர்களுக்கு நேரிடையாக முழுத்தொகை பெற்று விற்கப்பட்டுள்ளன.

உ. ஆ. : தனிப்பட்ட உழவர்களுக்கு வாடகையில் டிராக்டர் வழங்கும் பணி பிரபலமடைந்துள்ளதா? வாடகை விவரம் என்ன?

த. : இக்கழகம் முக்கியமாகச் சிறு மூலதனமே உள்ள உழவர்களுக்கு டிராக்டர்களையும், துணைக் கருவிகளையும் வாடகைக்கு வழங்குகிறது. வாடகைக்கு டிராக்டர் வழங்கும் திட்டம் உழவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆகையால் இக்கழகம் வாடகைக்கு டிராக்டர் வழங்க மதுராந்தகம், திருவண்ணாமலை, பொன்னேரி பரமக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களில் துணை நிலையங்களை நிறுவியுள்ளது. மேலும் சுமார் பத்து இடங்களில் துணை நிலையம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய டிராக்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு 160 ரூபாயும், பெரிய டிராக்டர்களுக்கு 200 ரூபாயும் வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

மேலும் வெவ்வேறு பணிகளுக்கேற்ப டிராக்டர்களும், துணைக் கருவிகளும் மணிக் கணக்கு வாடகையில் வழங்கப்படுகின்றன.

உ. ஆ. : உழவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் எவ்வாறு வசூலிக்கப்படுகின்றன?



தலைவர் தொழிற்கூடத்தைப் பார்வையிடுகிறார்.

த.: மின்சார மோட்டார், எண்ணெய் இயந்திரம் போன்ற கருவிகளுக்காக உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் ஏழு ஆண்டுத் தவணை முறையிலும், டிராக்டர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பத்து ஆண்டுத் தவணை முறையிலும் வசூலிக்கப்படுகின்றன.

தவணைத் தொகையைச் சென்னை அலுவலகத்திலோ அல்லது பழுது பார்க்கும் கூடங்களிலோ, பணமாகவோ அல்லது அந்தந்த ஊர்களில் உள்ள வங்கிக் கிளைகளில் உண்டி மூலமாகவோ செலுத்தலாம்.

தமிழகத்திலுள்ள ஸ்டேட் பாங்க், இந்தியன் பாங்க் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, கனரா பாங்க், சிண்டிகேட் பாங்க் ஆகியவற்றின் கிளைகளில் தவணைத் தொகைகளைச் செலுத்தித் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழக வங்கிக் கணக்கில் வந்தடையத் அஞ்சல் மூலம் மாற்றும் வசதியும் உழவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கழகத்தின் சார்பில் விற்பனை அதிகாரிப்பு—உதவி அலுவலர்கள் தவணைத்தொகையை உழவர்களிடமிருந்து நேரிடையாகப் பெறுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

உழவர்களுக்கு முன்கூட்டியே தவணைத் தொகைகள் குறித்து அறிவிப்புகளும், நினைவூட்டு மடல்களும்அனுப்பப்படுகின்றன.

தவணையைச்செலுத்தத் தவறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

சமீபத்தில் தமிழ்நாடு நில வரி வசூல் சட்டத்தின் அடிப்படையில் இக் கழகத்திற்குரிய பாக்கித் தொகைகளை வசூலிக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உ. ஆ.: கடன் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது ஏன்?

த: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வேளாண்மைக்கு அதிக முறையில் கடனளிப்பதாலும், இக்கழகம் வேறு வேளாண்மைத் தொழில் துறைகளில் இயங்க முனைந்துள்ளதாலும், 1970-ஆம் ஆண்டிற்குப் பிறகு தவணை முறைத் திட்டம் தொடரப்படவில்லை.

உ. ஆ.: கடன் வாங்கும் உழவர்களிடம் பணமாகத் திருப்பி வசூலிப்பதை விட, விளை பொருளாகவே அறுவடையின் போது வாங்க ஏதேனும் திட்டம் உண்டா?

த.: கடன் வழங்கப்பட்ட உழவர்களிடமிருந்து தவணைத் தொகைகளை விளை பொருளாக அறுவடைக் காலத்தில் வாங்குவதில் பல சிக்கல்கள் உள்ளன.

முதலில் அவ்வாறு வாங்கிய பொருள்களைப் பாதுகாக்கக் கிடங்குகள் தேவைப்படும். விளை பொருள்களைத் தக்க காலத்தில் விற்பனை செய்வதிலும், அப்பொருள்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதிலும், விற்பனை செய்யப் புதிய நிறுவனங்களை அமைப்பதிலும் பணம் செலவு செய்ய நேரிடுமாதலால் அச்செலவுகளும் கழகத்தின் பாரமாக ஆகி, உழவர்களுக்கும் பாரம் தருமாகையால் அது விரும்பத்தக்கதல்ல.

உழவர்களே தம் விளைச்சலை நேரிடையாக விற்றுப் பணமாக்கிக் கழகத்திற்குச் செலுத்தும் முறைதான் அவர்களுக்கும் இக் கழகத்திற்கும் எளிதானது.

உ. ஆ.: வேளாண்மைத் தொழிற் கழகத்தின் கிளைகளை மேலும் அதிகமாக்கும் நோக்கம் உண்டா?

த.: இதுவரை டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடங்கள் மதுரை, விழுப்புரம், காஞ்சிபுரம், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கோவையில் ஓர் டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடம் விரைவில் நிறுவப்படும்.

டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் கூடம் ஒவ்வொன்றின் கீழும் 3 டிராக்டர் வாடகைக்கு விடும் துணைக்கூடங்கள் வீதம், மொத்தம் 18 துணைக்கூடங்கள் அமைக்கப்படும்.

இதுவரை மதுராந்தகம், திருவண்ணாமலை, தேனி, பரமக்குடி, பொன்னேரி ஆகிய இடங்களில் டிராக்டர் வாடகைக்கு விடும் துணைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டையில் டிராக்டர் வாடகைக்கு விடும் ஒரு துணைக் கூடம் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. மேலும், தஞ்சை மாவட்டத்தில் இரு இடங்களில் புதிய துணைக் கூடங்கள் விரைவில் அமைக்கப்பட விருக்கின்றன. டிராக்டர் வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்க்கும் ஒவ்வொரு கூடத்திலும் 6 டிராக்டர்களும், துணைக்கூடம் ஒவ்வொன்றிலும் 3 டிராக்டர்களும் வாடகைக்கு விடுவதற்கு வைக்கப்பட்டுள்ளன. தேவையின் பேரில் டிராக்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

உ. ஆ.: தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், மற்ற மாநில வேளாண்மைத் தொழிற்

கழகங்களை விட ஏதேனும் குறிப்பிடத் தகுந்த வகையில் சாதனை செய்துள்ளதா?

த.: அண்டை மாநிலங்களை விட, அதிக அளவு டிராக்டர்கள் தமிழ் நாட்டில் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு அதிகப் பரப்பளவும், வேளாண்மையையே முக்கியத் தொழிலாகவும் கொண்ட பீகார் மாநில வேளாண்மைத் தொழிற் கழகம் தவிர, மற்ற எல்லா மாநில வேளாண்மைத் தொழிற் கழகங்களையும்விடத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமே அதிக எண்ணிக்கையில் பம்பு செட்டுகளையும், டிராக்டர்களையும் உழவர்களுக்கு வழங்கிய பணியில் முதலிடம் வகிக்கின்றது.

உ. ஆ.: பவர் டில்லர், புல்டோசர் வழங்குவது சம்பந்தமாக வேளாண்மைத் தொழிற் கழகத்தின் குறிக்கோள் என்ன?

த: பவர் டில்லர்கள் வேண்டி இது வரை உழவர்கள் இக்கழகத்தை அணுகவில்லை.

சமீபத்தில் கேரள மாநில வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலம் ஜப்பானிலிருந்து ''குபோட்டா'' பவர் டில்லர்கள் இறக்குமதி செய்து விற்பனை செய்யவும், சில ஆண்டுகளுக்குப்பின் கேரள மாநிலத்திலேயே அவற்றை உற்பத்தி செய்யவும் திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

அந்தப் பவர் டில்லர்களின் விற்பனையைத் தமிழ்நாட்டில் அதிகப்படுத்த இந்தக் கழகம் முயற்சி செய்து வருகிறது.

உ ஆ.: வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்திடம் உள்ளதா?

த: ஆம்! இத் திட்டம் ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு ஆண்டொன்றுக்குச் சுமார் 90 பேர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் செயலாக்கப்படுகிறது. முதற் குழுவினர் ஏற்கெனவே பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளனர்.

தகுதிவாய்ந்த பட்டதாரிகளை தேர்ந்தெடுத்து அவர்களை 'புத்னி', 'கிஸ்ஸார்' ஆகிய பயிற்சிக் கூடங்களுக்கு அனுப்பி, டிராக்டர் பழுது பார்க்கவும், ஒருங்கிணைக்கவும் பயிற்சியளிக்கப்படுகிறது. அவர்களுக்கும் அவர்களது பணியாளர்களுக்கும் மேலும் வேண்டிய பயிற்சியைச் சென்னையில், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தாலேயே அளிக்கப்படும்.

பயிற்சி பெற்ற பட்டதாரிகள் இக்கழகத்தின் ஆதரவில் தாமே டிராக்டர் பழுது பார்க்கும் கூடங்களைச் சிறு நகர்ப் பகுதிகளில் அமைக்கத் தேவையான உதவியளிக்கப்படும்.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தொழிற்கூடங்களை அமைக்கத் தேவையான முதலீட்டை இக்கழகம் வங்கிகளுக்குப் பரிந்துரைத்துக் குறைந்த வட்டி விகிதத்தில் (5 சத விகிதம்) பெற வசதி செய்யும். மிகுதி வட்டியை மைய அரசு இக்கழகம் மூலம் மானியமாக வங்கிகளுக்கு வழங்கும்.

டிராக்டர்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் இந்நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய வழங்கப்படும். நிலையப் பணியாளர்களுக்கும் இக்கழகம் பயிற்சியளிக்கும். மேலும் இவர்களது நிலையங்கள் மூலமாக உழவர்களுக்குத் தேவையான உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் வழங்கப்படும்.

இத்தகைய கூடங்கள் நிறுவப்படுவதால், வேளாண் பெருங்குடி மக்கள் பெரிதும் பலனடைவார்கள். இத்திட்டம் பலருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், உழவர்களுக்கு எளிதில் அவர்கள் அருகிலேயே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வசதியுமளிக்கும். இக்கூடங்கள் பல இடங்களில் நிறுவப்படுவதால், இக்கழகம் தானே பல கூடங்களைப் பெருமளவில் நிறுவ வேண்டிய நிருவாகச் செலவுகள் குறையும்.

உ.ஆ.: வேளாண்மைத்தொழிற் கழகத்தின் பணிகளை உழவர்களுக்கு விளக்கச் சிறுசிறு வெளியீடுகளையும், டிராக்டர், ஸ்ப்ரேயர், மோட்டர், என்ட்ரின் முதலியவைகளைப் பயன்படுத்தும் முறைகளையும் விளக்கிடும் சிறு சிறு கையேடுகளையும் வெளியிட்டு இலவசமாக வழங்கினால் என்ன?

த: டிராக்டர்களைப் பொறுத்த மட்டில், அவற்றைப் பயன் படுத்தும் முறை பற்றியும், அவற்றின் உதிரி பாகங்களைப் பற்றியும் விவரங்களடங்கிய புத்தகங்கள், டிராக்டர்களை விற்பனை செய்யும் நேரத்தில் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. தவிர அவ்வப்பொழுது சிறுசிறு வெளியீடுகள், கையேடுகள் ஆகியவையும் வெளியிடப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

உ.ஆ.: சில தனியார் நிறுவனங்களைப்போல், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகமும் மருந்து தெளிக்கும் கருவிகளைக் கொண்டு உழவர்களின் வயலில் மருந்து தெளித்து விட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்தைச் செயல்படுத்தினால் உழவர்களுக்கும் பயன் ஏற்படும்; அதே நேரத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் வழி ஏற்படும். இத்திட்டம் பற்றி நீங்கள் யோசித்தாலென்ன?

விற்பனைக்குத் தயாராக உள்ள டிராக்டர்கள்.



த.: ''இது ஒரு நல்ல திட்டம்தான்! தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான தெளிப்பான்கள் இல்லை. 'ஹெலிகாப்டர்' விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டமும் இப்பொழுது செயல்படுத்தப்படவில்லை. எனவே நீங்கள் கூறும் திட்டம் உழவர்களுக்குப் பயன் விளைக்கும். (இதுபற்றி நாம் யோசித்தாலென்ன? என்று மேலாண்மை இயக்குநர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

''மண்டலக் கூடங்களில் சிறு எண்ணிக்கையில் தெளிப்பான்களை வைத்துக் கொண்டு அவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கும் முன்னோடித் திட்டம் ஒன்றினை நாம் முதற்படியாக ஏற்கலாம்'' என்று அவர் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் அவர்கள், ''இதுபற்றி உடன் திட்டமிடுங்கள்'' என்று வேளாண்மை இயக்குநர் அவர்களிடம் கூறினார்).

உ. ஆ.: ஆந்திர மாநிலத்தில் வேளாண்மைத் தொழிற் கழகம் வழங்கிய 'ஆர். எஸ். ஒ. 9' டிராக்டர்களைப் பற்றி உழவர்கள் புகார் சொல்லியுள்ளனரே! அதுபோல் தமிழ்நாட்டிலும் புகார் வந்ததா? அதுபற்றி நீங்கள் என்ன செய்தீர்கள்?



த.: தமிழ்நாடுவேளாண்மைத் தொழிற் கழகம் இதுவரை 38 'ஆர். எஸ். ஒ. 9' டிராக்டர்களை உழவர்களுக்கு விற்பனை செய்துள்ளது. இந்த டிராக்டர்களைக் குறித்து உழவர்களிடமிருந்து வந்த சில புகார்களை, இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஓர் குழு பரிசீலனை செய்து பரிந்துரை செய்ததன் பேரில், டிராக்டர்களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்னமும் அந்த டிராக்டரில் உழவர்கள் சுட்டிக்காட்டும் கோளாறுகளை அவ்வப்பொழுது பொறியாளர்கள் சரி செய்து கொடுத்து வருகின்றனர்.

உ. ஆ.: தமிழ்நாடு வேளாண்மைத்தொழிற் கழகத்தின் எதிர்காலத் திட்டம் என்ன?

த.: நைலான் மீன்வலை தயாரித்தல், இயந்திரக் குளிர் சாதனங்கள் மூலம் மீனைப் பாதுகாத்தல், (Cold Storage of Fish) இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சில பொருள்களை உமியினின்று தயாரித்தல், பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயாரித்தல், தோல் பதனிடப்பயன்படும் டேனின் ( Tannin ) என்ற இரசாயனப் பொருள்களைத் தயாரித்தல், மக்காச் சோளத்தினின்று பல்வேறு பொருள்கள் தயாரித்தல் போன்ற பல புதிய திட்டங்களை மேற்கொள்ள இக்கழகம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

''மாநில மைய அரசுகளின் முழு ஆதரவுடனும், உழவர்கள் பொதுமக்கள் ஒத்துழைப்புடனும், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் விரைவில் பெருமளவில் மிக விரைந்து பணியாற்றும் என்று உறுதியாக நம்புகிறேன்''.

[வேளாண்மைத் தொழிற் கழகத் தலைவர் அவர்களின் நம்பிக்கையும், தொண்டும் வேளாண்மைத் துறைக்கு உறுதுணைகளாக இருக்கும் என்பது உறுதி.]

—ஆர்.எம்.



## வருந்துகிறோம்

''தமிழன் என்றொரு இனம் உண்டு;
தனியே அவர்க்கொரு குணம் உண்டு''

என்று பெருமிதத்தோடு பாடி, அத் தனிப் பெருந் தமிழினத்தின் தகைமைசால் பெருமைகளையெல்லாம் நிரலே தொகுத்தும், உத்தமர் காந்தியடிகளின் உன்னதமான தத்துவங்களையெல்லாம் விளக்கியும் தமிழ்க் கவிதை வெள்ளம் பாய்ந்து பெருக்கெடுத்தோடச் செய்து கவிதைத் தொழில் புரிந்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், தமது 85-ஆம் வயதில், 24—8—72-ஆம் நாள் காலையில் சென்னையில் இயற்கை எய்தினார்கள்.

நாமக்கல் கவிஞர் அவர்கள் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டு திகழ்ந்தார். இந்த நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு, இருமுறை சிறைக்குச் சென்றார்.

இந்த நாடு விடுதலையடைந்ததும் 1947-ல் அவர் தமிழ் நாட்டின் அரசவைக் கவிஞராக நியமனம் செய்யப்பட்டார். பின்னர், இரு முறை தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராக, நியமனம் செய்யப்பட்டார்.

தமிழக அரசு, நாமக்கல் கவிஞர் அவர்களின் தியாக உணர்வையும், நாட்டுப் பணியையும் பாராட்டித் திங்கள் தோறும் 250 ரூபாய் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது.

'கை குவித்து வணங்குவோம்' என்னும் தலைப்பில் அவர் எழுதிய கடைசிக் கவிதை, 'தமிழரசு' விடுதலை வெள்ளி விழாச் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. அவர், அந்தக் கவிதையைப் படித்தவாறே உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் கவிஞர் அவர்களின் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கும், கவிதையன்பர்களுக்கும் நமது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# கண்ணகியே மங்கலதேவி



பேராசிரியர்
சி. கோவிந்தராசனர்

மங்கலதேவிக் கோட்டத்தினுள் நான்கு கோயில்கள் ஓரளவு சிதைந்த நிலையில் இருக்கக் கண்டேன். கோயில்கள் என்று குறிப்பது, ஆகமச் சிற்ப சாத்திரங்களின் முறைப்படி கட்டப்பட்ட கோயில்கள் அல்ல. கட்டடக்கலை முறைக்கு ஆகம விதிகளைப் பின்பற்றாத முறையில் முன்னரே கட்டப்பட்ட கோயில்கள். அதனாலேதான் கருங்கற்களால் சிறியதும், பெரியதுமாக, அங்கொன்றும், இங்கொன்றுமாக அவைகள் அறைகளைப்போன்ற அளவில், அதிக உயரமில்லாமல் நான்கு பட்டை விமானங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலும் இதில் இருக்கின்றது என்பதைப்புதரடைந்து கிடக்கும் பாழிடங்களில் உள்ள பழைய செங்கற்கள் தெரிவிக்கின்றன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை என்று கருதப்பெறும் முதலிரண்டு கோயில்களுள் முதலாவது கோயிலில் பீடமும், இரண்டாவது கோயிலில் கண்ணகி சிலையும் (சிதைந்த நிலையில்) இருந்ததை முன்னர் கூறியுள்ளேன். கண்ணகிக் கோயிலுக்கு எதிராக அமைக்கப்பட்ட முதற்கோயில் கோவலனுக்கு நினைவாக அமைக்கப்பட்டதாகும். இதனை, மணிமேகலை, வஞ்சிநகர் புக்க காதையில், மணிமேகலை, தன் தந்தை கோவலனுக்கும், தாய் கண்ணகிக்கும் படிமம் எழுதிய கோயிலைக் காண விழைந்து மாமலை மீதுள்ள கோயிலில் கண்டதாகக் கூறப்பெறும் செய்தி உறுதி செய்கின்றது.

கோயில்களின் அமைப்புமுறை, தமிழகத்திலுள்ளதும் ஆகம விதிகளின்படி கட்டப்பட்டதுமாகிய கோயில்களைப் போல இல்லை. பழைய கிராமங்களில் கிராம தேவதைகட்கு அக்கால மக்கள் திடல்களிலும், தோப்புகளிலும், குறிப்பிட்ட இடத்தை எல்லை கோலி வளைத்து, இடையே கோயிலை அமைத்திருப்பதைப் போன்ற பாங்கில் அவைகள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் பண்டைக்காலத்தில் இருந்த சதுரக் கோயில்கள் (Dolmens) அமைப்பிலேயே கட்டப்பட்டிருந்தன.

விமான வகைகள் தென்னிந்தியாவில் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னரே கட்டடக் கலை வளர்ச்சிக்குரியதாக இருந்தன. அவை சதுரத்தில் மேல் சதுர வடிவில் நான்கு பட்டையாக எழுப்பித் தலைப்பை ஒரு முகமாகக் குவித்துச் சேர்த்து நிற்கும் தோற்றமுடையன. (i bid pp 72–79) பழைய கோயில்கள் நீளச் சதுர அறையமைப்பில் இருந்தன. அம்முறையிலேயே எத்தகைய புதுமைகளோ கருங்கற் சிற்ப, வேலைப்பாடுகளோ இல்லாமல், தூண்களும் இல்லாமல் மங்கல தேவிக் கோட்டத்திலுள்ள முதவிரண்டு கோயில்களும் உள்ளன.

விமான முகப்புப் பட்டைகளில், முகப்புக்கொன்றாக நான்கு வளைவுக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை, தமிழகத்தின் கோயிற் கட்டடக் கலையின் விமான அமைப்புக்குரிய பழமையை நன்கு தோற்றுவிக்கின்றன. அப்பரடிகள் காலத்திலேயே விமானங்களுடன் கோயில்கள் இருந்தன என்பதைப் பெண்ணாகடம் தூங்கானை விமானக் கோயில் உணர்த்துகின்றது. அக்காலத்திலேயே இளங்கோயில், பெருங்கோயில், கரக்கோயில், ஆலக் கோயில் போன்ற கோயில் வகைகள் இருந்தனவென்று அப்பரடிகள் குறிப்பிடுவதனால், அவ்வகையில் வளர்ச்சியுற்ற தமிழகக் கோயில்களுக்கு மூலமான கோயில்கள் யாவை? அவைகளே தமிழகச் சிற்பியர் தனித்தன்மையுடன் தோற்றுவித்த மங்கலதேவிக் கோட்டக் கல்லறைக் கோயில்களாகும்.

இக்கருத்திற்கு ஏற்பப், பேராசிரியர், துப்ரேல் அவர்கள் தமது ''திராவிடரின் கட்டடக் கலை'' என்னும் நூலில் *(Prof Dwbreiwl's Dravidian Architecture pp 1—10)* ''தென்னாட்டுக் கட்டடக்கலை அமைதியாகவும் செம்மையாகவும் வளர்ச்சி பெற்று வந்ததாகும்'' என்று கூறியுள்ளார். மற்றும் 1914-ல் வெளியிடப்பட்டுள்ள தென்னிந்தியப் பழம்பொருள் ஆராய்ச்சியாளரின் **ஆண்டு அறிக்கை பக்கம் 34-ல்,**

'' தென்னிந்தியாவில் இருந்த பண்டைக் கோயில்களைப் பார்த்தே பௌத்தரும் சமணரும் கோயில்களை அமைத்துக் கொண்டனர் '' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்து தமிழர் தனித்தன்மையுடன் கட்டடக் கலையை வளர்த்து வந்துள்ளனர் என்று மேனாட்டறிஞர்கள் அறுதியிட்டு உறுதியாக ஆராய்ந்து எழுதியிருந்தும், 'கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் தமிழர் சிற்பக் கலையையும், கருங்கற் கட்டடக் கலையையும் அறியாதிருந்தனர். பின்னர், குப்த வாகாடக முறையைப் பல்லவர்கள் பின்பற்றினர்' என்றே தமிழகத்திலுள்ள சில ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். (இத்தகையாரின் ஆராய்ச்சிக்கு முன்னர் எனது கண்ணகிக் கோட்டக் கண்டு பிடிப்பிடம் என்ன தகுதியைப் பெறும் என்பதை வாசகர்களே சிந்திக்கின் புலனாகும்.)

கோட்டத்திலுள்ள நான்கு கோயில்களும் நான்கு வகையாக இருக்கின்றன. அடிப்படையின்றி மலைத்தளத்தின்மீது அமைக்கப்பட்டுள்ள முதலிரண்டு கோயில்களுடன் சிதைவுக் கற்குவியலுக் கிடையே நிற்கும் கம்பச் சின்னமும் கருங்கல்லில் துளையிட்டுள்ள சதுரச் சாளரமும் சமணச் சார்புடைய சின்னங்களாகக் கருத இடமுள்ளது. கோவலன் சமணச் சமயச் சார்புடையவனெனச் சிலப்பதிகாரம் தெளிவாக உரைக்கின்றது. ஆதலினால், அருக சமயக் கோயிலமைப்புப் படி பல அறைக் கோயில்கள் அங்குத் தோன்றியுள்ளன என்பதாகும். மலைமீது கட்டவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டதால், மலைப்பாறைகளை உடைத்துக் கோயில் கட்டும் முயற்சியை அக்காலத் தமிழகச் சிற்பியர் கையாண்டு வெற்றி கண்டுள்ளனர்.

கோட்டம் என்பது பல உள் அமைப்புடன் அமைக்கப் பெறுவது என்பதையும், தரையின் மீது கட்டப்பட்ட அக்காலக் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டன என்பதையும், மணிமேகலை சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில், '' அருந்தவர்க் காயினும் அரசர்க்காயினும் ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்காயினும் நால்வேறு வருணப் பால்வேறு காட்டி, இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த, குறியவும், நெடியவும் குன்று கண்டன்ன சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்'' என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ் விளக்கத்தினைக் கொண்டு மங்கலதேவிக் கோட்டத்தின் பழமையினை ஒப்பிட்டு அறியத் தக்கதாகும்.

## பலி பீடிகை

இரண்டாவது கோயிலாகும் கண்ணகிக் குரிய கோட்டத்தின் திருமுற்றத்தில் நாட்பலி பீடிகை அமைக்கப்பட்டுள்ளது. கண்ணகிக் கோட்ட விழாவில் கலந்துகொண்ட '' இலங்கை கயவாகு வேந்தன் தன்னாட்டில், கண்ணகிக்கு நாள்தோறும் பலிகொள்ளும் பலிபீடத்தை முற்படச் செய்து, பின்பு கோட்டம் அமைத்து, ஆடித் திங்களில் விழாச் செய்தான் '' என்று சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை உணர்த்துகின்றது. சிலம்பு குறிக்கும் இவ்வகைச் சான்றிற்கு ஏற்ப, கண்ணகிக் கோயிலில் முன்னர்




நாட் பலி பீடிகை அமைக்கப்பட்டுள்ளது.

கோயில் சிற்ப வேலைப்பாடு எதுவுமின்றிக் கல்லறைக் கோயிலாக இருக்க அதற்குரிய பலிபீடம் மட்டும், சிற்பத்திறனுடன் அழகாக அமைக்கப்பட்டிருப்பதற் குரிய காரணத்தினை ஆராய்ச்சி செய்தேன்.

கோட்டம் தோன்றிய போது அமைக்கப்பட்ட பழைய பலிபீடிகையை, கி. பி. பத்தாம் நூற்றாண்டில், தாமரை இதழ்ப் பட்டிகையுடன் கூடிய பீடம் எழுப்பி அதன்மேல் அமைத்துள்ளனர். இதனை, கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வளர்ச்சியடைந்த சிற்பச் சாயலுடன் கூடிய அடிபீடத்தின் மேல், முகப்பளவில் உள்ள பழைய பலிபீடிகை பொருத்தப்பட்டிருப்பது நன்கு உணர்த்துவதாக இருக்கின்றது.

## விநாயகர் சிலை

கண்ணகி இறந்த இடத்தில் நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்டுக் காலப் போக்கில் விரிவடைந்துள்ள மங்கலதேவிக் கோட்டத்தில், ஓரிடத்தில் புதர்களுக்கிடையே விநாயகர் சிலையொன்று சிதைவுகளுடன் இருந்ததாக வேட்டைக்காரர் கண்டு கூறியதாக முன்னர் கூறியுள்ளேன்.

இச்சிலையைக் கண்ட அளவில் ஒரு சில ஆராய்ச்சியாளர்கள், மங்கலதேவிக் கோட்டமே கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்று கூறியுள்ள செய்தி 5—1—72, இந்து நாளிதழில் வெளிவந்துள்ளது. இக்கருத்தையே மற்றையவரும் தொடர்ந்து கூறுவர்.

விநாயகர் வழிபாடு தமிழகத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நரசிம்ம பல்லவனின் வாதாபி படையெடுப்பின் வழியே, பல்லவ சேனாதிபதியான பரஞ்சோதியாரின் முயற்சியால் தமிழகத்தில் இடம்பெற்று வளர்ச்சியுற்ற தெய்வ வணக்கமாகும். பிற்காலச் சோழ, பாண்டியரே அவ்வணக்கத்தை ஆட்சியில் இடம்பெற்ற ஆச்சாரியரின் முயற்சியாலும், ஆகம புராண விசேடத்தாலும் பேணி வளர்த்துள்ளனர். அக்காலத்தில் அதாவது கி.பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டில் மங்கலதேவிக் கோட்டத்தில் மூன்றாவது கோயிலுடன் அதைச் சார்ந்த கிழக்கு வாயிலையும், திருப்பணி செய்துள்ள பாண்டிய மன்னனொருவனால் விநாயகர் சிலையும், அங்குப் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளது. இவ்வுண்மையான வரலாற்றுக் குறிப்பைத் தவிர, 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமைகளோடு விளங்கும் மங்கலதேவிக் கோட்டத்தில் விநாயகர் சிலை இடம் பெறுவதற்கு வேறு ஏது இல்லை.

## கல்வெட்டுச் சான்றுகள்

மங்கலதேவிக் கோட்டத்தின், மேற்கு வாயிலுக்கு அருகே முதலாவது என்று யான் குறிப்பிடும் கோயிலுள்ளது. அதன் வாயிலின் வலதுபுற நிலைச் சட்டக் கல்லில் பழைய தமிழெழுத்தாலாகிய வட்டெழுத்துக்களில் கல்வெட்டொன்று இருக்கின்றது. தமிழகத்தின் வரலாற்றினை நன்கு ஆராய்ச்சி செய்து வெளியிட்ட மேனாட்டு அறிஞர் பர்னல், பர்கூசன் போன்ற பெருமக்களின் '' தமிழின் பழைய எழுத்து '' என்ற ஆராய்ச்சிக் குறிப்புப்படி, இக்

கல்லெழுத்துக்கள் சிலப்பதிகார காலமாகும், கி.பி. இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதிக் குரியவை என்பதில் ஐயமில்லை. கல்வெட்டு, வரிக்கு ஆறு அல்லது ஏழு எழுத்துக்களுடன் மேலிருந்து கீழாகத் தொடர்ந்து முப்பது வரிகள் அளவில் இருக்கின்றது. கல்லெழுத்துக்களில் ஒரு பகுதி வரிசையாகச் சிதைவு பெற்றிருப்பதால் செய்தியினைத் தெளிவாக அறிய இயலவில்லை.

கி.பி. 11-ஆம் நூற்றுண்டுக் குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் இரண்டு—மூன்றுவது கோயிலின் முற்றத்திலுள்ள கட்டைச் சுவரின் கற்களில் உள்ளன. பொறிவு மிகுந்த முகப்பில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததனுல் படியெடுக்க இயலவில்லை. ஆயினும் பாண்டிய மன்னனெருவன் மங்கலதேவி அம்மனுக்குச் செய்துள்ள அறச் செயல்களை அவைகள் உணர்த்துவனவாக இருந்தன.

என் ஆராய்ச்சிக் குரியதாக கிடைத்தகல்வெட்டுக்கள் பற்றிக் கூறுவோமானுல், கி.பி. இரண்டாம் நூற்றுண்டு முதல், கி.பி. 11-ஆம் நூற்றுண்டு வரைக்கும் பல்வேறு காலங்களில் உண்டான கல்வெட்டுகள் மங்கல தேவிக் கோட்டத்தில் (கண்ணகிக் கோட்டம்) உள்ளன என்பது தெளிவாகும். (5-1-1972) இந்துப் பத்திரிகையில், அங்கு ஏதோ சில கல்வெட்டுக்கள் புதரடைந்து இருப்பதாக மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது)

### கண்ணகியே மங்கலதேவி

கண்ணகியே மங்கலதேவி என்பதற்குரிய சான்றுகள் :—

கண்ணகி நிலைகுலைந்த உடலுடன் நெடுவேள் குன்றத்தின் சிகரப் பரப்பிடத்தில், வேங்கை மர நிழலில் நின்றபோது, நேரில் கண்டவர்கள் அம் மலையில் வாழும் பழங்குடி மக்களாகிய



குறவர்களே என்று இளங்கோ வடிகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இச்செய்தியைத் தவிரக் குறவரிடம் கண்ணகி தன் பெயரைச் சொன்னதாகவோ அன்றி அவர்கள் அறிந்ததாகவோ சிலப்பதிகாரத்தில் செய்திகள் இல்லை. கண்ணகி அங்கு இறந்த பின்னர் தாம் தெய்வமாகக் கருதிய பெண்ணை, நடுகல் நாட்டி வழிபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒரு நாள், அருகில் ஓடும் பேரியாற்றங்கரைக்குத் தங்கள் நாட்டு அரசனுகிய சேரன், செங்குட்டுவன் மலைவளங்காண மனைவியுடனும் அரசியல் அதிகாரிகளுடனும் வருகின்றுன். மன்னனை மரியாதைப் பொருள்களுடன் வரவேற்ற குறமக்கள் தலைவன், கண்ணகி தெய்வமான நிகழ்ச்சியை மன்னனிடம் தெரிவித்தான். இப்பகுதியில் நூலாசிரியர்,

"கான வேங்கைக்
கீழோர் காரிகை,
தான்முலை இழந்து
தனித்துய ரெய்தி
வானவர் போற்ற
வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல் ?
யார்மகள் கொல்லோ ?
நின்னுட்டில் யாங்கள்
நினைப்பினும் அறியோம்"

(காட்சிக்காதை—வரி 57—61)

என்று, குன்றக் குறவர் அரசனிடம் கூறியதாகக் கூறியுள்ளனரே தவிர, கண்ணகியின் இயற்பெயரை அறிந்ததாகச் செய்தியில்லை. புகார் நகரில் கண்ணகியைப் பிரிந்து கோவலன் மாதவியோடு இருந்த போது, "கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினளாக" இருந்ததோடு "மங்கல நாண் (தாலி) அன்றி மற்றை நாண்" அணியாளாகவும் இருந்தாள் என்று, அடிகள் தெளிவாகச் சிலம்பில் கூறியுள்ளார்.

இந்நிலையில் கோவலனேடு மதுரைக்கு வந்த கண்ணகி, கணவனை இழந்ததனுல், தான் போற்றிப் பேணும் மங்கல அணியையும் இழந்து வாழ மனம் கொள்வாளா ? எனவே, மங்கல நாணுடனேயே (தாலியுடன்) இறக்கத் துணிந்த தன் செயலே, முலைமுகம் திருகி மதுரை மீது எறிந்த வெறியுணர்ச்சியாகும். அந்நிலையுடனேயே நெடுவேள் குன்றத்தின் மீது வேங்கை மர நிழலில் நின்றுளாதலின், கண்ணகி என்ற இயற்பெயரை அறியாத குன்றக் குறவர்கள், தாம் நேரில் கண்ணுல், கண்கண்ட காட்சியையே நினைவாகக் கொண்டு, அவள் இறந்த இடத்தில் தெய்வமாக வழிபடும்போது, மங்கலநாண் கழுத்தில் அணிந்திருந்த சிறப்பை வைத்து "மங்கல தேவி" என்று காரணப் பெயரிட்டு, நடுகல்வைத்து, வணங்கியுள்ளனர். பின்னர், அவ்வீரப் பத்தினி வழிபாட்டிடம் சேர மன்னனுல் கோயிலாக்கப்பட்டது.

காலப்போக்கில், மங்கலதேவி, மங்கலா தேவி என்று அழைக்கப்பட்டிருப்பதுடன், மங்கலா தேவி அம்மன் என்ற தெய்வக் குறிப்புடனும் பெயர் பெற்றுள்ளதை மேலக்கூடலூர் கல்வெட்டு அறிவிக்கின்றது. மங்கலதேவி கோயில் உள்ள மலையும் மங்கலதேவி மலை என்று பெயர் பெற்று, இன்றும் மாருமல் நிற்கின்றது. மற்றும், மலைமேல் உள்ள கண்ணகிக் கோட்டத்திற்குப் பிரதியாக, அடிவாரப் பள்ளத்தாக்கிலுள்ள ஆங்கூர் பாளையத்திற்கு அருகில் "பத்தினிக் கோட்டம்" என்ற கோயில் இருப்பது சிறந்த சான்றுகும்.

மங்கலதேவியே கண்ணகி என்பதற்குச் சிலப்பதிகாரத்திலும், அகச்சான்று உண்டு. சிலம்பு—வரந்தருகாதை--வரி 53-ல் குறிப்பிடப்படும் "மங்கல மடந்தைக் கோட்டம்" என்பதற்கு, மங்கலா தேவிகோயில், மங்கல மடந்தை கண்ணகி, என்று உரையாசிரியர் குறித்துள்ளார். மற்றும் 12—1—72-ல் இந்து ஆங்கில நாளிதழில், ஆசிரியருக்குக் கடிதமாக, இந்தியக் கல்வெட்டுத் துறை அதிகாரி திரு கே. ஜி. கிருட்டிணன் அவர்கள் எழுதியுள்ள செய்தியில், "மங்கல தேவி அம்மன் கோயிலினுள்ள கல்வெட்டுச் செய்திகளும், கோயிலின் அமைப்பும், கோட்டம் அமைந்துள்ள இடமும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன" என்று கூறியுள்ளார்.

மேலே கண்ட விளக்கத்தினுலும், சான்றுகளினுலும், மங்கலா தேவி அம்மனே கண்ணகி தெய்வமாகுமென்பது, குன்றின் மேலிட்ட விளக்கொளிபோலத் தெளிவானதாகும்.

### ஆராய்ச்சியாளரின் குழப்பம்

கண்ணகி இறந்து தெய்வமான இடம் சங்க காலத்தில் நெடுவேள் குன்றம் என்று

# Power Spin-offs




## The growth of ancillary industries for the manufacture of boiler equipment

The projected estimates for power generation over the next ten years are high indeed, requiring boiler equipment upto unit sizes of 500 MW.

There is tremendous scope, here, for the organisation and development of ancillary industries, both product and process-oriented, for the wide range of components needed: raw materials, semi-finished products, finished products, sub-deliveries, etc.

Many such units already exist at Tiruchi, in and around the Boiler Plant, but more will be needed to meet anticipated boiler production, providing considerable opportunities for entrepreneurs, as well as for employment.

BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Government of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant, Tiruchirapalli 14
Regd Office: No. 5, Parliament Street, New Delhi 1

**BHEL:**
**Power to the people**

பெயர் பெற்றிருந்த சுருளி மலைத் தொடரினுள்ள ஒரு மலையின் சிகரப் பரப்பிடமே ஆகுமென்பதையும், அப்பகுதி சேர நாட்டின் கிழக்கு எல்லைக்குட்பட்ட மலைப்பகுதி என்பதையும், அம் மலைக்குப் பக்கமாகவே பேரியாறு ஓடுகின்றதென்றும் சிலப்பதிகாரம் தெளிவாகக் குறிக்கின்றது.

இக்கருத்திற்கு எவ்வகையிலும் மாறுபடாத நிலையில், சங்க காலப் பழமைகளோடு உள்ளதே யான் கண்டுபிடித்து வெளியிட்டுள்ள மங்கலதேவி அம்மன் கோட்டமெனும் கண்ணகிக் கோட்டமாகும் என்பதைத் தக்க சான்றுகளுடன் மேலே நிறுவியுள்ளேன்.

ஆனால், கேரள நாட்டுப் பழம் பொருள் ஆராய்ச்சியாளர், அந்நாட்டு மேலைக் கடற்கரைப் பகுதியிலுள்ள கிராங்கனூர், திருவஞ்சிக்குளம் குறும்பா பகவதி கோயில் சங்ககாலக் கோயிலென்கின்றனர்.

குறும்பா பகவதி அம்மன் கோயில், கேரளநாட்டு மக்களால் பெரிதும் மதிக்கப் பெறும் தெய்வமாகும். பகவதி அம்மன் கண்ணகி தெய்வமேயாகும். 'ஒற்றை முலைச்சி' என்ற சிறப்புத் திருநாமமும் அத்தெய்வத்திற்கு உண்டு. இக்கோயில் சேரநாட்டில் பத்தினித் தெய்வ வழிபாடு வளர்ச்சி பெற்றபோது ஆங்காங்கேகட்டப்பட்ட பழைய கோயில்களுள் ஒன்றாகும். அருக சமயச் சார்புடைய கோவலனின் மனைவி கண்ணகி யாதலினால் சமணச் சமயச் சார்பில் "பகவதி" என்று பெயர் சூட்டப்பெற்று விளங்கும் கண்ணகி தெய்வமேயாகும் என்பதில் ஐயமில்லை. இதைப்போல் சேர நாட்டில் செங்கனூரிலும் பகவதி அம்மன் கோயிலுள்ளது. கோழிக்கோட்டிற்கு அருகே உள்ள, அங்காடிபுரம் தாலியம்மன் சிலையும் கண்ணகி வழிபாட்டின் சின்னமென்று கொள்ளலாகும்.

### பத்தினிக் கோட்டம்

ஆனால், யான் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளதும், தமிழக மக்கள் அரசு வழியே விரும்புவதும், கண்ணகி இறந்து தெய்வமான மலைமேல் முதன் முதலாகக் குன்றக் குறவரால் நிறுவப் பெற்ற பத்தினிக் கோட்டமேயாகும்.

### கண்ணகி—செல்லியம்மன்

மங்கலாதேவி அம்மன் என்ற பெயர் மலைநாட்டில் கண்ணகிக்குக் குன்றக் குறவர் இட்ட பெயராக விளங்கி வந்தது. மதுரையில் மாதரியின் செல்வ மகளைப் போல அடைக்கலமாக ஆதரிக்கப் பெற்ற கண்ணகிக்கு ஆயரும், பாண்டியனும், சிலையெடுத்து வழிபட்ட காலத்தில் "செல்விஆயி" என்றும் செல்லியம்மன் என்றும் பெயரிட்டுள்ளனர்.

### கண்ணகி—பகவதி

பத்தினி வழிபாடு பரவலாக நாட்டில் வளர்ச்சி பெற்ற போது, சேரநாட்டின் உட்பகுதிகளில் கண்ணகிக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டன என்பதைப் பகவதி அம்மன் கோயில்களால் அறியலாகும். பகவதி என்னும் பெயர் சமணச் சமயச் சார்பில் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்ட போது இடப்பட்ட பெயர் என்று தெரிகின்றது. காரணம், கண்ணகி சமணச்சமயச் சார்புடைய கோவலன் மனைவி என்பதேயாகும். பகவன், பகவதி என்ற பெயர்கள் சமணர் வழங்கிய தெய்வப் பெயர்களாகும்.

### கண்ணகி—மாரியம்மன்

கண்ணகி இறந்த காலத்தைத் தொடர்ந்து பாண்டிய நாட்டில் பருவமழை பெய்யாமல், வெப்பமும், வறட்சியும் ஏற்பட்டுள்ளது. அதனால் மக்கள் கொடிய வெப்பநோய்களினால் துன்புற்றுள்ளனர். அப்பொழுது, பாண்டியன் கண்ணகியின் கோபமே அதற்குக் காரணம் என்று கண்டு, சாந்தியாகக் கண்ணகிக்கு வழிபாடு செய்துள்ளான். அதன் பின்னர் நல்ல மழை பெய்து நாடு செழித்துள்ளது. இதனால், கண்ணகி அம்மனின்அருளால்மழை பெய்து நலம்விளைந்தது என்பதே மக்கள் கண்ட அனுபவ உண்மை என்பது தெளிவாகும். எனவே, மழையைப் பெய்வித்து நாட்டுக்கு நலம் விளைவித்த அம்மையாகிய கண்ணகியை,

"மாரி-மழை ; அம்மை-ஆயி" என்னும் பொருள் நிறைந்த பெயரில், மாரியாயி, மாரியம்மன் என்று பெயரிட்டு வழிபடும் சிறப்பு, தமிழகத்தில் எங்கும் வழக்காகப் பெருகி வளர்ந்துள்ளது.

### கண்ணகி—காளி

கண்ணகி வரலாறு, பிற்காலத்தில் நாடகமாக்கப்பட்ட போது, கண்ணகி, காளி வடிவெடுத்துப் பாண்டியனைப் பழி வாங்கியதாக நாடக ஆசிரியர்கள் கற்பனை செய்து காலத்திற்கேற்ப வீரச் சுவையாய் மாற்றி அமைத்து விட்டனர். இச்செயலினால், பிற்காலத்தில் தொடர்ந்த கண்ணகி வழிபாடு காளியம்மன் வழிபாடாகவும் மாறியிருக்கின்றது எனலாகும். மனித வடிவிலமைந்த பழைய கண்ணகி அம்மனின் சிலையும், காலப்போக்கில் காளி வடிவாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மக்களின் மனப்போக்கைப் பின்பற்றியதாகச் சிற்பியர் அமைத்த தெய்வ வடிவேயாகும். (இதற்குச் சான்று, மதுரையிலுள்ள செல்லத்தம்மன் சிலையின் நிலையேயாகும்.)



### பத்தினி வணக்கம்

சேரன் செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகிக்குச் சிலையமைத்துப்பத்தினிக் கோட்டமும் அமைத்து விழா நிகழ்த்தியபோது அவ்விழாவிற்குச் சோழ மன்னர் பெருங்கிள்ளி, பாண்டியமன்னர் வெற்றிவேற் செழியன், கொங்கிளங்கோசர், இலங்கை கயவாகு வேந்தன் ஆகிய மன்னர்கள் வந்திருந்தனர். அவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்குச் சென்றவுடன் பத்தினி வணக்கத்தினைத் தத்தமது நாட்டில் வளரச் செய்துள்ளனர். அதனால் அவர்கள் நாட்டில் மழை பொழிந்தது.

பத்தினி வணக்கத்திற்குரியதாகப் பழங்காலத்தில் அரசரும், மக்களும் அமைத்த கோயில்களும், சிலைகளும், நாளடைவில் பெயரும், இடமும் மாற்றமடைந்து வெவ்வேறு பெயர்களுடன் நாடெங்கும் விளங்குகின்றன.

இவ்வாறு பத்தினி வணக்கம் பரவலாகச் சிறப்புடன் தமிழ் நாடெங்கணும் வளர்வதற்கு மூலமானதும், முதன்மையானதும், நெடுவேள் குன்றத்தின் மீது வேங்கைக் கானலில் உள்ள மங்கலதேவிக் கோட்டமென்ற பெயருடன் விளங்கும் கண்ணகிக் கோட்டமேயாகும்.

# தமிழ் வளர்ச்சி இயக்ககம்



தேமதுரத் தமிழ் மொழியின் வரலாற்றேட்டில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு புகழ்மிக்க ஆண்டு 1968-ஆம் ஆண்டு. ஆம், அந்த ஆண்டுத் தொடக்கத்தில்தான் இன்பத் தமிழ் மொழியின் இணையிலாச் சிறப்பினை இந்த உலகுக்கே எடுத்து உணர்த்தும் வகையில், தமிழகத்தின் தலை நகரான சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு நடைபெற்றது. அதனையடுத்த சில நாட்களிலேயே, அதாவது அதே சனவரித் திங்கள் 23-ஆம் நாள், தமிழ்நாடு சட்டப் பேரவையில்,

''தமிழ்நாட்டில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிருவாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான விரைந்த நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது'' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அதன் பிறகு, 1969-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இரு திருப்பங்கள் ஏற்பட்டன.

27—9—1969 முதல், துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, 27—12—69-அன்று தமிழ்நாடு வெளியிட்ட ஆணையின் வண்ணம், தலைமைச் செயலகத்தில் சட்டம், நிதி, சட்ட மன்றம் ஆகிய துறைகள் தவிர மற்றத் துறைகளில் ஒரு சில விதி விலக்குகளுக்குட்பட்டுத் தமிழ் மொழியை விரிவடையச் செய்ய வழிவகுக்கப் பட்டது.

''தமிழறியான் தமிழர்நெறி, தமிழர்களின் தேவை, வாழ்வு தம்மையறிதல் உண்டோ ? எந்நாளும் இல்லை'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தமிழர் தம் நிலை, நெறி, தேவை, வாழ்வு இவை அனைத்தும் ஒருங்கறிந்து அவர் தம் வாழ்வு வளங்கொழிக்க வழி வகுக்க அரசு அலுவலர்கள் அனைவரும் தமிழில் நல்லுணர்வும், நல்லறிவும் பெற வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் 1970-ஆம் ஆண்டு வரை பொதுத் (தமிழ் வளர்ச்சித்) துறையாக இயங்கி வந்த தமிழ் வளர்ச்சித் துறை 1971-ஆம் ஆண்டு முதல், தமிழ் வளர்ச்சி இயக்ககம் எனத் தனியே பிரித்து அமைக்கப் பெற்று, ஒல்லும் வகையான் பல்துறைகளிலும் செயலாற்றி வருகிறது.



### மொழி பெயர்ப்பு

அரசு அலுவலகங்களில் வரைவுகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகி வந்த பணியாளர்கள் வரைவுகள் அனைத்தையும் தமிழில் வரைய எல்லா அலுவலகங்களிலும் பயன்படுத்தப் பெறும் பொதுவான ஆங்கிலச் சொற்களுக்கும், அவ்வத் துறைகளில் பயன்படுத்தப் பெறும் சிறப்புச் சொற்களுக்கும் உரிய தமிழ் கலைச் சொற்கள் தேவையன்றோ ? அச்சொற்களைப் பெற அவர்கள் ஒவ்வொரு முறையும் அகராதியைப் புரட்டி அல்லலுறின் அரசுப் பணி நடைபெறுமா? எனவே, தமிழ் வளர்ச்சித் துறையினர், அரசுப் பணியாளர்கள் அன்றாடம் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களை மட்டும் மொழிபெயர்த்











துத் தொகுத்து 'ஆட்சிச் சொல் அகராதி' என்னும் பெயரில் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். மேலும், இவ்வியக்ககத்திலுள்ள மொழி பெயர்ப்புப் பிரிவினால் எல்லாத் துறைத் தலைவர்களாலும் அனுப்பப்படும் சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள் படிவங்கள் முதலியன மொழி பெயர்க்கப்படும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

### ஆய்வுப் பணி

தமிழ் மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயல் படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கு எந்த அளவு செயல் படுத்தப் படுகிறது என்பதை ஆயவும், அவ்வாறு செயற்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளைக் களைந்து அவர்களுக்கு வழிகாட்டவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆய்வுத் தனி அலுவலரை நியமித்து ஆய்வு நிகழ்த்தி ஆணையிட்டுச் செயற்பட்டு வருகிறது.

### தமிழ்நூல் விவர அட்டவணைப் பிரிவு

1867-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களின் விவர அட்டவணை தொகுக்கும் நோக்குடன் தமிழ்நூல் விவர அட்டவணைப் பிரிவு என்ற இப் பிரிவு தொடங்கப் பெற்றது. 1867-ஆம் ஆண்டு முதல் வெளியாகிப் பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் அந்நூல்கள் அனைத்தும் பொருட் பாகுபாடின்றிப் பதிவு செய்யப்பட்ட கால அடிப் படையில் ஒருங்கே கட்டி வைக்கப்படுகின்றன. இவை ஆவணக் காப்பகத்திலிருந்து, பெறப்பட்டுப்பொருட் பாகுபாடு செய்யப்பட்டு, நூல்களைப் பற்றிய குறிப்புகளுடனும், நூல் அகராதி வரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலியவற்றுடனும், தமிழ் நூல் விவர அட்டவணை என்ற பெயரில் வெளியிடப் பெற்று வருகிறது. 1867-முதல் 1900 வரை பதிவு செய்யப் பட்ட நூல்கள் பற்றிய குறிப்புகள் 'முதல் தொகுதி' என்ற பெயரிலும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப்பட்டவை 'இரண்டாம் தொகுதி' என்ற பெயரிலும் வெளியிடப் பெற்றன. மூன்று, நான்கு, ஐந்து தொகுதிகள் அச்சிடப் பெற்று வருகின்றன. 1867-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய 'மர்டாக்' நூல்கள் அட்டவணையுடன், 'டெய்லர்' நூல் அட்டவணை, பிரிட்டன் தொல் பொருட் காட்சிச் சாலையிலுள்ள தமிழ் நூல்களின் அட்டவணை ஆகிய வற்றையும் இணைத்து வெளியிட்டுள்ளது.

### நூல் வெளியீட்டுத் திட்டம்

"செந்தமிழில் புதுப்புது நூல் விளைத்தற்குச் செல்வத்தைச் செலவு செய்தால் நம் தமிழ்நாடு உயராதோ, நலிவெல்லாம் தீராவோ" என்று வினவினர் பாவேந்தர் பாரதிதாசன். அவ் வினாக்களுக்கு விடையிறுக்கும் வகையில் தமிழ்நாடு அரசு இவ்வியக்ககத்தின் வாயிலாகச், சிறந்த தமிழ்நூல் வெளியிடுவோர்களுக்குப் பொருளுதவி புரிந்து வருகிறது. அச்சிடத் தகுந்ததென வல்லுநர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலை அச்சிட ஆகும் செலவில் பாதி அல்லது ரூபாய் 2,000 வழங்கித் தமிழில் புதுப்புது நூல் வெளிவர வழி வகுக்கின்றது.

### நூல்களுக்குப் பரிசளிப்பு

தமிழ்மொழிக்கு ஆக்கம் தேட விரும்பிய பாரதியார், 'இறவாத பெரும் நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்' என்று ஆணையிட்டார். புற்றீசல் போல் நாள் தோறும் ஆயிரக் கணக்கான நூல்கள் வெளி வருகின்றன. ஆனால், அவற்றுள் சிலவே காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப் படாத நிலையில் எதிர்நீச்சல் போட்டுக் காலத்தை வென்று நின்று வாழ்கின்றன. இத்தகு சீரிய திட்பமும், நுட்பமும் மலர்ந்து மணம்பரப்ப நூலாசிரியர்களாகிய சான்றோர்களை ஊக்குவிப்பது அரசின் கடமையன்றோ? எனவே, ஆண்டு தோறும் வெளி வரும் நூல்களை 21 தலைப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு தலைப்பிலும் வெளிவந்த சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து முதற்பரிசாக ரூ. 2,000, இரண்டாம் பரிசாக ரூ. 1,000 வழங்குவதென முடிவெடுத்துச் செயலாக்கிக் கொண்டு வருகிறது.

### தமிழில் சிறந்த வரைவுகள் எழுதுவோருக்குப் பரிசு

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் வரைவுகளைத் தமிழில் எழுதித் தமிழ் வளர்ச்சி இய

க்கம் வழிவகுத்து வருவது யாவரும் அறிந்ததே! அவ்வாறு எழுதும்போது எழுதுகின்ற அலுவலர்கள் அவ்வரைவுகளைத் தெளிவாகவும், சீரிய முறையிலும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். இத்துறையில் அவர்களை ஊக்குவிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் வரைவுகளைத் தமிழில் எழுதுபவர்களுக்கு ரூ. 500 பரிசு அளித்து வருகிறது.

### பயிற்சி வகுப்புகள்

அலுவலக ஊழியர்கள் வரைவுகளைத் தமிழில் எழுதப் பயிற்சி கொடுப்பதற்காக மிகுந்த அளவில் ஊழியர்கள் பணி புரியும் மின்வாரியம், தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் போன்ற இடங்களில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. இவ் வகுப்புகளில் வரைவுகளைத் தமிழில் எழுதும் முறைகளும், தமிழில் எழுதும் போது ஏற்படும் சிக்கல்களை நீக்கும் வழி வகைகளும் விளக்கப்படுகின்றன.

### வரலாற்று வெளியீட்டகம்

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி' என்பார்கள்; ஆம். தமிழினம் காலத்தாலும், கருத்தாலும் மிகமிக மூத்த இனம்.

'தொன்று நிகழ்ந்தது
அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள்
என்றுண ராத
இயல்பினளா மெங்கள்தாய்'

என்று பாரதியார் கூறியது தமிழுக்கும், தமிழினத்திற்கும் சாலப் பொருத்தமுடையதாகும்.

பொதுவாக இந்திய வரலாற்றின் தொடக்கமும், நாகரிகமும் தொடங்க வேண்டிய இடம் காவிரிக்கரையே தவிர கங்கைக் கரையன்று. உயர்ந்த நாகரிகத்தின் பிறப்பிடமும் தமிழகமே என்பதை வரலாற்று வல்லுநர் பலரும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். எனினும், தமிழகத்தின் தொன்மையான வரலாறு— தொடர்பான வரலாறு இதுகாறும் தொகுக்கப்படவில்லை என்பது ஒரு மா பெருங் குறையாகும். தொன்மைச் சிறப்புடைய தமிழக வரலாறு, இந்திய வரலாற்றில் ஆங்காங்கே சில இடங்களில் நிழலாக இழையோடிக் காணப்படுகின்றன. அவ்வளவுதான்.

தமிழக மூவேந்தர்களான சேர, சோழ பாண்டியர் தம் ஆட்சிக் காலத்தையும், அவர்தம் ஆட்சியின் போது தமிழகம் தகுதி, சிறப்புப் பெற்றிருந்தது. உலகோடு தொடர்பு கொண்டு உலகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தது என்பதனையும், தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்குக் காணப்பெறும் சில குறிப்புகளைக் கொண்டு நாம் உணர முடிகிறதே தவிர, வரலாற்றுப் பெருமை முழுவதையும் நாம் அறிய முடியவில்லை. அறிய வாய்ப்பில்லை—ஆதாரப் பூர்வமான வரலாறு எழுதப்படவில்லை. இந்திய வரலாற்றைத் தொகுதி தொகுதியாக எழுதிய பல வரலாற்றுப் பேராசிரியர்கள் கூடித் தொன்மை மிக்கத் தமிழக வரலாற்றைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே பார்புகழும் பேறு பெற்ற தமிழ் நாகரிகத்தை ஒரு சில பக்கங்களில் தொட்டுக் காட்டிச் சென்றுள்ளனர். அவ்வளவுதான்!

மேனாட்டுக் கொலம்பசும், மெகல்லனும் கடற்பயணம் மேற்கொள்ளு முன்பே, முதன் முதலாக நியூசிலாந்து நாட்டைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே என்ற உண்மையை ரஷ்யர்கள் கண்டுபிடித்துக் கூறிய பின்னரே நாம் நமது கப்பல் கட்டும் கலையின் மூப்பை எண்ணி வியக்கின்றோம்!

தமிழகத்திற்குத் தனி வரலாறு—தமிழகத்தின் வரலாறு எழுதப்படவில்லை என்ற குறை பலகாலமாக இருந்து வந்தாலும், இவ் வரலாறு எழுதப்பட வேண்டும் என்னும் கோரிக்கை அவ்வப்போது பலரால் வற்புறுத்தப்பட்டு வந்திருந்தாலும், பல ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் இதனை வலியுறுத்தி வந்திருந்தாலும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டிய போது, தென்னகத்திற்கென்று தனி வரலாறு எழுதப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில், சில பேராசிரியர்களும், தமிழ் அறிஞர்களும் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இதற்கென 7 இலட்ச ரூபாயையும் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றுப் பிரிவின் கீழ்ச் செயற்படும் இக்குழு, 'வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம், என்னும் தலைப்பில் நில அமைப்பின் வரலாறு' பழைய கற்காலம், புதிய கற்காலம், பெருங் கற்காலமும் உலோகக் காலமும், இன மரபு வரலாறு, அரப்பா நாகரிகம் ஆகிய பொருள்களில் கட்டுரை முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குழுவின் முயற்சிக்கு வெற்றி பெற வாழ்த்துவதன் மூலம், வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை நாம் கண்டு மகிழ்வோமாக!

—சனியஜி.

---

### மாவட்ட திட்டப் பிரிவுகள்

கீழ் மட்டத்திலிருந்தே திட்டமிடும் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே திட்டமிடும் பணி பயனுள்ள வகையில் உருவாக முடியும் என்பதை முழுமையாக உணர்ந்து, மாநிலத் திட்டக் குழுவின் ஒரு பகுதியாக, மாவட்ட திட்டப் பிரிவுகளை நாம் அமைத்துள்ளோம். இதற்காகும் செலவுக்காக ''மானியம் 8''ன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*(1972–73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.)*

---

### மறுவாழ்வு இல்லங்கள்

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சிறப்புக் காப்பு மறுவாழ்வு இல்லங்கள் இரண்டினை நிறுவ அரசு அனுமதித்துள்ளது. இதற்கு ''மானியம் 42''ன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*(1972–73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.)*

# உண்மையின் சந்நிதி

8

சேர்ம. மகாதேவன்.

"என்னங்க எடுத்து வச்சு எவ்வளவு நேரமாகுது. வந்து சாப்பிடாம, திண்ணையிலே குந்திக்கிட்டிங்களே?''

''ஊரே வெந்துக் கிட்டிருக்கு. நீ சோத்துலேயே நில்லு''.

'' நீங்கதான் வாசல்லே நின்னு என்ன செய்யப் போறிங்களாம்.''

''அடிப்படையிலேயே பலமா ஆரம்பிச்சிருக்கே. நாமதான் செய்யறதுக்கு என்ன இருக்கு?''

'' அது என்னமோ?—மேலே போறவனுக்குத்தான் வெளிச்சம். அந்த மாதிரி ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு, அந்தச் சீக்காளி பொன்னையாவை—ரெத்தம் கக்கும் படியா அடிச்சாங்கன்னு என்னாலே நம்ப முடியலேங்க.''

'' பொல்லாக் கண்டவளாட்டம் பேசுறேயாக்கும். அடிச்சுக் கீழே தள்ளிப் போட்டு, பாண்டியனும்-லிங்கமும் ஓடுறதைக் கண்ணாலே பார்த்திருக்காங்க. இனிமே இல்லேயின்னு போயிடுமா ? அதுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே, முல்லேக்கால் கரையிலே போய்க்கிட்டிருந்த பெரிய வீட்டு வண்டியை ரெண்டு பேருமே முன்னாலே நின்னு மறிச்சிருக்காங்க. 'நீ' 'நான்'ங்கிற அளவுக்குத் தகராறு நடந்திருக்கு. எல்லாத்துக்கும் சாட்சி இருக்காம். ''

'' தெருவுக்குத் தெரு குழாய் போடப் போறாங்கன்னு நினைச்சுக்கிட்டிருக்கறப்ப, இப்படி வந்து சேர்ந்திருக்கே.''

'' இனிமே ஒரு மொத்தமா வந்து சேரும், காத்துக்கிட்டே இரு. பக்கத்துக் கிராமங்களிலேயிருந்து ஆணும் பெண்ணுமா வந்து கூடி இருக்காங்க. ஊரைச் சுத்தி மந்தைத் தோப்பெல்லாம் அவங்க தலேகளாத்தான் தெரியுது. புதுசா தலேயெடுத்திருக்கானே, அவன் சொன்னாப் போதும். அடுத்து என்னென்ன நடக்கணும்னு இருக்கோ. ''

'' என்னமோ நடந்திட்டுப் போகுது. நீங்க வாங்க. எங்கே நீங்க எந்திருச்சு வாசலுக்குப் போறீங்க.''

'' பொன்னையாவைத் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போன வண்டி வருது பாரு. முத்தையாதான் போயிட்டு வாராரு. ''

'' என்ன ஆச்சோ தெரியலேயே? ''

'' வண்டிக் கூடவே பெரிய வீட்டுக்குப் பொயிட்டுவரேன். அப்பத்தான் விவரம் புரியும்.''

'' ஊரெல்லாம் கும்பலும் கூச்சலுமா இருக்கு, வேறெ எங்கேயும் போயிராதிங்க. ''

*　*　*

## சூழ்ந்து வரும் பொல்லாங்கு

தனித்தனியே நினைத்து, அதிலேயே லயித்து விட்ட மௌனம் அங்கு நிலவுகிறது.

மேல்மாடியில், முன் அறையில், சாய்வு நாற்காலியில் உத்திரத்தைப் பார்த்தவாறு குருபாதம் சாய்ந்திருக்கச் சற்றுத் தள்ளி, வேலாயுதமும், மற்றவர்களும் அமர்ந்துள்ளனர். சிலர் சுவரோரமாக நின்று கொண்டிருக்கின்றனர்.

கீழே திண்ணைகள் கொள்ளும் மட்டும், நெருக்கியடித்துச் சேர்ந்து விட்ட கும்பலிருந்து வரும் 'சலசலப்பு' மேலேயும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

யாரோ-வேற்றாரான் படையெடுத்து வந்து, ஊருக்குள்ளேயே பாசறை அமைத்திருப்பது போலவும், இந்த எதிரிகளை முறியடிக்க என்னென்ன செய்யலாம் என்பதில், இங்கே, இப்படியொரு தீவிரம் நிறைந்திருக்கிறது.

முன்பெல்லாம் சுற்றுப் பட்டிக்காரர்கள், இந்தப் பெரிய வீட்டின் வாசலிலே, வாய்மொழியை எதிர்பார்த்து விழுந்து கிடப்பார்கள். இன்றைக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு, ஊருக்குள்ளேயே வந்து நிற்கிறார்கள். இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் நிம்மதியாகக் குடி இருக்க முடியுமா ?

மேலே சேர்ந்திருப்பதும் ஊருக்குள் குறிப்பிடத் தக்க புள்ளிகள் தான். இதற்கு முன்பாக, எதற்காகவும், குருபாதத்தோடு இந்த அளவுக்கு ஒட்டி உட்கார்ந்தவர்களும் அல்ல.

எல்லாருடைய பார்வையும், குருபாதத்திடமே லயித்திருந்தது. குருபாதம் உடலேக் குலுக்கிய பெரு மூச்சோடு திரும்பித் தம்பியைப் பார்த்தார்.

இதை எதிர் பார்த்திருந்ததைப் போல, வேலாயுதம் மெதுவான குரல்லே ஆரம்பித்தார்.

'' வண்டியை மறிச்சு நிறுத்தினப்பவே 'கீழே இறங்கு'ன்னு சொல்ற அளவுக்கு நின்னான். அதிகமாகப் பேச்சு வச்சுக்காமலே விலகிப் போயிட்டோம். பின் தொடர்ந்தே வந்து இப்படிச் செய்வான்னு யாருமே எதிர்பார்க்கலே. பார்த்திருக்க, பொன்னையா ரெண்டுதடவை இரத்தமாகக் கக்கிட்டான். அடிபட்டுப் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறவனை, வீட்டுக்குள்ளேயே வச்சு வைத்தியம் செய்துக் கிட்டிருக்க முடியுமா ? இதையெல்லாம் நினைச்சுத்தான், அவசரத் தோட, மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்திச்சு. '' என்று சொல்லி நிறுத்தினர் வேலாயுதம்.

குருபாதம், நெற்றியில் அரும்பியிருந்த வேர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டார். உள்ளுக் குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த ஆவேசம் பொங்கித் தட்டியது.

'' மெத்தப் படிச்சவன். அவனுக்கு எல்லா வித்தையும் தெரியும். அதான் அவன் தலேயெழுத்தை அவனே எழுதிக்கப் போறான். எல்லாமே கண் முன்னாலே நடக்கணும்னு இருக்கிறப்ப, இடையிலே நிக்குமா? நடக்கட்டும்.'' என்றார் ஆங்காரமான குரலில்.

வேலாயுதம் பக்குவமாக மேலும் சொன்னார்.

''இதுக்கு மேலேயும், ஊருக்குள்ளே பெரும் கலகத்தை மூட்டி விடவும் தயாரா நிக்கிறான்.'' என்றார்.

குருபாதம் நிமிர்ந்து பார்த்தார். அவரது விழிகள் கோவைப் பழங்களாகச் சிவந்திருந்தன.

''அவன் இவ்வளவுக்குத் துணிஞ்சு, மேலே வந்து விழும் போது, நான் குறுக்கே நிப்பேன்னு நினைக்கிறியா? எனக்கு அப்படியொரு மகனே பிறக்கலையின்னு எப்பவோ முடிவு செய்திட்டேன். இனி எதுவுமே பாக்கி இல்லை. வெட்டுக் குத்துன்னு தொடங்கியிருக்கும் போது, தலை குனிஞ்சு போக வேண்டிய அவசியமும் இல்லை.'' என்றார் படபடப்புடன்.

வேலாயுதம் வலப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்.

நெருங்கி உட்கார்ந்திருந்த, ஐயம் பெருமாளுக்கு வயது, ஐம்பதுக்கு மேலிருக்கும். மண்டையில் பாதி நெற்றியாக வழித்து விட்டிருப்பார். எதையும் கிண்டலும், கேலியுமாகப் பேசிக்கொண்டிருப்பது அவருக்குக் கைவந்த கலையாகும். அவசரக் கோலத்தில், ஊராட்சியிலும் உறுப்பினராகி, வேலாயுதத்துக்குப் பக்க பலமாக உட்கார்ந்திருப்பவர்.

அவரும் இடையிலே புகுந்து வேறொரு முத்திரை குத்தினார்.

''இந்த லிங்கத்தோட அப்பன் காடுபட்டியான், நானும் பார்த்திருக்கேன், இந்த வீதி வழி நடக்கவே அஞ்சுவான். அவன் பெத்த மகனுக்கு, வண்டியை மறிச்சு நிறுத்துற அளவுக்குத் தைரியம் வந்திருக்கு. ஏன்னா, அவனை இப்பவும் இங்கே கண்ணுக்கு முன்னாலே குடி இருக்க விட்டிருக்கோமில்ல .......... அதுனாலே. பொன்னையாவையும் அடிச்சுக் குற்றுயிராத் தூக்கிப் போட்டதுமில்லாம, ஆளுகளைக் கொண்டாந்து வச்சு, ஊரையே கொள்ளையடிக்கிற அளவுக்கு வந்து நிக்கிறான்.'' என்றார் ஒரே மூச்சில். எங்கே தட்டினால் குருபாதம் சீறியெழுவார் என்பது அவருக்குத் தெரியும். இந்தப் பெரிய வீட்டிலே பிறந்து, அரசியாகவே வாழ்ந்த மகளை, சிறையெடுத்தல்லவா சென்றிருக்கிறான். ஊருக்கே, இனத்துக்கே தலை குனிவு அன்றைக்கே ஆரம்பித்து விட்டதே!

''இன்னும் என்ன பாக்கி, இருக்குன்னு இவன் இதை ஆரம்பிச்சிருக்கானே?'' என்றார் வேலாயுதம் பெருமூச்சோடு.

''இப்ப ஆவரம்பட்டி—கருத்தாண்டிபட்டிகாரங்க அத்தனைப் பேரும் ஊருக்குள்ளேதான் இருக்காங்க. உயிரைக் கொடுக்கத்தான் வந்திருக்காங்களாம்.

சொல்லிக்கிறாங்க.'' என்றான்
பின்னால நின்னு கொண்டிருந்
சொக்கையா இவனுமொரு கை
காரன்.

''திமிராப் பேசுறவனை வெ
டுங்கடா—வர்றது வந்திட்டு
போகுது. ஏன் சொல்லிக்கிட்டே
இருக்கே'' என்றார் குருபாதம்
எரிச்சலோடு.

அப்போது வாசலில் வண்
வந்து நிற்கும் சந்தடியும், பல
பேசும் குரலும், ஒன்றும் புரிய
தபடி மாடிக்குக் கேட்டது
கீழிருந்து மேல் மூச்சோ
மாடிக்கு ஓடிவந்து, ''முத்தைய
வந்திட்டாரு'' என்று முன்னத
கச் சேதி கொண்டு வந்தான்
ஒருவன்.

சற்றுக் கழித்துப் படியே
வந்த முத்தையாவை எல்லாரு
ஆவலுடன் திரும்பிப் பார்
தனர்.

உருட்டி முத்தையாவின் முக
வாடியிருந்தது. செத்துக்கொ
டிருப்பவனையும் தூக்கிப் போ
டுக் கொண்டு, வண்டியில் போ
வந்த களைப்பாக இருக்கலாம்
அதிலும், குருபாதத்தோடு, எ
றைக்குமே ஒட்டி உறவாடி
தில்லை. இன்றைக்குத் தலையி
சுமந்து கொண்டிருக்கும் போது
விலகிப் போக முடியுமா?

வந்து நிற்கும் மாமனுக்கு
பக்கத்திலே இடம் கொடுத்
''பொன்னையா எப்படி இரு



கான்?'' என்று ஆவலோடுதான் கேட்டார் வேலாயுதம்.

முத்தையா, முகத்தைத் துடைத்துக் கொண்டு குருபாதத்தை ஏறிட்டுப் பார்த்தார். துடைத்துவிட்ட முகம் மீண்டும் 'குப்' பென்று வியர்த்தது.

''என்ன ஆச்சு ?'' என்று குருபாதம் அதட்டலாகவே கேட்டார்.

முத்தையா தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''பொன்னையாவுக்கு அடி பலமாகத்தான் விழுந்திருக்கு. நுரையீரல் சேதப்பட்டு, நெஞ்சுக்குள்ளே ரெத்தம் கட்டியிருக்காம். போலீசிலேயும் இதே வாக்குமூலம் கொடுத்திருக்கான். அதுக்குப் பிறகு சரியான நினைவே வரலே அவனுக்கு'' என்று சொல்லி நிறுத்தினார் முத்தையா.

''உயிருக்கு ஆபத்துன்னு சொன்னாங்களா ?'' என்று அவசரத்துடனே கேட்டார் குருபாதம்.

''நெஞ்சிலே ரெண்டு எலும்பு கூட வேறே முறிஞ்சு போயிருக்காம். எதையும் உறுதியாச் சொல்ல முடியாதுன்னு டாக்டர் சொல்கிறார். அவன் பெண்சாதியும், இன்னம் ரெண்டு பேரும் பக்கத்திலே இருக்காங்க. போலீசும் இருக்கு'' என்றார் முத்தையா.

ஒருவரும் பேசவில்லை.

குருபாதம் முன்னால் கவிழ்ந்து அசையாமல் உட்கார்ந்து விட்டார்.

''அடுத்து என்ன செய்யறது?'' என்று மெதுவான குரலில் கேட்டார் வேலாயுதம்.

குருபாதம் தலை நிமிர்ந்தார்.

''தகப்பன் பிள்ளைங்கிறதையெல்லாம் இந்தக் கட்டத்திலே நினைக்க வேண்டியதே இல்லே. இடையிலே எளியவன் அடிபட்டுக்கிடக்கான். அதுக்கு ஆக வேண்டியதைப் பாரு'' என்றார் அப்போதைக்கு ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல.

இவ்வளவு போதும் என்பது போல உருட்டி முத்தையா முன்னதாகவே எழுந்தார்.

''அப்ப நானும் வாரேன்'' என்று சொல்லிவிட்டு வேலாயுதமும் புறப்பட்டார். மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்து போய் விட்டனர்.

தனிமை. இதுவே எப்பொழுதும் தேவையாகி விட்டது.

நினைத்து நினைத்து இப்படியே இற்றுப் போய்...

அதுவரையிலும் இந்த மண்ணிலே விழுந்து புரண்டு கொண்டே இருக்க வேண்டுமா ?

ஆயாசத்தோடு முன்னால் கவிழ்ந்து, நெற்றியை விரல்களால் அழுத்திக் கொண்டார், குருபாதம்.

வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது அவருக்கு.

பெற்ற மகள் — சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போனதிலிருந்துதான் இந்தக் கோழைத்தனம் வந்து கூடிவிட்டது. நெஞ்சிலே அடிப்பதற்கு, அதைத் தானே தொட்டுக் காட்டிப் பேசுகிறான் வருகிறவனெல்லாம்.

ஒன்றல்ல, இரண்டுமே போய் விட்ட பிறகு, தனிமையில் இந்த அறைக்குள்ளே விழுந்து கிடக்கும் போது, பின் தொடர்ச்சியாக என்னவெல்லாம் நடக்க இருக்கிறது?



இந்த மண்ணை விட்டு, எதுவுமே காதில் விழாத இடத்துக்கு எட்டிப் போய்விட வேண்டும். அங்கேயும் நிம்மதி இருக்குமா?

நாளை பொன்னையா கண்ணை மூடினால் ஆகப் போவது கொலை வழக்கு. ஊரறிய நடந்ததைத் திரை போட்டு மறைக்க முடியுமா? அதையும் கண்ணால் பார்த்து....

குருபாதத்துக்கு இருமல் வந்தது. தொடர்ந்து உடல் குலுங்க இருமினார்.

வேறிரு கரங்கள் அவரது தலையைத் தாங்கிக் கொண்டன. ஓய்ந்து திரும்பிய போது, தலைக்கு மேல் குனிந்து கொண்டிருந்த ஐயனு, ''மருந்து எடுத்தாரட்டுமா?'' என்று கேட்டான்.

''போடா......நீயொரு வெட்டிப்பய...தம்பி, தம்பின்னு திரிவியே. இப்ப என்னடா ஆச்சு?'' என்று படபடப்போடு கேட்டார் குருபாதம்.

ஐயனு அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஊரே கூடி வந்து எவ்வளவோ சொல்லிச் சென்றிருக்கும்போது, அந்தக் கொதிப்பு எளிதில் அடங்குமா?

''என்னடா?'' என்று மேலும் கேட்டார் குருபாதம்.

ஐயனுவின் கண்கள் கலங்கின.

''நம்ம தம்பி—இந்தக் காரியத்தைச் செய்திருக்காதுங்க. திட்டம்போட்டுச் சதி செய்யிறாங்க.'' என்றான் உதடுகள் துடிக்க.

குருபாதம் கோபத்தோடு எழுந்தார்.

''இப்படியே சொல்லி வழி விட்டுத்தானடா அவனைக் கூண்டிலே நிறுத்தி இருக்கீங்க. அடிபட்டவன் தெளிவா வாக்குமூலம் சொல்லி இருக்கான். அடிச்சிட்டு ஓடுறதைப் பார்த்திருக்காங்க. வேறே என்னடா வேணும்?'' என்ற குருபாதம், நிலைப்படியோரமாகப் போய் நின்று, சற்றுநேரம் வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர், சிவகாமியம்மாளின் நினைவு வந்தவராகக் கீழே போகத் திரும்பினார்.

ஐயனுவும் ஒன்றும் சொல்லாமலே அவரைப் பின் தொடர்ந்தான். அவனும் அறியாமல், கீழே அப்படியொரு அதிர்ச்சி காத்திருக்குமென அவன் எதிர்பார்க்கவே இல்லை.

பின் கட்டிலிருந்து 'சிவகாமி' என்றழைத்துக் கொண்டே முன் பக்கம் வந்தார் குருபாதம்.

வீட்டில் எங்கும் சிவகாமியம்மாளைக் காணவில்லை. பக்கத்து வீடுகளுக்குக் கூடப் போய் நிற்கும் பழக்கமும் இல்லையே.

'சிவகாமி' என்று ஆவேசத்தோடு அழைத்த குருபாதம், கோபம் கொந்தளிக்கப் பின்னால் நின்ற ஐயனுவின் பக்கமாகத் திரும்பினார்.

''எங்கேடா—அவள் யெங்கே? நீயும் போடா—அவளை மகன் கிட்டேயே இருக்கச் சொல்லு. நான் தனியாவே கண்ணை மூடிக்கிறேன்.'' என்று படபடப்போடு சொன்னவர், ஒரு நொடியில் உடலே தளர்ந்து விட, நிதானமில்லாமல் பக்கச் சுவரில் சாய்ந்தார்.

பதறிப்போன ஐயனு, ''ஐயா' என்றலறியவாறு அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

(வளரும்)


# காலக் கண்ணாடி

[illegible] வின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற வடுக்களை [illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகும் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

[illegible]த்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த வரலை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா




# எழில் கொஞ்சும் பூண்டி

**வெ.நாமதேவன்**

அன்று ஞாயிற்றுக் கிழமை.

மணிமாறனின் சிந்தையில் சிறு எண்ணக்கதிர் ஒன்று பளிச்சிட்டது. 'கனிமொழி! இன்றே, இப்பொழுதே, ஒரு எழில் மிக்க இடத்திற்கு உன்னை அழைத்துச் செல்கிறேன். குற்றாலத்திற் கல்ல. ஆனால், குற்றாலத்தின் இனிமையும், உதகையின் உல்லாசமும், கோடைக் கானலின் அமைதியும் தவழும் இடம் அது!'

கனிமொழியின் பூவிழிகள் சற்றுநிமிர்ந்தன, எங்கேஎன்பது போல். .......................

'பூண்டி!'' என்றான் மணிமாறன்.

''பூண்டியா? .....''

''கனிமொழி! உணவு சிறிது சமைத்து எடுத்துக்கொள். இன்று காலை முதல் மாலை வரை அங்குதான் முகாம்''.

மணிமாறன் அவளுக்கு உற்சாகமூட்டினான்.

சுவர்க் கடிகாரத்தில் சிறிய முள் மூன்று விரல் அகலத்தைக் கடந்தது. ''காரியரில்'' உணவை எடுத்து வந்து பின் இருக்கையில் வைத்து விட்டுக் காரில் அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள் கனிமொழி.

''கனிமொழி! என்ன இவ்வளவு எளிமையா உடுத்திருக்கிறாய்! புதுப் புடவைகள், சோளிகள் உனக்குக் கிடைக்கவில்லையா?'' என்றான் மணிமாறன்.

இந்தப் பூண்டிக்கு இந்தப் புடவை போதாதோ என்பது போல் இருந்தது அவள் பார்வை!

''எளிமையாக உடுத்தாலும் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?''

அவளுடைய சிரிப்பு............ அதில் மிதக்கின்ற சிலுசிலுப்பு.. குற்றாலத்தின் குளிர்ச்சி சாரல் தான் என்ன செய்யும்? அவனுக்கு இதமாகத்தான் இருந்தது. ஆனால் போகும் இடத்தை நினைத்துக் கொண்டாள் உடன் ஏமாற்றம் வந்து கவ்வியது.

பூண்டியாமே! ..................

எழில் கொட்டிக் கிடக்குமோ?

வெறும் ஏரிதானே! ..........

பரபரப்பு மிக்க மாநகரின் சாலைகளைக் கடந்து தமிழக நெடுஞ்சாலைத் துறையினரால் உருவாக்கப்பட்ட திண்மையும், அழகும் மிக்க பாதையொன்றில் கார் பறந்து கொண்டிருந்தது.

இருபுறமும் வயல்கள்....... என்றும் மனிதனின் வறுமை உணர்வை எண்ணிச் சிரிக்கும் வெட்டவெளிகள்.... ..மரங்கள் .....கிராமங்கள்......தோன்றி மறைந்தன.

திருவள்ளூருக்கு முன்னால் ஒரு திருப்பம். சென்னையிலிருந்து 59-வது கிலோ மீட்டரில் இருக்கும் பூண்டியைக் கார் நெருங்குகிறது.

சிறு எக்கர்கள், குன்றுகள் தோன்றுகின்றன. அரசினரின் ஆக்கத் திட்டங்கள் நடைபெறும் இடத்திற்குச் செல்கிறோம் என்ற சூழ்நிலை எழுகிறது. வலதுபுறம் ஓர் அழகிய கோயில்...அதனைக் கடந்து செல்லும்பொழுது இடது புறம் ஒரு சிறிய பூங்கா தோன்றுகிறது. பின்னர் இருபுறமும் வகை வகையான வண்ண மலர்களும், பசுமையான புல் வெளிகளும், அழகாகக் கத்தரித்து விடப்பட்ட மரங்களும் வனப்பினைச் சொரியும் சோலைகளும் தென்படுகின்றன.

''அத்தான்! இதுதான் பூண்டியா?''

''இது பூண்டியின் வாயில் கனிமொழி!''

சிறுவர்கள், பெரியவர்கள் குழுக்களாக அமர்ந்து கும்மாளமிடுவது தெரிகிறது.

ஆங்காங்கே, கார்களும், பேருந்துகளும், ஸ்கூட்டர்களும் பளிச்சிடுகின்றன.

பூண்டியைக் காண இவ்வளவு கூட்டம் வருவதுண்டா?

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அத்தான், நிறுத்துங்கள்!''

காரை நிறுத்தினான் மணிமாறன்.

''அது என்ன?''

''நம்மை மேளதாளத்துடன் வரவேற்கிறார்கள். நாதசுரக் குழு''.

''இசை கேட்கவில்லையே என்று திகைக்கிறாயா? அவர்கள் எல்லாம் சிலைகள்! அத்தனை உயிரோவியமாக வடித்திருக்கிறார்கள்!''

'களுக்' கென்ற சிரிப்புடன் காரிலிருந்து குதித்தாள் கனிமொழி.

''யானை! யானை!'' என்று மகிழ்ச்சியால் கூவினாள் அவள். கல்லால் வடித்த யானைகள் அங்கே வரிசையாக நின்று கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று பாவம் சிதைந்த கோலத்தில் இருந்தது. அதனைச் செப்பனிடாமல் அதனருகே ஒரு பலகையைத் தொங்கவிட்டிருந்தார் நிருவாகி. ''பள்ளிப்பையன் ஒருவன் இந்த யானையைக் கொன்றுவிட்டான். இதன் கதி மற்ற யானைகளுக்கும் நேர வேண்டாம்!''

நிருவாகிக்குப் பொறியியலோடு உளவியலும் தெரியும்போலும்.

சற்று நேரம் அங்கிருந்தால் கனிமொழி அழுதே விடுவாள் போலிருந்தது.

மணிமாறன் அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு வேறிடம் சென்றான்.

''அத்தான், இந்தப் பூங்கா, இங்கு மலரும் புது மலர்கள், விரிந்து கிடக்கும் புல் வெளிகள் எல்லாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன! குழந்தைகளும், இளையோரும் இங்குக் குதூகலமாக பவனி வருவதில் வியப்பேது?'' கனிமொழியின் மனத்தில் சுமை குறைந்தது. அது பூண்டியின் இனிமையில் சிறகடித்துப் பறக்கத் துவங்கி விட்டதை எண்ணி மகிழ்ந்தான் மணிமாறன்.

சிலைவடிவில் ஆங்காங்கு மனிதர்கள்....விலங்குகள், பறவைகளும் எழிலூட்டின.

''அத்தான் இங்கே மான் இருக்கிறதா?''

"இருக்கிறதே!" என்று அவளையே பார்த்தான் மணிமாறன்.

'குப்'பென்று அவள் கன்னங்களில் இரண்டு செம்பருத்திப் பூக்கள் பூத்தன. தோட்டத்தின் நடுவே, மரத்தாலான ஒரு பெரிய கூண்டு. அதனைச் சுற்றி பலர் நிற்கின்றனர். மணிமாறனும் கனிமொழியும் அங்கு விரைகின்றனர். உள்ளே, இராட்டினம் போன்ற ஓர் அமைப்பு. அது சுற்றுகிறது.

அடடே! ..................

குழந்தையைப் போலக் கை கொட்டிச் சிரிக்கிறாள் கனிமொழி!

"ஏரியைப் பார்க்கலாம் வா" என்று அவளை மணிமாறன் அழைத்துச் சென்றான். கண்ணுக் கெட்டிய தூரம் தெள்ளத் தெளிந்த நீர் தேங்கிக் கிடக்கும் அழகுதான் என்னே! இயற்கையின் திறனை எதிரே நீர் பறை சாற்றிக் கொண்டிருக்க, மனிதனின் அறிவிற்கும் அரைகூவலாகக் கம்பீரமான அணை நின்று கொண்டிருந்தது. அணையின் மேல் மெள்ளக் காரில் சென்றவாறே இருபுறத்து இனிமையையும் பருகினர் மணிமாறனும் கனிமொழியும். அணையைக்கடந்ததும், குடைபோன்ற அமைப்பில் வட்டமான மேடை, அதன் அருகே குழாய் ஒன்று. அதனைத் திறந்தபொழுது, வியப்பால் கனிமொழி மெய்சிலிர்த்துப் போனாள். மென்மையான வெறும் நுரை "புஸ்"சென்று வெளி வந்தது. தன் உள்ளங்கைகளில் அவற்றை ஏந்திய பொழுது அதுநீராக மாறியதைக் கண்டாள் கனிமொழி. சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தைகள் கூட்டம் அங்கே வந்து விட்டது.

பின்னர் குழாயடியில் ஒரே குதூகலம்தான்! வேறென்ன!

ஆண்களும், பெண்களும், பெரியோரும், சிறியோரும் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

நண்பகல் நேரம் அது!

கனிமொழி "காரியரை" எடுத்து உணவுப் பொட்டலங்களைப் பிரித்தான்.

"அத்தான்! என்னை மன்னிக்க வேண்டும். பூண்டிதானே என்று ஏதோ அவசரமாகச் சுவையில்லாமல் சிலவற்றைச் சமைத்துக்கொண்டு வந்து விட்டேன். அடுத்தமுறை வரும் பொழுது, பிரமாதமாக, இன்னும் சிறப்பாக .." அவள் முடிக்கவில்லை.

இந்த
இதழுடன்
இலவச
இணைப்பு

## அரவிந்தர் வரலாறு

"அமுதும் தேனும் எதற்கு? நாம் பூண்டியில் இருக்கையிலே நமக்கு?" என்றான் அவன்!

"கனிமொழி! புதுமைகளுக்கெல்லாம் சிகரமான ஓர் இடத்தைக்காட்டுகிறேன்! வா!" என்றுஅழைத்தான் மணிமாறன்.

அது பூண்டி நீரியல் ஆராய்ச்சி நிலையம்! பூண்டி நீர்த்தேக்கத்திற்கு மறுபுறத்தே அமைந்த அறிவியற் கூடம்!

"அத்தான் இதெல்லாம் என்ன?"

"கனி மொழி! 1945-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தக் கூடத்தில் நீரியல் துறையில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன"

"அப்படியா?"

"கனிமொழி! நம்முடைய நாடு விவசாய நாடு. நம் வாழ்வுயர வரப்புயர்ந்தால் மட்டும் போதாது. அங்கு நீர் உயர, நீரினை எப்படிச் சேதமின்றிச் சேகரித்துப் பயன்படுத்த வேண்டும் என்ற அறிவு உயர வேண்டும். அந்தப் பணியினைச் செய்கிறது இந்த நிலையம்."

"கனிமொழி! தமிழகத்தைச் சுற்றியுள்ள கடலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆறுகள் சென்று கலக்கின்றன என்ற சேதி தெரியுமா உனக்கு? இந்த ஆறுகளில் பாயும் நீரைச் சிறப்பானவழிகளில்சேகரிக்க இந்தநிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாகத் தமிழகத்தில் மட்டுமின்றி அகில இந்தியாவிலும் அரும்பயன்கள் விளைந்திருக்கின்றன. இந்த நிலையத்தின் ஆராய்ச்சிக் குறிப்புகள், உலக நீரியல்துறை நூல்களிலும் இடம் பெற்றுப் பலரின் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றன".

கனி மொழியின் ஆர்வம் பெருகிக்கொண்டே போயிற்று.

"நீர்த் தேக்கங்களில் வெள்ளம் புரளும் பொழுது, மிகுதியான நீர் வடிகால்கள் வழியாக வெளியேறும். இந்த வடிகால்களின் திருப்பங்களில் குமிழிகளும் வெற்றிடங்களும் தோன்றி நீரின் வேகம் அதிகமாகி வடிகால்களையே சேதப்படுத்திவிடும். இதனைத் தவிர்த்துச் சரியான முறையில் வடிகால்களை அமைக்க இங்கு வியத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன."

"முப்பது முதல் நூறு மீட்டர் உயரத்திலிருந்து வடிகால்கள் மூலமாக நதிப்படுகையை அடையும் நீர், இயக்க ஆற்றலைப் பெறுகிறதல்லவா? அந்த வேகத்தால் நதியின் கங்கு கரைகள் அழிக்கப்படுவது உண்டு. எனவே, வடிகால்களில் வெளியேறும் நீரின் வேகத்தைச் சிதறடிக்க இந்தப் பூண்டி நீரியல் ஆராய்ச்சி நிலையத்தில் பல வெற்றிகரமான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன."

"கனிமொழி! மதகுகள் என்றால் அறிவாய் நீ! நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ள நீர் பாசனத்திற்காக வெளியேற்றும் வழிஅது. மதகுகளை நீரின் போக்குவரத்தால் சேதமுறாது செம்மையாக அமைக்கவும் இங்கே ஆராய்ச்சிகள் நடக்கின்றன. மாதிரி மதகுகளும், கண்மாய்களும் இங்கே உருவாக்கப்படுகின்றன. அவற்றில் சிறந்தவையாகத் திகழ்பவை தமிழகத்தில் மட்டுமன்றி ஆந்திரத்திலும், கேரளத்திலும் பல அணைக்கட்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மதகுகள் ஓரளவே திறக்கப்படும்பொழுது, அணையின் வாயில்களில் பெரும் அதிர்ச்சிகள் ஓசை மிக்கதாய்ச் சில நேரங்களில் பூகம்பத்தைப் போன்றதாய் இருக்கும். இதனால் அணையின் கட்டுமானம் பல வீனப்பட்டுப்போகும்.

எலக்ட்ரானிக் சாதனங்களைக் கொண்டு இந்த அதிர்வுகளைப் அளந்து, இவற்றைக் குறைப்பதற்கான வழி வகைகளை பூண்டி நிலையம் முயன்று வருகிறது.''

''நீர்த் தேக்கத்திற்கு அருகே, நீரின் இயக்க ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் நிலையங்களும் உண்டே! அத்தகைய மின் நிலையங்களை நோக்கிப் பாய்கின்ற கணவாய்கள் எப்படி அமையவேண்டும் என்பதிலும் பூண்டி நிலையம் தீவிரக் கருத்துச் செலுத்துகிறது.''

''கண்மாய்களில் வயல்களை நோக்கி அணையிலிருந்து பெறுகின்ற நீர்பாயும் பொழுது, நீரில் கலந்து வந்த மண்ணும் வண்டலும் கண்மாய்களில் படிந்துவிடும். இதனால் கண்மாய்களின் கொள்ளளவு குறைந்து போகும். இதனைத் தவிர்க்கப் பூண்டியில் நிகழ்ந்த ஆராய்ச்சிகளின் விளைவாகத் தலைமை மதகுகளின் முன்னால் வண்டல் வடிப்பான்களும், கண்மாய்களில் ஆங்காங்கே வண்டலைத் தவிர்க்கும் பொறிகளும் பொருத்தப்படுகின்றன. இவ்வகையில்



கல்லணைக் கண்மாயும், மணியாறு கண்மாயும் பூண்டி நிலையம் தரும் புகழ்மிக்க சான்றுகளாகும். கண்மாய்களின் அமைப்பு, அது தாங்கி வரும் நீரின்வேகத்தையும், ஓடுகின்ற மண்ணின் தரத்தையும், பாய்கின்ற **நிலத்தின் ஏற்றத் தாழ்வை**யும் அவற்றிற்கு அருகே உள்ள நீர் நிலையங்களின் மட்டத்தையும், கண்மாய்களில் ஏற்படக் கூடியநீர்க்கசிவையும் ஆவியாதலையும் பொருத்ததாகும். கடந்த 25 ஆண்டுகளாகத் திட்டங்கள் நிறைவேறும் இடங்களில் உள்ள மேற்கூறிய சூழ்நிலைகளுக்கேற்ற கண்மாய்களின் வடிவமைப்புகளின் மாதிரிகளைப் பூண்டி நிலையம் உருவாக்கி உரிய கருத்துரைகள் வழங்கி வருகிறது.''

''ஆறுகளில் அதிகமாக நீர் பாயும் பொழுது, அவற்றின் கரைகள் உடைந்து கிராமங்கள் மூழ்குவதும் உண்டு. பூண்டி நிலையம் ஆறுகளின் கரைகளைக் காக்கும் வழிகளை வகுத்துத் தருகிறது. பரந்து கிடக்கும் நீர் கதிரவனின் வெப்பத்தால் ஆவியாவது இயற்கைதானே! ஆனால், பூண்டியில் மட்டும் அவ்வாறு ஆவியாகின்ற நீரின் மதிப்பு ஒரு கோடி ரூபாய் என்றால் பொறுக்குமா, பொறியியல் வல்லுநரின் நெஞ்சம்! பகலவனிடமிருந்து நீரைக்காக்க இங்கே பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ''ஹெக்சாடிகனால்'' என்ற இரசாயனத்தை நீரின் மீது தூவி விடுகிறார்கள். நீரின்மேல் ஒரு மிக மெல்லிய திரை படிந்து விடுகிறது. இதனால் அருந்தும் நீருக்கோ, நீர் வாழ் இனங்களுக்கோ ஒரு கேடும் இல்லை. நீரும் பெருமளவு ஆவியாவதில்லை. இந்த இரசாயனத்தை உண்டாக்கும் நிலையத்தை, ஒவ்வொரு பெரிய நீர்த் தேக்கத்திற்கும் அருகே அமைக்க வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழுவிடம் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.''

கனிமொழியின் கண்களில் தோன்றிய ஆச்சரியத்திற்கோர்

அளவில்லை. மணிமாறன் தொடர்ந்தான்.

''நீர்த் தேக்கங்களில் வண்டல்கள் படிந்து, அணையின் பயனைக் குறைத்து வருகின்றன. எதிரொலியின் மூலம் இந்த வண்டல் படிவின் அளவை அறிந்து, அதனைத் தவிர்க்கவும் ஆராய்ச்சிகள் கீழ் பவானி நீர்த் தேக்கத்தில் நடந்து வருகின்றன.

''கடலோடு கலக்கின்ற ஆறுகள் வண்டலையும், மண்ணையும் கொணர்ந்து கடலில் கொட்டுவதுண்டு. அலைகளால் அலைப்புண்டு இவை மணல் திட்டுகளாக ஆறுகலக்கும் கடல் முகங்களில் வருகின்றன. பூண்டி நிலையம் இவற்றை எவ்வாறு தவிர்க்க முடியும் என்பது குறித்தும் ஆராய்ச்சி நிகழ்த்துகிறது.

செயற்கைத் துறைமுகங்களை உருவாக்கும் பொழுது அணைக் கரைகளை எழுப்புவது அவசியமாகிறது. சிறந்த முறையில் அவற்றை அமைக்க மாதிரி வடிவங்கள் பூண்டி நிலையத்தில் உருவாக்கப்படுகின்றன. தூத்துக்குடி, கொளச்சல், கடலூர் துறைமுகத் திட்டங்கள், பூண்டியின் இத்தகு ஆராய்சிகளால் பெரும் பயன் உற்றன.''

''கனிமொழி! நிலத்தின் பரப்பில் பாய்கின்ற நீர்களையெல்லாம் நம் தமிழ்நாட்டில் முழு அளவு பயன்படுத்திவிட்டோம். எனவே, நிலத்திற்குள்ளேயிருந்து நீர் பெறும் முயற்சியிலும் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்திய வேளாண்மைத் துறை ஆராய்ச்சி நிலையம் தரும் பண உதவியுடன், இந்தத் துறையில் பூண்டி நிலையம் மிகவும் கருத்தூன்றி ஆராய்ச்சிகள் பல நடத்தி வருகிறது.

''இந்தியாவிலும், உலகிலும் உள்ள நீரியல் துறை விற்பன்னர்களின் கவனத்தைக் கவர்ந்த பூண்டி நிலையத்தில், கடந்த சூன் திங்கள் 22-ஆம் நாள் நம் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்திய நீர்ப் பாசன வாரியத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட 42-வது அகில இந்திய ஆராய்ச்சி அரங்கினைத் தொடங்கி வைத்தார். பூண்டி நிலையம் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்து விட்டதால் வெள்ளி விழாவில் டாக்டர் எம். விஸ்வேஸ்வரய்யா நினைவுச் சொற்பொழிவும் இந்த ஆண்டு தொடங்கியது கனிமொழி! அறிஞர் அண்ணா அமெரிக்கா சென்ற பொழுது, அங்குத் தூதுவராக இருந்த திரு ஜி. பார்த்தசாரதி இல்லத்தில் பொறியியல் வல்லுநரும், தற்சமயம் பூண்டி நிலையத்தில் இயக்குநராக பொறுப்பேற்றுள்ள திரு பி. குமாரசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ''தமிழகத்தில் நீர்ப்பயன்பாட்டு ஆராய்ச்சி'' பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டார். அந்தத் துறையில் தமிழகம் தீவிர ஆர்வம் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். அதன் விளைவாக வெறும் நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையமாக இருந்த பூண்டி நிலையம், நீர் இயக்கம் மற்றும் நீரியல் துறைகளில் ஆய்வு நடத்தும் நிறுவனமாக மாறி இத்தகைய சூழ்நிலைகளைப் பெற்றிருக்கிறது.''

''அத்தான்! நீரியல் துறையில் தான் எத்தனை விந்தைகள்! பூண்டியில் பூங்காவும், நீர்த்தேக்கமும் கண்ணுக்கு விருந்துஎன்றால் இந்த நிலையம் அறிவுக்கும் ஒரு விருந்து!

''கனிமொழி! இந்த நிலையத்தின் இயக்குநர், இலக்கியத் துறையிலும் ஈடுபாடு உடையவர் போலிருக்கிறது.! அறைகளுக்கெல்லாம், நிலம், நீர், காற்று, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். பார்த்தாயா?''

''ஆமாம் அத்தான்! நன்றி மறவாதவரும் கூட, இங்குள்ள சாலைகளுக்கும், கூடங்களுக்கும், பொறியல் துறை விற்பன்னர்களின் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்!

''கனிமொழி, உனக்கு இன்னும் ஓர் புதிய இடத்தைக் காட்டப்போகிறேன்.''

கனிமொழி மணிமாறனுடன் விரைந்தாள். அம்மாடி!

இது என்ன? இவ்வளவு பெரிய பாம்பு படமெடுத்துக் கொண்டிருக்கிறதே! 450 அடி நீளமாமே! ஓகோ! இதுவும் ஒரு சிலையோ? ஆம்! பலவகையான பாம்புகள் உலவும் பண்ணையாக அதனை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உல்லாசப் பயணிகளின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

''அத்தான் பயமாக இருக்கிறது! என்று அவன் கழுத்துக்களை தன் நீண்ட கரத்தால் பாம்பைப் போல் சுற்றிக் கொண்டாள் அவள். ஆகா! அந்தப் பயத்தில் தான் எத்தனை இனிமை! சுகம்! உதகையையும், கோடைக்கானலையும், குற்றாலத்தையும் வேண்டி நின்றவள், பூண்டியில் நிறைவைக் கண்டு விட்ட அடையாளம் அது!

தமிழகத்தின் நெடுஞ்சாலைத் துறையினரால் உருவாக்கப்பட்ட தின்மையும், அழகும் மிக்க சாலைகளைக் கடந்து, பரபரப்பு மிக்க மாநகரத்துப் பாதைகளை நோக்கிக் கார் பறந்து கொண்டிருக்கிறது..........




தமிழகம்,

இயற்கை எழிலின் பிறப்பிடம்!

கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகளின் இருப்பிடம்.

அதனைற்ருனே என்னவோ, ஏராளமான வெளிநாட்டுப் பயணிகளை இது கவர்ந்த வண்ணமிருக்கிறது.

சுற்றுலா வருவதற்குச் சுகமான இடம் தமிழ்நாடு என்று மேலை நாட்டினரால் போற்றிப் புகழப்படும் அளவுககுத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

1971-ஆம் ஆண்டு. ரூ. 50 இலட்சம் மூலதனத்தோடு துவக்கப்பெற்ற இது, சுற்றுலாப் பயணிகளுக்கு எல்லாவித மான வசதிகளும், சலுகைகளும் தந்து அவர்களை மகிழ்விக்கும் நோக்கோடு செயலாற்றி வருகிறது.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா மாளிகைகளும், குடில்களும் அமைக்கப்பட்டிருக் கி ன் ற ன; மேலும் பல இடங்களில் அமைக்கப்பட்டும் வருகின்றன. இத்துறை மேலும் வளரத் தக்க வகையில் பல திட்டங்களையும் இந்நிறுவனம் தீட்டி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க விதத்தில் நவீன மாளிகைகள், விடுதிகள் முதலானவைகளைக் கட்ட இந்நிறுவனம், எல்.ஐ.சி. வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வாங்கித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது ஆறு சுற்றுலா மாளிகைகள் இருக்கின்றன. திருச்சி, மதுரை, திருச்செந்தூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும், கன்னியாகுமரியில் இரண்டும் உள்ளன.

பயணிகள் கார்களுடன் தங்குவதற்கு வசதியாக மூன்று விடுதிகளும் அமைக்கப்படவிருக்கின்றன. மதுரைக்கும் திருமங்கலத்துக்கும் இடையே ஒன்றும், சென்னைக்கும் விழுப்புரத்திற்கும் இடையே விழுப்புரம் அருகில் ஒன்றும், சென்னை—பெங்களூர்ச் சாலையில் கிருஷ்ணகிரி அருகே ஒன்றும் ஆக மூன்று விடுதிகள் அமைக்கப்படும். இவற்றில் சிற்றுண்டிச் சாலைகளும், பயணிகள் தங்கும் அறைகளும் இருக்கும்.

கோடைக்கானலில் ரூ. 15 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டும் பணி இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்காக 7½ ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

குன்னூரில் அமைக்கப்பட்டுள்ள எட்டு எழில் மிகு குடில்கள், சுற்றுலாப் பயணிகளுக்குச் சுகமான இடங்களாகும். இயற்கைச் சூழல் மிக்க இந்தக் குடில்களைப் பொதுப் பணித்துறை கட்டியிருக்கிறது. ரூ. 2 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இந்தக் குடில்களில் குடும்பத்தோடு தங்கிச் சமையல் செய்து சாப்பிட நல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

எழில்மிகு ஏர்க்காட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க வகையில் ஒரு மாளிகை ஒன்று ரூ. 2 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

இந்தச் சுற்றுலா மாளிகைகளை நிருவகிக்க நல்ல திறம் வாய்ந்தவர்கள் வேண்டுமல்லவா? சென்னை அடையாறிலுள்ள சமையல் இயல் கலைப்பயிற்சி நிறுவனத்தில் படித்த மாணவர்களே இங்கு மேலாளராக நியமிக்கப்படுகிருர்கள். சுற்றுலா மாளிகையின் ஒவ்வொரு அறையிலும் தொலைபேசி இணைப்பு, இன்னிசை போன்ற வசதிகள் செய்யப்படும்.

சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வந்த வண்ணமிருப்பதால், மாளிகைகள் பல வற்றில் இடமில்லாத நிலை நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இக்குறையைப் போக்கத் திருச்சி, மதுரையிலுள்ள மாளிகைகள் மேலும் பல அறைகள் கொண்டதாக விரிவாக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் பயணிகளைக் கவரத்தக்க இடங்கள் எங்கெங்கு உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள இந்நிறுவன அதிகாரிகள் மாவட்டந் தோறும் முகாம் செய்கிருர்கள். அங்குத் தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பிறகு மனங்கவரும் மாட மாளிகைகள் எழுப்பத் திட்டமிடுகிருர்கள்.

உலக நாடுகளிலிருந்து வரும் பல மொழிகள் பேசும் பயணிகள் இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் வருகிருர்கள். அவர்கள் இங்கு இருந்து, கண்டு, கேட்டு மகிழ்ந்த செய்திகளைத் தம் நாடு திரும்பியதும் அங்கெல்லாம் சொல்வார்களல்லவா? அவர்கள் எல்லாரும் கண்குளிரக் காணும் வகையில் நமது தமிழகத்தை எழில் கொஞ்சும் இடமாக — இல்லமாக அமைக்கவும், அவர்கள் மன நிறைவோடு இருந்து களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் சுற்றுலா வளர்ச்சிக்

கழகம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. பொதுவாக, மாவட்டந் தோறும் சுற்றுலா மாளிகைகள் எழுப்புவதற்கான சிறந்த திட்டங்களையும் இந்நிறுவனம் தீட்டி வருகிறது.

சிற்பக் கலையின் மேன்மையினை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மாமல்லபுரம், இன்று மேலைநாட்டினரைப் பெருமளவில் கவர்ந்திருக்கிறது—கவர்ந்திழுக்கிறது என்றால், அது அலைகடலோரத்தில் பண்டைக் கால நாகரிகச் சிறப்பையும், நந்தமிழர் கைத்திறமையும் காட்டும் சிற்பங்கள் அல்லவா? இத்தகைய சிறப்பு மிக்க இடத்தில்தான் ஓர் அரும் பொருட் காட்சியகம் உருவாகவிருக்கிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலா அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்கச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது. ரூ. 1 கோடி செலவில் மாமல்லபுரத்தில் இது அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் பற்றிய கணக்குகள் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கான மாபெரும் திட்டம் ஒன்றை இக்கழகத் தலைவர் திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி தயாரித்துள்ளார். இந்தத் திட்டத்திற்குச் சுமார் 100 கோடி ரூபாய் செலவாகும்.

தமிழ்நாட்டிற்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 54 சதவிகிதம் இது அதிகரித்துள்ளது. வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும், வட இந்தியாவிலும் சுற்றுலா விளம்பரங்களைப் புதிதாகச் செய்ததால் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் 15 கோடி மதிப்புள்ள ஓர் உல்லாசக் கப்பலில்வந்த அமெரிக்கக் கோடீசுவரர்கள் இந்தியாவில் எந்தத் துறை முகத்திலும் இறங்காமல் சென்னைத் துறைமுகத்தில் மட்டுமே இறங்கினார்கள். ஒரே நாளில் 4½ இலட்சம் மதிப்புள்ள பொருள்களை அவர்கள் சென்னை நகரில் வாங்கினார்கள். மாமல்லபுரம் போவதற்கு மட்டும் 120 'குளுகுளு' கார்கள் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரில் மெழுகுக் கண்காட்சி ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இலண்டனில் இருக்கும் உலகப்புகழ் பெற்ற 'டிஸ்சாட்' மெழுகுக் கண்காட்சியைப் போல இது அமைக்கப்படும். இதற்காக அந்தக் கண்காட்சிச் சாலைகளுடனும் இத்துறையினர் தொடர்பு கொண்டுள்ளனர். இது அமைக்கப்பட்டால், இம்மாதிரியான கண்காட்சி இந்தியாவில் இதுவே முதலாவதாக இருக்கும்.

சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்குச் செல்ல ஓர் உல்லாசப் படகு வாங்கவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. 'ஓவர்கிராப்ட்' என்ற வகையைச் சேர்ந்த இந்தப் படகு பறந்து செல்லும் அமைப்புடையது. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அண்ணா நகரில் உள்ள கோபுரத்தில் ஒரு சுழலும் ஓட்டல் கட்டவும் திட்டமிட்டிருக்கிறது.

தீவுத்திடல் அருகில் கூவம் கரையில் பிரம்மாண்டமான நீரூற்று ஒன்று அமைக்கப்படும் வேலை நடந்து வருகிறது. இது மிக விரைவில் முடிந்துவிடும். 300 அடி உயரத்துக்கு இதில் நீர் எழும்பி வீழும். இம்மாதிரியான நீரூற்று ஆசியாவிலேயே வேறு எங்கும் இல்லை. இந்த நீரூற்றைக் கிழக்கு ஜெர்மனியில் உள்ள ''ஹாலோ'' நகர மேயர் சென்னை மேயருக்குப் பரிசாகத் தந்திருக்கிறார். அதனை அரசு வாங்கி அமைத்திருக்கிறது.

ஊட்டியில் 8 இலட்சம் செலவில் கூடுதல் மாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன. இங்கே பொதுமக்களுக்குக் குறைந்த வாடகையில் காற்று வசதியுடன் கூடிய அறைகள் கிடைக்க வசதி செய்யப்படும்.



கன்னியாகுமரி 'கேப்' விடுதி இன்னும் அதிக நவீனமயமாக்கப்பட்டு, ஐரோப்பியப் பயணிகள் தங்க வசதியாக அமைக்கப்படும். இங்கு மது பானக்கடையும் (பார்) உண்டு. கோடைக்கானல், ஊட்டி சுற்றுலா மாளிகைகளிலும் மது பானக்கடைகள் உள்ளன.

இவை தவிர இந்தக் கழகம் 174 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் குறுகிய கால இரண்டாண்டுத் திட்டம் ஒன்று தீட்டி, இந்த ஆண்டு முதல் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் இதில் 87 இலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாய் செலவிடப்படும். இத்திட்டத்தின் படி எல்லா மாவட்டத் தலை நகரங்களிலும் உல்லாசப் பயண முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படும்.

தூத்துக்குடி, நாகப்பட்டினத்தில் 35 படுக்கைகள் கொண்ட மாளிகைகளும், சிதம்பரம், ஒகேனக்கல், குற்றாலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றில் 100 படுக்கை கொண்ட மாளிகைகளும் கட்டப்படும்.

மாமல்லபுரத்தில் 38 ஏக்கரில் 250 படுக்கைகளும், 100 அறைகளும் கொண்ட மாளிகையும், ஓர் உல்லாசக் கடற்கரையும் அமைக்கப்படும்.

திருச்சி, மதுரை சுற்றுலா மாளிகைகளில் தொலைபேசி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரங்கள், நவீன மின் சாதன வசதிகள் முதலியன பொருத்தப்படும்.

சொகுசு வண்டியில் சுற்றுலா வருகிறீர்களா ?

கழகத்தின் சார்பில் நவீன வசதிகள் கொண்ட சுற்றுலாப் பேருந்துகள் இரண்டு உள்ளன. இதில் பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் உடன் வருவர். இப்பேருந்தில் மின் விசிறி, ஒலிபெருக்கி, குடிநீர் முதலிய வசதிகள் இருக்கின்றன. இந்தச் சுற்றுலாப் பேருந்து மூன்று வழிகளில் செயல் படுகிறது.

1. சென்னையிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரத்திற்குச் செல்லுதல், 2. சென்னை நகரம் மட்டும் சுற்றி வருதல், 3. சென்னையிலிருந்து கோவளம், மாமல்லபுரம் சென்று வருதல்.

குறைந்த கட்டணத்தில் இந்தச் சொகுசுச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தக்கச் சலுகைகள் இருக்கின்றன. இதே போன்ற சுற்றுலாப் பேருந்துகள் மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாட்டிற்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் பல செய்யப்பட்டு வருகின்றன. 1962-ஆம் ஆண்டில் 12,538 வெளி நாட்டினர் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். 1972-ல் 38,074 ஆக அவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. வெளி நாட்டுப் பயணிகள் மூலமாக 1962-ல் ரூ. 19·62 கோடி அயல் நாட்டுச் செலாவணி நமக்குக் கிடைத்திருக்கிறது. 1972-ல் இத் தொகை ரூ. 40·38. கோடியாக உயர்ந்திருக்கிறது. சுற்றுலா வளர்ச்சியானது பொருளாதாரத்தின் ஒரு கூறு என்பது இதன் மூலம் தெரிகிறதல்லவா ?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 2 1 2 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

சென்னை மூர் மார்க்கெட்டில், நாள்தோறும் சுற்றுலாப் பேருந்துகளை அடிக்கடி பார்க்கிறோம். இதனால் இந்தப் பகுதியில் அசுத்தங்கள் ஏற்படுவதையும் காண்கிறோம்.



கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா மாளிகை

## இதைத் தவிர்க்க இயலாதா?

'' ஏன் இயலாது ? மூர் மார்க்கெட்டில் வருகின்ற பயணிகளுக்காக ' வரவேற்பு நிலையம் ' (Reception centre) ஒன்றைக் கட்டும் திட்டம் இருக்கிறது. அவர்கள் சுகமாகத் தங்கிப் போவதற்காகச் சென்னையிலுள்ள சத்திரங்கள், திருமண மண்டபங்கள் முதலானவற்றைப் பயன்படுத்தவும் ஒரு யோசனை இருந்து வருகிறது '' என்று திரு ஏ.வி.பி. ஆசைத்தம்பி கூறுகிறார்.

சுற்றுலாத் துறையினால் நமக்கு எத்தனை நன்மை! அயல் நாட்டுச் செலாவணி பெருமளவில் கிடைக்கிறது. நாட்டு மக்கள் தொடர்பு ஏற்படுகிறது. தேசிய ஒருமைப்பாடு வளர வழி வகுக்கிறது. சுற்றுலா சம்பந்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பும், போக்குவரத்து, உணவு விடுதிகள் போன்றவைகளுக்கு நல்ல வருவாயும் கிடைக்கிறது. மேலும் கைத்தறி, கலை நுட்பப் பொருட்கள் போன்றவை அதிக அளவில் விற்பனையாகின்றன.

மேலை நாடுகளிலெல்லாம் சுற்றுலா வளர்ச்சியினால் நல்ல வருவாய் கிடைப்பதால், அங்கு அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும் சுற்றுலாத் துறை, மேலும் மேலும் ஆக்க வழிகளில் சிந்தனை செலுத்தி வருகிறது.

வெற்றி உலா வரும் சுற்றுலாத் துறைக்கு அனைவரும் ஆதரவும், அரிய யோசனைகளும் சொல்வதன் மூலம், ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்க முடியுமல்லவா ?

மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகை



போறியியல் வல்லுநர்களே! தொழில் நுட்பம் நிறைந்தவர்களே!
சிறு தொழில் அதிபர்களே!

# இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சலுகைகள் பல கிடைக்கும் கீழ்க்கண்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில்
உங்கள் தொழில்களை தொடங்க முந்துங்கள்.
செங்கற்பட்டு, சேலம், திருநெல்வேலி ஆகிய இம்மூன்று மாவட்டங்கள் முழுவதும்
மேற்படி கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் அடங்கும்.
மேற்கண்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் சிறு தொழில்களை துவங்குவோர்க்கு
கீழ்க்கண்ட தாராளமான சலுகைகள் அளிக்கப்படும்.



1. சிறுதொழில் தொடங்குவோர்க்குத் தேவையான தொழில் திட்டங்கள் (SCHEMES) அளிக்கப்படும்.

2. தனியார் துறையில் ஆரம்பிக்கப்படும் எல்லா சிறு தொழில்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் (3% ஆண்டுக்கு) ரூபாய் 1,00,000 வரையில் அரசாங்க தொழிற்கடன் அளிக்கப்படும். கூட்டுறவு துறையில் ஆரம்பிக்கப்படும் சிறுதொழில்களுக்கு ஆண்டொன்றுக்கு 2½% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும்.

3. இரும்பு மற்றும் எஃகு முதலிய மூலப்பொருள்கள் முதலிடம் கொடுத்து அளிக்கப்படும்.

4. பற்றுக்குறை உள்ள மூலப் பொருள்கள் அவ்வப்போது வழங்கப்படும்.

5. அரசாங்க வங்கிகளிலிருந்து (State Bank of India Branches) ரூபாய் 5000/- வரையில் ஒவ்வொரு சிறுதொழில் நிறுவனத்திற்கும், அதிகக் கட்டுப்பாடின்றி தாராளமாகக் கடன் வழங்கப்படும்.

**மேற்கொண்டு முழு விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிராமத் தொழில் திட்டப் பகுதிகளின் திட்ட அதிகாரிகளை அணுகவும்.**

**தொழில் வணிக கூட்டு இயக்குநர்**
(கிராமத் தொழில் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5

# வ.உ.சிதம்பரனர் பாப் போட்டி

வெள்ளலை புரண்டிட வெள்ளையர் மருண்டிட
உள்ளூர மொடுகலம் ஓட்டிய தமிழ்மகன்
செக்கிழு தண்டனை சிறைமலி கொடுமையால்
நெக்குரு நெஞ்சினன் நெடும்போர்ச் சிதம்பரம்
புகழுடல் தமிழெனப் புவிமிசை நிலைக்குமே.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

கப்ப லோட்டிய தமிழன்; கவினுறச்
செப்பரும் தமிழ்நூல் செய்தவன்; நாட்டின்
அடிமைத் தளையினை அகற்றிட வேண்டிச்
செக்கிழுத் தோன்அவன் தீரமும் தொண்டும்
இக்குறு பாவினில் இயம்பிடல் எளிதோ?

—சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

செந்தமிழ் அறிஞன் திலகரின் சீடன்
நொந்தவர்க் குதவும் நுவலரும் பண்பினன்
நாட்டு விடுதலை நாடிய செயலால்
வாட்டுஞ் சிறையில் வாடிய சிதம்பரன்
கப்பல் ஓட்டிய கன்னித் தமிழனே.

—குழ. அண்ணாமலை, கோவை மாவட்டம்.

தன்னல மின்றிப் பன்னலந் துறந்தும்
இன்னலின் உச்சியில் இருந்த போழ்திலும்
கடலில் நமது கலங்களும் சென்றிட
உடல்பொருள் ஆவி உண்மையில் ஈந்தவர்
செந்தமிழ்ச் சிற்பி சிதம்பர னாரே.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

நெல்லைத் தமிழா! நேற்றுநீ சிறையில்
கல்லை உடைத்தாய், கண்ணீர் வடித்தாய்
கப்பல் ஓட்டிக் கலங்கரை காட்டினாய்,
இப்பால் விடுதலை இயற்றினாய்; இன்றோ,
எங்கள் மனச்சிறை தங்கினாய்; வாழ்கவே.

—பொ. காளியப்பன், போளூர்.

நாட்டையாள் அன்னியர் நடுங்கிடக் 'கப்பல்
ஓட்டிய தமிழர்' ஒண்டமிழ்ப் புலமை
மிக்கவர்; நாட்டின் விடுதலைக் காகச்
செக்கையும் இழுத்துச் சிறையிலே தவித்தவர்
தக்கார் சிதம்பரம்; தனிப்புகழ் வாழ்கவே.

—மருதங்குடி வெங்கடேசன்.

ஒப்பிலா வுணர்ச்சி யோங்கிச் சுதந்தரக்
கப்பலை யோட்டிக் காட்டிய சிதம்பரம்,
உப்பு வரியை யூக்கமா யெதிர்த்துச்
சிறையிலே பன்னாள் செக்கையு மிழுத்து
மறைவிலா தொளிரும் மாளாச் செம்மலே.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

அன்னை விலங்கை அறுப்பான் வேண்டித்
தன்னை விலங்கொடு தளைத்த சீலன்
நாட்டுத் தொண்டும் நற்றமிழ்த் தொண்டும்
ஓட்டப் பிடாரத்தான் உயர்தனிக் கொள்கை
பாட்டின் பொருளாய்ப் பல்லூழி வாழ்கவே.

—செம்பியன், அமராவதி நகர், கோவை மாவட்டம்.

தக்கணம் தந்த தலைவரிற் றலைவ!
மிக்குள சுதந்தர வேட்கையால் சுதேசிக்
கப்பலை ஓட்டினீர்; கனிமொழி போற்றினீர்!
செப்பரும் மேனியைச் செக்கினால் வருத்தினீர்!
ஒப்பிலாத் தொண்டினை உலகெலாம் போற்றுமே!

—சி. முனிரத்தினம், வேட்டவலம்.

---

பரிசு பெற்ற பா எழுதியவர்:—
புலவர் வள்ளிவேலன்,
நாயக்கனூர்,
விசமங்கலம், (அஞ்சல்),
வட ஆர்க்காடு மாவட்டம்.

அடிமைத் தளையை அறுத்திட அந்நாள்
வெடித்த புரட்சியின் வித்தவன்; தமிழரின்
சொத்தவன்; கப்பல் செலுத்திக் கலங்கிட
வைத்தவன்; தமிழ்ச்சுவை யாய்ந்த தகையன்;
இத்திறம் கொண்டபேர் இனிது வாழ்கவே!

—வித்துவான். இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம்.

அயலார் ஆட்சியை அழிக்கும் கூற்றுய்ப்
புயலாய்ச் சீறிப் பொலிந்த செம்மல்,
செக்கை இழுத்துச் சிறையில் சிதைந்து
மக்கள் நெஞ்சில் மலர்ந்தாய் வாழி,
கப்பல் ஒட்டிய கலங்கரை விளக்கே!

—ஆ. கோவரசு, அரக்கோணம்-3.

நோயில் வாடினும் நொந்தா ரில்லை
ஆயுள் தண்டனைக்(கு) அச்சம் கொண்டிலர்
சிறையில் கல்லும் செக்குமே கண்டவர்
உறைவிடு வாளென ஓட்டினர் கப்பலை
விரைவில் விடுதலை வேண்டிநின் ருரே!

—வி. துரைசாமி, தேவத்தூர்.

தன்னிலம் காக்கத் தன்னலம் போக்கி
அந்நியப் பொருளை அனலிட் டழித்துச்
சொந்தக் கப்பலால் சுரண்டலை ஒழித்த,
செந்தமிழ்ச் சீமான் சிதம்பர ஞர்க்கு
வெஞ்சிறை தந்தது விஞ்சும் புகழே.

—தவமுத்து. அண்ணுமலை, தவசி.

சாதியை ஒழித்திடச் சதிபதி இருவரும்
வீதியி லிருப்பவர் வெறுக்கினும் மனமொடு
தாழ்ந்தோர் ஒருவரைத் தன்னகம் இருத்தி
ஆழ்ந்த கல்வியு மமுது மூட்டிய
சரித்திரப் புகழுறு சிதம்பரன் தமிழனே!

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

தாயக விடுதலைக் குயிரால் உடலால்
ஓயா துழைத்தனை யாயினும் அடிமை
விலங்கினை யொடிக்க வீறுகொண் டெழுந்தே
கலங்கள் கடலினில் செலுத்திய தமிழா!
கலங்குவம் யாமே நின்நினை வாலே.

—சோ. சு. யுவராசன், அரக்கோணம்.

நாவாய் ஓட்டி நற்றமிழ் உரையால்,
பாவால் விடுதலைப் பயிரினை வளர்த்தவர்
செக்கிழுத் தாலுஞ் சிறையிழுத் தாலும்
எக்குறை வாழ்வினில் ஏற்பட லாயினும்
சிந்தை கலங்கார் சிதம்பர ஞரே.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

பிறர்நலம் பேணப் பெரிதே முயன்று
திறனுெடும் உழைத்த செம்மல் சிதம்பரம்;
ஆங்கில நூல்களை அருமைத் தமிழில்
பாங்காய்ப் பெயர்த்துப் பாரிற் சுதேசிக்
கப்ப லோட்டிய விடுதலை வீரனே!

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

அந்நிய ராட்சியின் அடிமை அகற்றிட
இந்திய நாடே இணையிலா உரிமையால்
பன்னலம் பெற்றுப் பாரினில் ஓங்கிடத்
தன்சுக மிழந்து தன்னருஞ் செய்கையால்
தன்னையே ஈந்தார் சிதம்பர ஞரே!

—கா. சௌண்டையா, சாத்தாகோவில்பட்டி.

நெருப்பின் வெம்மையை நீர்வெல் வதுபோல்
பொருப்பின் வன்மையைப் பொடியுளி துளைப்பதாய்
வல்லமை மிக்க வெள்ளை யரசை
வென்றே நாடு விடுதலை யடைய
நன்றே யுழைத்த சிதம்பரம் வாழ்கவே.

—பாக்கியசாமி, பர்ஞர்டு நுண்கதிகரம்.

அரிசன மக்கட்(கு) அன்பன்; உரிமைச்
சொற்போர் ஆற்றிய துணிவினன்; சிறைவாய்ச்
சென்றுசெக் கிழுத்த செம்மல் சிதம்பரன்;
கப்ப லோட்டிய தமிழன்; கலைஞன்;
செந்தமிழ்க் கவிஞன் சீர்போற் றுதுமே.

—வை. கு. கங்காதரன், செங்காடு.

வெள்ளையர் ஆட்சியை வீழ்த்திடக் கருதிக்
கடுந்துயர்ப் பட்டுக் கப்ப லோட்டினன்
வெஞ்சிறைப் பட்டான்; விடுதலைச் சிங்கமாய்ச்
செக்கிழுத் துயர்ந்தான் செம்மல் சிதம்பரம்
அவன்புகழ் தன்னை அறைதல் அரிதே.

—சு. துளசிங்கம், திருநின்றவூர்.

''செப்பருஞ் சிறப்பின் சுதந்தரப் போரில்
இப்புவி விளங்க இருள்சூழ் சிறையில்
கடுந்துயர் கண்டுங் கலங்கா நெஞ்சொடு
கொடியோர் தம்மைக் குன்றென எதிர்த்த
வான்புகழ்ச் சிதம்பரம் வாழ்க நிலத்தே!

—புலவர் அ. நடராசன், நாமக்கல்.

சொக்கத் தங்கச் சுதந்தரம் வேண்டிச்
செக்கும் இழுத்தார் செம்மல் நாளும்
மிக்க சுதேசி வாணிபம் செய்திட
வங்கக் கடலில் வங்கம் செலுத்தி
மங்காப் புகழுடன் வாழ்ந் திருந்தாரே!

—கே. கிருட்டினராஜ், குளத்துப்பாளையம்.

தமிழ்நிலந் தானும் தரணியிற் புகழ்பெற
இமிழ்கடல் தன்னில் இயக்கினர் கப்பல்;
ஆங்கிலக் கொடும்படை அடைத்த சிறைதனில்
பாங்காய் விடுதலைப் பாரதம் கண்டிடச்
செக்கும் இழுத்துச் செம்மலா யினரே.

—புலவர் ஜானகி ரகுநாதன், மேற்கு மாம்பலம்.

கூற்றெதிர் வரினும் கூடிவெல் படையென
ஆற்றல் வீரர்! அடிமை விலங்கை
உடைத்திடச் சிறையில் கல்லை உடைத்தவர்;
கடுஞ்செக் கிழுத்தவர்! கப்பலே ஓட்டினர்!
செந்தமிழ்ச் சிதம்பரம் சிலைபுகழ் நிலைக்குமே!

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

விடுதலை வேண்டி வெஞ்சிறை வீட்டில்
கடுந்துய ரேற்றுக் கால மறிந்து
கலத்தினைத் தான்மாக் கடலில் செலுத்தி
நலமுயர் நூற்பல நாட்டுக் கீந்தநம்
சிதம்பர னாரைச் சிறப்புறப் போற்றுமே.

—சி. கைலாசம், ஈரோடு-7.

தூத்துக் குடியில் தோன்றிய பெருமான்
நாத்திறம் தன்னை நாடே அறியும்
ஒப்பிலா வகையில் கப்பல் ஓட்டிய
ஓர்தமிழ் மகனென உலகே வியக்கும்
வ.உ.சி. தன்னை வாழ்த்துவோம் நாமே.

—அ. காந்தி பி.எஸ்சி., பி.டி; தேவத்தூர்.

விடுதலை உயிரென வெம்பொடி தனிலும்
அடிபட்(டு)இழுத்தான் செக்கினை; அறப்போர்
விளைத்தான்; எதிரி வெள்ளையர் அதிர
உழைத்தான்; இந்தியர்க்(கு) உரிமை வாங்கினன்.
வ.உ.சி. யென்னும் வண்டமிழ் வீரனே.

—பாவெழிலன், குன்னம்.

வஞ்சகர் நெஞ்சின் வன்முறை யாலே
வெஞ்சிறை தன்னில் வெந்த தமிழன்;
கருங்கடல் நாப்பண் கப்பலை யோட்டி,
நொறுங்கியே செக்கினை நொடிந்திவ ணிழுத்துச்
சீர்புக ழுற்றார் சிதம்பர னாரே.

—நூருன்னிசா, கிருஷ்ணம்பேட்டை.

கப்பல் ஓட்டிய கண்ணியன் சிதம்பரம்
ஒப்பில் தொண்டினை உயர்வுடன் புரிந்து
பிறப்பின் உரிமையைப் பெரிதும் விழைந்து
திறமுடன் சிறையில் செக்கையும் இழுத்தவன்
இறந்தும் இறவாப் பெயர்எய் தினனே.

—வெற்றிவேல் வெங்கடேசன், சேலம்-9.

செல்வக் குடியினர்; தெளிவுடை மதியினர்;
வல்லவர் தீந்தமிழ் வளர்த்தவர்; வெள்ளையர்க்
கெதிர்கலம் விட்டவர்; செக்கினை யிழுத்தவர்;
அதிகநாள் சிறைத்துயர்; அடைந்தவர் சிதம்பரச்
செம்மலர் திருப்பெயர் தரணியில் நிலைக்குமே.

—வி. மு. உலகநாதன், சென்னை-2.

விடுதலை கெட்டுக் கெடுதலை ஓங்கிய
அடிமை நாட்டின் உரிமைக் குரலை
வெள்ளையர்க் கெதிராய் வீறுடன் எழுப்பினன்;
ஓடும் குருதியும் உதிரும் வியர்வையும்
பாடும் அவன்றன் நாட்டுத் தொண்டே:

—இளையவன், திருச்சி-2.

அடிமைக் கார்முகில் ஆர்ந்திடும் வானில்
உரிமைத் திருநிலா உலவிடச் செய்யச்
செக்கினை யிழுத்துச் சீர்பெறு கப்பல்
தக்கநீர்க் கடலில் தவழ்ந்திடச் செய்தான்;
தண்டமிழ் உள்ளச் சிதம்பரன் தானே!

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

கெடுமதி யோரின் கொடுந்துயர் நீக்க
நடுக்கடல் தன்னில் நாவாய் விட்டே
கடுந்துய ரேற்றான்; செக்கினை யிழுத்தே
அடுபகை தன்னைப் பொடிபடச் செய்தான்
நெடும்புகழ்ச் சிதம்பரன் நந்தா விளக்கே!

—கு. மருதமணி, அரக்கோணம்.

இந்திய மீட்சிக் கிவனின் பங்கு
விந்திய முகட்டின் விளக்கு; கப்பல்
இலங்கைக் கோட்டினன் இலங்கிய வெள்ளையர்
கலங்கிடச் செய்த கடமை மறவன்
மக்கள் வாழச் செக்கிழுத் தனனே!

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

தேசிய உணர்ச்சிப் பிழம்பு: பரங்கியர்
பாசறை களுக்கோர் சிம்ம சொப்பனம்!
கப்பல் ஓட்டிய விடுதலைக் காதலன்!
சட்டம் படித்த கெட்டிக் காரன்!
செக்கை இழுத்த சிதம்பர னாரே!

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

விடுதலை முழக்கமே விடுகின்ற மூச்சு
நடுபுகழ் பாரத நாடே தெய்வம்
வெஞ்சிறைச் சாலையே மிளிர்எழில் பூங்கா
செக்கிழுத் துழலுதல் சிறந்தபே ரின்பம்
மக்கள் போற்றும் வ. உ. சி. தமக்கே!

—அர்த்தநாரி, வேலூர்—சேலம்.

நாட்டு விடுதலை கேட்டு முழக்கிட
வெஞ்சிறைக் கொடுமை மிஞ்சிய போதும்
அறவழி பரவக் ''குறளுரை'' தந்தே
தாழ்குலத் தொருவன் ஊழ்வினை போக்கிய
தொழிலாளர் தலைவர் எழில்சிதம் பரமே!

—கே. மருதசாமி, திண்டுக்கல்-2.

பாரத நாட்டில் பரங்கியர் ஆட்சி
மாறியே நம்மவர் மகுடம் தாங்கக்
கப்பலை ஓட்டியும், கடுஞ்சிறை புக்கும்
'வந்தே மாதரம்' மந்திரம் முழக்கிய
செந்தமிழ் வீரர் சிதம்பர னாரே!

அ. புருடோத்தமன், காவேரிப்பட்டணம்.

வள்ளுவம் பயின்ற வாலறி வுடையார்
உள்ளுவ உயர்ந்தன உழைப்பால் முடிப்பார்
சிங்கநேர் தமிழர் சீரிய சிதம்பரர்
வஞ்சின முரைத்து வாங்கிய கலங்கள்
கொஞ்சிடும் அலைமேல் கோலோச் சினவே!

—சிவ. கிருட்டிணண், கணியூர்.

மானப் பெருக்கால் மனித உணர்வால்,
ஏனெனும் கேள்வி எழுந்த துடிப்பால்,
முத்துக் குவியல் முகிழ்க்கும் துறையில்
கத்தும் கடல்மிசைக் கலமதை ஓட்டியே
நின்றான்! நிமிர்ந்தான்!! நிலைத்தான்!! நெடுகவே!!!!

—புலவர் பா. முனியமுத்து, மாதவரம்.

ஆங்கில ஆட்சியின் ஆணவம் அகன்றிட
சிங்கத் தமிழனுச் சீர்மிகு கப்பலை
வங்கக் கடலில் வகையாய் விடுத்தே
தங்க நாட்டின் தகைமை காத்த
எங்கள் சிதம்பரம் என்றும் வாழ்கவே!

—சி. கண்ணப்பன், அம்மையார்குப்பம்.

தியாகத் தீயில் தீய்ந்த மலராம்!
தயாள குணத்தால் சரிந்த மலையாம்
சுதந்தர வேள்வியில் சொரிந்த நெய்யாம்!
சிதம்பரம் இழுத்த செக்கில்
அதிர்ஒலி சுதந்தர அன்னையின் குரலே!

'' கோன் '', திருச்சி-8.

அலைகடல் பொங்கி ஆர்த்தெழக் கப்பலைத்
தலைநிமிர்த் தோட்டித் தருக்கரை ஓட்டிய
சிதம்பரம் பிள்ளை சிறைசென் றுங்கே
நிதம்நிதம் துயரில் நீந்திலர் என்றேல்
சுதந்தர விளக்கும் சுடரொளி தருமோ!

சி. செள. கருப்பன் செட்டி, திருச்சி-15.

அற்றை நாளில் ஆங்கில ஆட்சியைச்
செற்ற சிதம்பரம் செக்கினை இழுத்தே
உற்ற துயரால் உடைந்த பாரதம்
இற்றை நாளினில் இனிய சுதந்தரம்
பெற்றே உயர்ந்தது பரவிடு நெஞ்சே.

புலவர் ந. சிவலிங்கம், ஆலங்காயம்.

விடுதலை நாமே விரைந்து பெற்றிடக்
கடலில் கலத்தைக் கடுகி விடுத்தோன்
கல்லை உடைத்தும் செக்கை இழுத்தும்
நல்ல தமிழை நாட்டில் வளர்த்த
வெல்புகழ்ச் சிதம்பரன் போற்றுதும் யாமே!

—புலவர் ந. அண்ணுமலை, நத்தம்.

விடுதலைச் சிற்பி! வெள்ளையர் விதித்த
தடைகளை அகற்றிய தளபதி! உடைகளைத்
தேசியம் ஆக்கிய தீவிர வாதி!
பூனைகள் தம்மைப் புலியாய் மாற்றிய
வித்தகன் சிதம்பர வேந்தனென் பானே!

—நெற்றிக்கண்ணன், பூச்சியூர்.

கண்டதும் உண்டுகொல்! கண்டதும் உண்டுகொல்!
பண்டைய சிறப்பைப் பாரோர் காண
அடலே றுகிக் கடற்கலஞ் செலுத்தி
விடுதலைக் கெனவே கொடுமைக ளேற்றுச்
செக்கையும் இழுத்தவன் சிறப்பினுக் கிணையே!

—புலவர் இரா. இராகவன், வாணியம்பாடி.

விழிதரும் பார்வையில், வெளிவிடும் மூச்சினில்
மொழிதரும் பேச்சினில், மேவும் ஆற்றலில்
விடுதலை பெற்றிடும் வீரம் காட்டியே
கடும்பகை எதிர்த்துக் கப்பல் ஓட்டியோன்
சிதம்பர னாரைச் சிந்தைசெய் நெஞ்சே!

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

வீட்டினில் உறங்கியே விழிநிகர் உரிமையை
நாட்டினர் மறந்து நலிவுறும் வேளையில்
வெள்ளையர் நடுங்கிட வெண்ணுரைக் கடலில்
கப்பலைச் செலுத்தியே கடுஞ்சிறை புகுந்து,
செக்கும் இழுத்த செந்தமிழ்ச் சிங்கமே!

—செ. நாச்சிமுத்து, ஒடையகுளம்.

மக்களின் உரிமை மண்ணிடை மலரச்
செக்கினை இழுத்துச் சிறையினில் வாடி,
பிள்ளைச் சிதம்பரம் பெருந்துய ருற்று
வெள்ளை யருக்கெதிர் விட்டே கப்பலை
விடுதலை முழக்கினன் விடுமுயிர் வரையே!

—எஸ். சுந்தரம், வெண்பாலூர்.



# மரத்தடியிலே மகளிர்க்குப் பயிற்சி

வாலாசாபாத் ·

ஒரு பெரிய ஆலமரத்தடியிலே நிறையப் பெண்கள் அமர்ந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்கள் கண்கள் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதோ ஒரு பெண்மணி வருகிறார். ஆங்கில நாட்டுச் சாயல் அவரைப் பார்த்ததும் தெரிகிறது. அவர் யார்?

அவர்தான் அமெரிக்க அமைதிப் படைத் தொண்டர் அந்துவானத் ஸ்ட்ரோபினோ என்னும் முப்பது வயது ஆசிரியை. இவரை 'டோனி' என்றும் அழைப்பார்கள்.

இவருக்குச் சொந்த ஊர், அமெரிக்காவிலே நியூயார்க் மாநிலத்திலுள்ளராச்செஸ்ட்டர். இந்தப் பெண்மணி அமைதிப் படையில் சேர்ந்ததும், வாலாசாபாத்துக்குப் போய்ப் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்டதும் அவருக்குப் பயம் உண்டாயிற்று. எங்கேயோ உள்ள தெரியாத ஊர் ஆயிற்றே என்று. ஆனால், இன்று? ''அமைதியான இந்த வாலாசாபாத் சூழ்நிலையை விட்டு இரைச்சல் மிக்க என் ஊருக்குப் போக விருப்பமில்லை'' என்கிறார்.

பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சிக் கழகத்தில் மூன்று மாதம் பயிற்சி பெற்ற இவரைத் தமிழ்நாட்டில் வாலாசாபாத்திலுள்ள அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும்படி நியமித்தார்கள். தன் கையே தனக்குதவி என்று அறிஞர்கள் கடைப்பிடித்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது, இந்தப் பள்ளி. இதில் 120 ஆசிரியப் பயிற்சி மாணவியர் இருக்கிறார்கள்.

இப்பள்ளியில் ஆங்கிலமும், உடல் துப்புரவும் பற்றி இவர் சொல்லிக் கொடுக்கிறார்; இந்த இரண்டு பாடங்களையும் எப்படி எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை இவர் இங்குக் கற்பிக்கிறார்.




தமிழ் எழுதப் பேசக் கற்றுக் கொண்ட இவர், பள்ளிக் கூடக் கட்டடத்தை அடுத்து வளர்ந்து பரந்து நிற்கும் ஒரு பெரிய ஆல மரத்தின் நிழலில் மிக்க ஆர்வத்தோடு வகுப்பு நடத்துகிறார்.

இவர் எப்படிப் பட்டவர்?

வாலாசாபாத் பள்ளியின் தலைவி கூறுகிறார்: ''இவர் நட்புள்ளம் படைத்தவர்; மிகவும் கடினமாக உழைப்பவர்; நமது பண்பாட்டையும், மொழியையும் கற்றுக் கொண்டு விட்டார்; புதியன வற்றைப் படித்துக்கொள்வதிலே இவர்க்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது''.

டோனியின் ஆர்வம் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பள்ளியிலேயே 30 கோழிகள் வைத்து வளர்க்கிறார். இப்போது புதிதாகச் சிறுவர் நூலகம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்; இன்னும் சில மாதங்களில் நூலகக் கட்டடம் எழுந்ததும், இது வாலாசாபாத்திலுள்ள 3,000 சிறுவர்களுக்கும் பயன்படும்.

இவர் இங்கு வந்து இரண்டாண்டுகள் ஆகின்றன. என்றாலும், இவரது பணிக் காலம் முடியுந் தறுவாயில் இருக்கிறது. ஆனால், இவர் தமது பணிக் காலத்தை நீட்டிக்கும்படி எழுதிக் கேட்டுள்ளாராம் ·

# வாழும் சிதம்பரம்

'தென்னாட்டுத் திலகர்' என்று எந்நாட்டவராலும் போற்றிப் புகழப் பெற்ற தீரர்!

விடுதலைக்குத் தம் வாழ்க்கையையே நன்கொடையாக வழங்கிட்ட வீரர்!

வெள்ளையருக்கு எதிராகக் கப்பலோட்டி அவர்களைக் கதி கலங்க வைத்த தமிழர்!

இப்படியெல்லாம் இல்லந்தோறும், உள்ளந்தோறும் ஒளி விளக்காய்த் திகழ்பவர்தான், ஒட்டப்பிடாரத்து ஒப்பிலாமணி வ. உ. சிதம்பரனார் அவர்கள்.

நெல்லை மாவட்டத்திலே ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறும் நாள் சிதம்பரனார் பிறந்தார். அவர் தம் பெற்றோர் உலகநாத பிள்ளை—பரமாயி அம்மையார் வருங்கால வீரனைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தனர். சிதம்பரனாருக்குப் பிறகு ஆடவர் நால்வர், மகளிர் இருவர் பிறந்தனர்.

முதலில் திண்ணைப் பள்ளியிலே தெள்ளு தமிழ் படித்த சிதம்பரனார், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். கற்றோரும் மற்றோரும் காமுறும் வண்ணம்வளர் பிறையாய் வளர்ந்த சிதம்பரனார் ஆங்கிலத்தையும் ஐயமறக் கற்றார். தூத்துக்குடி செயிண்ட் பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளி, கால்டுவெல் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற அவர் இளம் வயதிலேயே சுதந்தர வேட்கை மிகுந்தவராக விளங்கினார்.

துடுக்குத்தனம் மிக்க சிதம்பரனாரின் தொந்தரவு பொறுக்காத அவரது தந்தையார் அவரை ஒட்டப்பிடார வட்ட அலுவலகத்தில் எழுத்தர் வேலையில் அமர்த்தினார். எழுச்சி உள்ளம் மிக்க சிதம்பரனாருக்கு எழுத்தர் வேலை மனத்தை அழுத்தியது. சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞராக வேண்டும் என்பதே அவரது திட்டம். அவர் தம் எண்ணம் நிறைவேறும் வண்ணம் தந்தையார் தக்க ஏற்பாடு செய்தார். திருச்சியிலுள்ள கணபதி ஐயர், அரிஅர ஐயர் என்ற வழக்கறிஞர்களிடம் சட்டம் பயின்று தேர்ந்து 1895-ஆம் ஆண்டில் வழக்கறிஞரானார் வ.உ.சி.

தூத்துக்குடியில் முதன் முதல் வழக்கறிஞராகப் பணியாற்றிய வ.உ.சி. சிவில்-கிரிமினல் என்னும் இரு துறைகளிலும் சிறந்து விளங்கினார் என்றாலும் கிரிமினல் துறையில் அவரது திறமை நன்கு வெளிப்பட்டது. நடுநிலை தவறாது, வாய்மையினின்று வழுவாது வழக்காடிய வ.உ.சி.-யின் நேர்மை, நீதிபதிகளிடையே பெருமதிப்பை வளர்த்தது.

சிதம்பரனார் தம் இருபத்து மூன்றாம் ஆண்டில் இல்லறமேற்றார். வள்ளியம்மை என்னும் நல்லாளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற வ.உ.சி. நெடுநாட்கள் அவருடன் நல்லறம் புரிந்திட இயலவில்லை. இயற்கை அவ்வம்மையாரைத் தம்முடன் அழைத்துக் கொண்டது. துணைவியாரின் பிரிவு அவரைப் பெரிதும் வருத்தியது.

"இல்லமதில் ஒன்றுமே
இல்லை என்னாள்
எக்காலும்
நல்லுணவு தான்சமைத்து
நல்குவாள் — அல்ல
லொழித்து
இன்புறவே செய்திடுவாள்
எப்பணியும் உள்ளமுடன்
அன்புமிகு நல்லாள்
அமைந்து"

என்று அவர் பாடிய இரங்கற்பா ஒன்றே போதும் அவர் துயரினை எடுத்துக் காட்ட! பிறகு அவ்வம்மையாரின் நெருங்கிய உறவினரான மீனாட்சியம்மையாரை மணந்தார்.

திரைகடலோடியும் திரவியம் தேடியவர் அல்லவா தமிழர்கள்? பண்டைத் தமிழர்கள் கடல் வாணிகத்தில் பேரும் புகழும் பெற்று விளங்கியதைத் தமிழ் இலக்கியங்களில் நாம் படித்திருக்கிறோம். பெருமை மிக்க தமிழர்களின் கடல் வாணிகம், அந்நியர் ஆட்சி வந்துற்றபோது ஆட்டங் கண்டது. வழிவழி வந்த தமிழரின் கடல் வாணிகத்தினை வந்தவர் கைப்பற்றிக் கொண்டனர். வாளா இருக்குமா தமிழ் இனம்? சினந்தெழுந்தது. அவர்களில் முன்னணியிலே நின்றார் வீர சிதம்பரனார்!

வெள்ளையருக்கு எதிராக—தமிழ் இனக் கொள்ளையருக்கு எதிராகக் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவி அவர்களைக் கதிகலங்க வைத்தார் வ.உ.சி. மக்கள் சுதேசிக் கப்பலுக்கே பேராதரவு காட்டியதைக் கண்ட வெள்ளைக் கப்பல் அதிகாரிகள் கட்டணத்தைக் குறைத்துப் பார்த்தனர்; சலுகைகள் காட்டி ஆசை காட்டினர். ஆனால் சுதந்தரத் தீ கொழுந்து விட்டெரியும் மக்கள் மனத்தை மாற்றான் வெள்ளையனால் கொள்ளை கொள்ள முடியவில்லை!

அப்பொழுது வைசிராயாக விளங்கிய கர்சான் பிரபு வங்காள மாநிலத்தை இரு பிரிவுகளாகப் பிரித்தார். இதற்கு ஒவ்வாத இந்தியர்கள் வெள்ளையரை எதிர்த்துப்போர்க்கொடி தூக்கினர். வங்கப் பிரிவினைக் கிளர்ச்சி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. விடுதலை வேட்கை மிக்க வ.உ.சி. வாளா இருப்பாரா? வழக்கறிஞர் தொழிலைத் தூக்கி எறிந்து விட்டுத் தாய்நாடு காக்க வீறுகொண்டு எழுந்தார்.

அப்போது தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமிடையே வணிகப் போக்குவரத்தை ஆங்கில நாவாய்ச் சங்கமே நடத்தி வந்தது. இதனை எள்ளளவும் ஏற்காத சிதம்பரனார் 1906-ஆம் ஆண்டில் உள்நாட்டு நாவாய்ச் சங்கம் ஒன்றைத் தூத்துக்குடியில் நிறுவினார். இதனால் ஏற்பட்ட இடுக்கண்களைத் தம் பெரு முயற்சியால் களைந்து தொடர்ந்து முன்னேறினார். பம்பாய் சென்று பல இடையூறுகளுக்கிடையே காலியா, இலாவோ என்ற இரு

கப்பல்களை வாங்கிக் கொண்டு தூத்துக்குடி வந்தார். வீர சிதம்பரனாரின் உறுதியையும், துணிவையும் எண்ணி எண்ணி மக்கள் பெருமிதமடைந்தனர்.

நாவாய்ச் சங்கம் நாளுக்கு நாள் வளர்வதைப் பொறுத வெள்ளையர் வயிற்றெரிச்சல் பட்டனர். உடனே அவர்கள் சிதம்பரனாரை அணுகி, 'இலட்ச ரூபாய் தருகிறோம் இந்தச் சங்கத்திலிருந்து விலகிவிடுங்கள்''! என்று வேண்டிக் கொண்டனர். வீர சிதம்பரனாரா அதற்கு விருப்பம் தெரிவிப்பார்? வசைமொழி கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார். இதனால் வெகுண்ட வெள்ளையர் நாவாய்ச் சங்கத்துக்குப் பல இடையூறுகளைச் செய்த வண்ணமிருந்தனர்.

அடிமைத் தளையை அகற்றிட அல்லும் பகலும் அயராதுழைத்த வ. உ. சி., வெள்ளையரை எதிர்த்து விடுதலைப் போரைத் தொடங்கிய பால கங்காதர திலகருக்குப் பக்க பலமாக இருந்து, அவரது கொள்கைகளைத் தமிழகமெங்கும் பரப்பும் தலையாய பணிக்குத் தலைமை தாங்கினார். சிதம்பரனாரின் சீரிய பணிக்குத் துணை வந்தார் சுப்பிரமணிய சிவா. இருவரும் பட்டி தொட்டிகளெல்லாம், நாடு நகரங்களெல்லாம் சென்று நாட்டுப் பற்றை வளர்த்தனர். சுதந்தரத் தீ எங்கும் ஒளிவிடத் தொடங்கியது. இது கண்ட ஆங்கிலேயர் அஞ்சினர்; வ.உ. சி-யும், சிவாவும் பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது என்று தடை விதித்தனர்.

இந்தியக் காங்கிரசுப் பேரவையின் தலைவர்களுள் ஒருவரான விபின் சந்திர பாலர் என்பவர் *1908*-ஆம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். அந்த நாள் திருவிழா நாளாக எங்கும் கொண்டாடப்பட்டது. அது சம்பந்தமான ஒரு பொதுக் கூட்டத்தில் சிதம்பரனார் சொற்பொழிவாற்ற இருந்தார். ஆனால், அவர் பேசுவதற்கு ஆங்கிலேயர் தடை விதித்தனர். அரிமா நெஞ்சம் கொண்ட வ.உ.சி. தடையை மீறி அந்தக் கூட்டத்தில் வேழமென முழங்கினார்; வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களிடையே வெள்ளையர் கொடுமைகளை எடுத்துக் கூறினார். உடனே சீறி எழுந்த ஆங்கிலேயர் வ.உ.சி. யைக் கைது செய்தனர்; அவரோடு அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்தது வெள்ளைப் பட்டாளம்.

சிதம்பரனார் கைதான சேதி கேட்டுத் தமிழகமே கொதித்தெழுந்தது. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் கடைகள் எல்லாம் அடைக்கப் பட்டன. மாணவர்கள் பள்ளி செல்லவில்லை. ஆங்கிலேயரின் அடக்கு முறையைக் கண்டித்து ஊர்வலங்கள் நடந்தன. உரிமை முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. ஆங்கில அரசு ஆர்த்தெழுந்தது; அன்னை பூமியின் அடிமை விலங்கொடிக்க ஆர்ப்பரித்த ஆயிரமாயிரம் அடலேறுகளைச் சிறை செய்து சித்திரவதை செய்தது.

விடுதலை வேண்டி நின்ற வீர சிதம்பரனார் மீது இல்லாத குற்றஞ் சாட்டிய பொல்லாத வெள்ளை அரசு, அவருக்கு நாற்பதாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது. உரிமை கேட்ட சிவாவுக்கோ பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை! இந்த வழக்கின் போது கவியரசர் பாரதியார், சிதம்பரனார் தரப்பில் சாட்சி கூறியதை இங்குக் குறிப்பிட வேண்டும். விடுதலை கேட்ட சிதம்பரனாரை "இராஜத் துரோகி'' என்று வருணித்தார் நீதிபதி பின்ஹே. அவர் தமது தீர்ப்பில் கூறியதாவது: ''சிதம்பரம் பிள்ளை பெரிய இராஜத் துரோகி. அவரது எலும்புக்கூடு கூட இராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. சிவா அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலிக் குழப்பத்திற்குக் காரணம் இவர்கள்தாம். பிள்ளையின் சொற்பொழிவையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் கூட உயிர்பெற்று எழும். புரட்சித் தீ பறக்கும்!''.

சிதம்பரனார் அடைந்த தண்டனையைக் கேட்டு, அவர் சகோதரர் மீனாட்சி சுந்தரனார் சித்தம் கலங்கிப் போனார். கடுந்தண்டனையைக் கண்டித்துப் பல செய்தித்தாள்கள் தலையங்கங்கள் எழுதின. மக்கள் இக்கொடுமையை எண்ணி உள்ளம் கொதித்தனர். வீர சிதம்பரனார் தம் தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாக அவரது தண்டனை ஆறு ஆண்டுக் கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது.



'இடுக்கண் வருங்கால் நகுக' என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய சிதம்பரனார் தம் தண்டனைக் காலத்தைக் கோவை, கண்ணனூர் சிறைகளில் கழித்தார். அங்கு அவர் மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார். சிறையில் செக்கிழுத்தார். அப்போதெல்லாம் அவர் சுதந்தரத் தாயின் கோவிலைச் சுற்றி வருவதாகவே எண்ணி வேதனையை மறந்தார். அரசியல் கைதிகளுக்கான சலுகைகள் அன்று எதுவும் இல்லாததால் சிறையில் சித்திரவதைகளை அனுபவித்த சிதம்பரனார் கூழ் குடித்தார்; கல்லுடைத்தார். சிறையிலிருந்தபோது அவர் உருவாக்கிய நாவாய்ச் சங்கத்தினை அரசினர்

நசுக்கினர். அரும்பாடு பட்டு வாங்கிய இரண்டு கப்பல்கள் ஆங்கிலேயருக்கே விற்கப்பட்டன! இந்தக் கொடுமையைக் கேள்விப் பட்ட சிதம்பரனுர் நெஞ்சம் உருகிக் கண்ணீர் வடித்தார்.

1912-ஆம் ஆண்டு வ.உ.சி. கண்ணனூர்ச் சிறையிலிருந்து விடுதலையடைந்தார். பிறகு அவர் சென்னை சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் பல்லாண்டுகளாகப் பொது நலப் பணி புரிந்தார். அப்போது அரசினரின் அனுமதி இல்லாததால் வழக்கறிஞர் தொழில் செய்ய முடியாத அவல நிலை அவருக்கு ஏற்பட்டது. அதனல் வறுமை அவரது வாழ்க்கையைச் சூழ்ந்து வருத்தியது. சொல்லொணுத் துயரமடைந்த சிதம்பரனுர்க்கு உதவி புரிய வந்தார், சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய இ. எச். வாலஸ் என்பவர். 1924--ல் மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு கோவில்பட்டியில் தம் வாழ்க்கையைத் தொடர்ந்தார் வ.உ.சி.

வீர சிதம்பரனுர், செந்தமிழ்ச் சிதம்பரனுராகவும் விளங்கினர். அன்னை பூமியின் அடிமை விலங்கைத் தகர்த்தெறியப் பாடுபட்ட சிதம்பரனுர், அன்னைத் தமிழ் மொழிக்கு அணிகலன் பூட்டி அழகு பார்க்கவும் முற்பட்டார். தமிழ் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களுக்கு எல்லா வசதிகளையும் தாமே செய்து கொடுத்தார். அவரிடம் கல்வி பயின்றவர்களில் குறிப்பிடத் தக்கவர் சாமி சகஜானந்தர் என்பவராவர். அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராயினும் சிதம்பரனுர் சாதி மத வேறுபாடு கருதாது, அவரைத் தம் உயிர் மாணவராகக் கருதினுர்.

பலாத்காரத்தைச் சிறிதும் விரும்பாதவர் சிதம்பரனுர் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு; திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஆஷ் என்பவர் துணை ஆட்சியாளராக இருந்த போது பல கொடுமைகள் புரிந்தார். 1911-ஆம் ஆண்டு அவரைப் பழிவாங்கத் திட்டமிட்டான் வாஞ்சிநாதன் என்ற இளைஞன். ஆஷ், ரயிலில் கோடைக்கானலுக்குச் சென்று கொண்டிருந்த போது அவருடன் பயணம் செய்த அந்த இளைஞன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். தம்மை யாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி அவன் தன் வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டு, தற்கொலை செய்து கொண்டான்.

இதைக் கேள்விப்பட்ட சிதம்பரனுர் மிகவும் வருந்தினர். ''நாம் ஆங்கிலேயரை நாட்டை விட்டு வெளியேற்றத்தான் போராடுகிறேம். அவர்களைக் கொலை செய்வது முறையில்லை. இந்தப் பலாத்காரத்தால் சுதந்தரம் கிடைக்காது; கிடைக்கும் என்று எண்ணுவதும் தவறு'' என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறர்.

வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் நற் பண்பும், இல்லை என்று கேட்பவருக்கு இல்லை என்னுது வழங்கும் வள்ளல் தன்மையும் மிக்கவர் வ.உ.சி.

நாட்டுப்பற்று மிகுந்த வீர சிதம்பரனுர் அயராது பணியாற்றியதன் காரணமாக உடல் வலிவிழந்தார். 1936-ஆம் ஆண்டு அவர் நோய்வாய்ப்பட்டார். அந்தச் சமயத்திலே அவர் கேட்க விரும்பிய பாடல் பாரதியாரின், ''என்று தணியும் இந்தச் சுதந்தர தாகம்'' என்ற பாடல்தான். அஞ்சாது, அயராது அறவழி நின்று போராடிய மாவீரன் சிதம்பரனுர் தாம் இறக்குந் தறுவாயில் ''இறப்பதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே!'' என்று கூறி வருந்தினுராம். பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தாராம்.

நவம்பர் பதினெட்டாம் நாள் நள்ளிரவு! செக்கிழுத்த செம்மல் நாட்டு மக்களையெல்லாம் கண்கலங்கச் செய்துவிட்டு மறைந்து விட்டார். அவரது நல்லியல்புகள் நமக்குத் துணையாகட்டும், அவர் காட்டிய வழி நாம் செல்லும் பயணத்துக்கு நல் வழியாகட்டும்; அவர் கொண்ட உறுதி நம் உள்ளத்துக்கும் உறுதியாகி ஒளிவீசட்டும்; வாழ்க சிதம்பரனுர்! வளர்க நாட்டுப் பற்று என்று முழங்குவோமாக!

—பி.வி.ஜி.




1895-ஆம் ஆண்டில் வ.உ.சி. சட்டத் தேர்வில் வெற்றி பெற்று வழக்கறிஞர் ஆனர். முதன் முதலில் தமது தொழிலை ஓட்டப்பிடாரத்திலேயே நடத்தினர்.

* * *

1907-ஆம் ஆண்டில் விடுதலை வீரர் வ.உ.சி. அவர்களால் தூத்துக்குடியில், முதன் முதலில் உரிமை முழக்கம் எழுப்பப்பட்டது.

* * *

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர் உரையை 1928-ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பதிப்பித்தவர் வ. உ. சிதம்பரனுரே யாவர்.

விடுதலை பெற்ற இந்தியாவில் முதன்முதல் 1948-ஆம் ஆண்டில் 'ஜலப் பிரபா' என்ற கப்பலை மிதக்கவிட்ட போது, இந்தியத் துணைப் பிரதமராக இருந்த சர்தார் வல்லபபாய் பட்டேல் பேசுகையில், ''முதன் முதல் வெள்ளையரை எதிர்த்துச் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்தவர் வ. உ. சி'' என்று பாராட்டினர்.

* * *

தென் பாண்டி வணிகர்கள், தூத்துக்குடி-கொழும்பு போக்குவரத்துக்காக வாங்கிய தம் முதற் கப்பலுக்கு 'வி. ஓ. சிதம்பரம்' என்று பெயரிட்டனர்.

# வழிகாட்டி வ.உ.சி

"இனிமேல் தவறுகள் செய்வாயா?" என்று அச் சிறுவனைப் பிரம்பால் அடி அடியென்று அடித்தார் தந்தை.

வலி பொறுக்க முடியாத அந்தச் சிறுவன் 'ஓ' வென அழுதான். அதோடு விட்டானா? பட்டினத்தாரைப் போலத் துறவியாகி எங்கேயாவது ஓடிப் போக வேண்டியதுதான் என்று முடிவும் செய்தான்!

ஒரு நாள் அவன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். ஆம். மொட்டையடித்துக்கொண்டான். வெறும் கோவணத்தைக் கட்டிக் கொண்டான். 'பாதயாத்திரை' கிளம்பி விட்டான்! எங்கு? கால் போன போக்கில்!

தந்தையார் அடித்தார் என்பதற்காகக் கோபங் கொண்டு கோவணத்தோடு சென்ற அந்தச் சிறுவன் பல நாட்கள், உணவு, உறக்கமின்றி ஊர் ஊராகச் சுற்றிக் கடைசியில் மதுரை வந்து சேர்ந்தான்.

தான் செய்தது தவறு என்பதை உணர்ந்தானோ என்னவோ, அவன் வீடு திரும்ப எண்ணினான். உடனே தன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதினான்.

இதற்குள் அவன் தந்தையார் தன் அருமை மகனை அடித்து விட்டோமே என வருந்தித் தேடித் தேடி அலைந்தார். பிறகு மதுரையில் அவன் இருக்கும் தகவல் அறிந்து ஓடோடிச் சென்றார். மகனைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அன்பு மிகுதியால் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். "வீட்டில் இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் கோபித்துக் கொண்டு ஊர் சுற்றலாமா? உன்னைக் கண்டிப்பது, அடிப்பது எல்லாம் உன் நலனுக்காக அல்லவா?" என்று அவனுக்குப் புத்திமதி சொல்லி வீட்டுக்கு அழைத்து வந்தார்.

தந்தையிடம் கோபித்துக் கொண்டு, தற்காலிகத் துறவியான அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், விடுதலை வீரர் என்றெல்லாம் போற்றிப் புகழப் பட்ட வ.உ.சி.! ஆம். வ.உ. சிதம்பரனார்!

திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் கிராமத்தில் பிறந்த இவர், முதலில் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தார். அப்போது அவருக்கு ஆசிரியராக இருந்தவர் வீரப் பெருமாள் அண்ணாவி என்பவர். தன் மகனுக்குத் தமிழோடு ஆங்கிலமும் கற்பிக்க அவர் தந்தை விரும்பினார். அப்போது ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலப் பள்ளி எதுவுமில்லை. அதனால் வசதி மிக்க வ.உ.சி.யின் தந்தை என்ன செய்தார் தெரியுமா? தன் மகனுக்காகவே ஒரு புதிய பள்ளிக் கூடத்தைக் கட்டி விட்டார்! பிறகு அந்தப் பள்ளி பலருக்கும் பயன்படுவதாயிற்று.

"ஓடி விளையாடு பாப்பா!" என்று பாரதி சொன்னதுபோல வ.உ.சி. சிறுவயதில் விளையாட்டு விரும்பியாக விளங்கினார். நீந்துதல், கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல், மற்போர் முதலிய விளையாட்டுகளில் அவர் சிறந்து விளங்கினார்.

வ.உ.சி. விடுதலை வீரர் மட்டுமல்ல; சிறந்த தமிழறிஞர்; கவிஞர்; பேச்சாளர்; பண்டைத் தமிழ் நூலாம் தொல்காப்பியம் இளம் பூரணர் உரையை முதன் முதலில் பதிப்பித்தவர். திருக்குறளுக்கு உரை எழுதியவர். இத்தனைச் சிறப்புமுள்ள அவர், சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார். பணத்துக்கு ஆசைப்பட்டு பொய் வழக்காடவில்லை அவர். நியாயத்துக்கும், நேர்மைக்கும் பாடுபட்டார். உண்மை வென்றே தீரும் என்பதை அவர் பல வழக்குகளில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்.

ஒரு சமயம் ஒரு போலீஸ் அதிகாரியைச் சிலர் சுட்டுக் கொன்று விட்டனர். அவரைச் சுட்டவர்கள் யார் என்பதைப் போலீசாரால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே, போலீசார் சம்பந்தமில்லாத சிலரைப் பிடித்து வந்து அவர்கள் மீது வழக்குப்போட்டார்கள்!

ஏழைகளுக்காகவே வாதாடி அவர்களைத் தண்டனையிலிருந்து விடுவிப்பவர் வ.உ.சி. என்று அனைவரும் அறிந்திருந்தனர். ஏழைகளுக்கு எதிராக, உண்மைக்குப் புறம்பான வழக்கு எதுவாக இருந்தாலும் அவர்களுக்காக வாதாடி வெற்றி காண்பவர் வ.உ.சி., என்று போலீசாருக்கும் தெரியும்.

ஆகவே, இந்த வழக்கையும், அவர் கலைந்துவிடுவாரோ என்று அஞ்சிய போலீசார் ஒரு சூழ்ச்சி செய்தனர்.

'போலீஸ் அதிகாரியைச் சுட்டுக் கொல்ல வ.உ.சி.யும் சதி செய்தார்' என்ற பொய் மனுவைத் தயார் செய்தனர். அதை வ.உ.சி.யிடம் குறிப்பிட்டு ''நீங்கள் இந்த வழக்கில் தலையிடாதிருந்தால் உங்கள் பெயரை நீக்கிவிடுகிறோம்!'' என்று கேட்டுக் கொண்டனர். உள்ளத்தால் கொஞ்சங்கூட அவர் இதற்குச் சம்மதிக்கவில்லை. 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்' என்று எண்ணி அவர்களுக்குச் சரி என்று சொல்வது போலத் தலையசைத்தார்.

ஒரு நாள் இந்தக் கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்ட நிரபராதிகளே ஒன்றும்புரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர். 'எந்தக் குற்றமும் செய்யாத எங்களுக்கு யாருமே துணை இல்லையா? என்று கேட்பது போல அவர்கள் பரிதாபமாகக் காணப்பட்டனர்.

''ஏன் இல்லை? இதோ நானிருக்கிறேன். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம்!'' என்று வ.உ.சி. எதிர்த் தரப்பு வழக்கறிஞராக வந்து அமர்ந்தார். இதைச் சற்றும் எதிர்பாராத போலீசார் உண்மைக் குற்றவாளிகளைப் போலக் கதி கலங்கினர். இந்த வழக்கில் திறமையாக வாதாடி, உண்மையை நிலைநாட்டினர் வ.உ.சி.

வழக்கு வ.உ.சி. பக்கம் வெற்றி பெற்றதைக் கண்டு போலீசார் ஆத்திரமடைந்தனர். 'சாட்சியைக் கலைத்து விட்டார்' என்று சொல்லி அவர் மீது வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கும் விசாரணைக்கு வந்தது. தூத்துக்குடி துணை நீதிபதி 'லயனல் வைப்பர்ட்டு' என்பவர் வழக்கைத் தீர விசாரித்தார். 'போலீசாரின் வழக்கு பொய்' என்று தீர்ப்புக் கூறி, அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார். அதோடு குற்றமற்ற வ.உ.சி.க்கு நட்ட ஈடு தருமாறும் கட்டளையிட்டார். அன்று முதல் வ. உ. சி. யிடம் வம்புக்கு யாரும் வருவதில்லை!

'நன்றி மறப்பது நன்றல்ல' அல்லவா? நம்நாட்டு விடுதலைக்காக அயராது பணியாற்றிய வ.உ.சி., தமக்குத் துன்பம் வந்த காலத்தில் உதவியவர்களையெல்லாம் மறக்கவே இல்லை.

வெள்ளையருக்கு எதிராகக் கப்பலோட்டக் 'கப்பல் சங்கம்' என்ற ஒன்றை அவர் நிறுவினார். இச்சங்கத்தின் மூலமாகக் கப்பல் வாங்குவதற்காகப் பம்பாய் போயிருந்தார்; வரச் சிறிது காலம் ஆனது. அப்போது அவரது சங்கத்தையும் குடும்பத்தையும் கவனித்து வந்தவர் ஆறுமுகம்பிள்ளை என்பவர். அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் தம் இரண்டாவது மகனுக்கு ஆறுமுகம் என்ற பெயரை வைத்தார்.

சிதம்பரனார் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்த போது, அவருக்கு உதவிகள் பல புரிந்தவர் வழக்கறிஞர் சி. கே. சுப்பிரமணியமுதலியார் என்பவர். அவரது பெயரைத் தம் மூன்றும் மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தார் வ.உ.சி.

சிறையிலிருந்து விடுதலையான சிதம்பரனார் தொழில் இல்லாமல் வருந்திய சமயத்தில், இவர் மீண்டும் வழக்கறிஞர் தொழிலைச் செய்வதற்கு உதவி புரிந்தவர் இ.எச். வாலஸ் என்பவர். அவரை மறவாத வ.உ.சி. தம் கடைசி மகனுக்கு 'வாலேஸ்வரன்' என்று பெயரிட்டு அழைத்தார்.

சிதம்பரனார் சிறையிலிருந்த போதும், மற்றக் காலங்களிலும் அவருக்கு உதவி புரிந்தவர்கள் பலர். அவர்களில் வேதியப்பப் பிள்ளை என்பவர் குறிப்பிடத் தக்கவர். அவரது நினைவாகத் தம் மகள் ஒருவருக்கு வேதவல்லி என்று பெயரிட்டுப் பெருமையாக அழைத்து வந்தார்.

இப்படி வாழ்க்கையில், எல்லாருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டியவர் வ.உ.சி. துணிவு, முயற்சி, உழைப்பு, நாட்டுப் பற்று, நேர்மை போன்ற அருங்குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த வ.உ.சிதம்பரனாரின் வழியைப் பின்பற்றிச் செல்வோமாக!

மத்திய அரசின் அஞ்சல்துறை சிதம்பரனருக்கு, செப்டம்பர் 5-ஆம் நாளில் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்வது பாராட்டுக்குரியது.

—'கி,



# அடித்தளத்தில் அழுந்திக்கிடக்கும் மக்கள் வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வோம்.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு கையில் ஒரு தடியுடன், கதராடையும் அரையாடையாக உடுத்திக் காந்தியடிகள் சுதந்தர அகல் விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு, சரளைக் கற்கள் நிறைந்த பாறையின் உச்சி நோக்கிக் கல்லும், முள்ளும் காலில் குத்துவதைப் பொருட்படுத்தாமல் '' காற்றடிக்குது; மழை பொழியுது; ஆனாலும் கலங்க மாட்டேன் '' என்று கை மலரால் விளக்கின் சுடர் அணையாமல் காத்தளித்துக் குன்றின் மீது வைத்துச் சென்றார்.

வழக்கறிஞராக வாழ்வு தொடங்கி—அந்த வாழ்வு, இந்த மண்ணின் விடுதலைக்கே ஆகட்டுமென்று அறமுரசு ஒலித்து—ஆங்கிலேயர் ஆட்சிதனை அகற்றிக் காட்டி, அடிமை விலங்கொடித்த காந்தியண்ணல் கண்ட கனவு, விடுதலைக்குப் பின் புதிய இந்தியா எனும் புனிதக் கனவாகும் !

அந்தக் கனவு பலித்திடத் தாயகத்தின் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களின் கரங்கள் உயர்ந்து நிற்கின்றன.

அந்தக் கரங்கள் மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள் !

சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள் !

ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள் !
ஆலையின் சக்கரம் சுழற்றிடும் கரங்கள் !
நாற்று நடுகின்ற கரங்கள் !
நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள் !

பால் கிண்ணம் ஏந்தும் கரம்—

பழரசக் கோப்பை எடுக்கும் கரம்—
பாதாம்—பிஸ்தா—பச்சை முந்திரி—
பொறுக்கும் கரம்—மிக மிகக் குறைவு !

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே ! அவற்றில் சில கரங்களாகவும், பல மரங்களாகவும் இருப்பானேன்?

ஏற்றத் தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்தரம் பெற்றோம் அன்று ? இல்லை—இல்லை—இல்லவே இல்லை.

முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன் ? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன் ?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம் !

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை—
கல்லார் இல்லை—நல்லார் மீது
பாய்கின்ற வல்லார் இல்லை !
எங்கும் புதுமை ! எதிலும் புதுமை !
அனைத்தும் பொது உடைமை !

அந்நிலை நோக்கிப் படிப்படியாக—ஆனால் உறுதியாக நடைபோடும் நம் அரசு என்பதை நாடறியும் !

அடித் தளத்தில் அழுந்திக் கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வதுதான் சுதந்தரம் பெற்றதன் பயன் என்பதை அறிந்து செயலாற்றி வருகின்றோம். சுதந்தரத்திற்குத் தந்த விலை, மதிப்பில்லாதது ! உண்மைதான் ! ஆனால் தியாகிகளைப் பாராட்டும் அதே நேரத்தில் அது ஒன்றுதான் நம் வேலை என்று எண்ணிடாமல் எதற்காகச் சுதந்தரம் கேட்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறச் செயலாற்ற முனைதல் வேண்டும்.

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன—களிப்பூட்டும் வகையில் !

போரின் கோரத் தாண்டவத்தால் அழிந்துவிட்ட நாடுகளின் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியந்திருக்கின்றோம்.

இங்கு அடிமை ஒழிந்து ஆண்டுகள் பல வாயினும் அகிலத்தில் தலை தூக்கிச் செழுமை மிகுந்த சித்திரப் புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோமே ; எதனால் ?

சிந்திக்க வேண்டாமா ?

சிந்தித்துச் செயல்பட வேண்டாமா ?

'' நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது. அந்த அடிப்படையில் தான் நமது பணிகள் அமைய வேண்டும். நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய

முதல்வர் கலைஞர்

புதிய சோதனைகள் ஏற்படலாம். பணிவு, எளிமை, அகிம்சை, பொறுமை ஆகிய நல்ல பண்புகளினல் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி பெற்றுவிடலாம்'' என்று உத்தமர் காந்தி உரைத்திட்டார் பல முறையும்!

அந்த அண்ணல் வழிதான் அண்ணன் தந்த வழியென்று, நம் அயராத உழைப்பையெல்லாம், சிற்றூரிலும் வரப்பெடுத்த வயல்களிலும், ஆறு தேக்கிய நல்வாய்க்கால்களிலும் வகைப்படுத்திப் பசுமைப் புரட்சி செய்து, தீவிரச் சாகுபடி மூலம் உணவிலே தன்னிறைவு பெற்றிருக்கிறோம்.

நகரத்தின் வசதிகள், கிராமங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காக மின் விளக்கில்லாத கிராமங்களே இருத்தலாகாது என்று உறுதியெடுத்து அந்தப் பணியினைப் பெரும் பகுதி முடித்துவிட்டோம்.

இணைப்புச் சாலைகள் மாநிலம்–முழுதுமுள்ள எல்லாக் கிராமங்களையும் சில ஆண்டுகளில் இணைத்துவிடும்.

குடிநீர் வாரியத்தின் பணியும், உள்ளாட்சித் துறையின் பணியும் விரைவுபடுத்தப்பட்டு ஆங்காங்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவை வேக வேகமாகத் தீர்க்கப்பட்டு வருகின்றது.

அரிசன மக்களின் காலனிகள் பல்லாண்டுக் காலமாக இருண்டு கிடந்திருந்த நிலை மாற்றி, அவர் தம் இருபதாயிரம் காலனிகளில் முக்கால் பங்கிற்கு மேல் ஒளி விளக்கு அமைத்து விட்டோம்!

சம தர்மத் திட்டங்களின் புது நோக்கோடு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்! ஏற்கெனவே இருந்த விதி விலக்குகள் ரத்து!

ஐந்தாண்டுகளுக்குள் பேருந்துத் தொழில் முழுவதையும் பொதுத் துறையாக மாற்றுகின்ற திட்டம்!

பொதுத் துறையில் தொழிலாளர்களுக்கு, முதலீட்டில் இருபத்து நான்கு சத விகிதம் பங்கு ஒதுக்கப் பெறும் என்ற முடிவு!

இது போன்ற நற்பணிகள், நமது மாநிலத்து மக்களின் மனத்தில் புதிய உணர்ச்சியை உருவாக்கியுள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமுமில்லை.

அந்த உணர்ச்சிப் பெருக்கை நாம் எடுக்கும் விடுதலை வெள்ளி விழாவிலே காணுகிறோம். அறிஞர் அண்ணு கூறியது போல் "1947 ஆகஸ்டு 15—கணக்குத் தீர்த்த நாள்! ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள், கணக்குப் பார்க்கும் நாள்!"

ஆம்—அந்தக் கணக்கைப் பார்த்து அகமகிழும் காரணத்தால்தான்—இந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் ஒரு இலட்சம் ஏழை மக்கள் கண் ஒளி பெறப் போகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்துக் களிப்படையும் காரணத்தால்தான்—விழாச் சிறப்பை எங்கணும் காணுகிறோம் தமிழகத்தில்! இன்று, சென்னையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரும் நானும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொள்ளும் விழா! இதுபோல் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நமது மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தியாகிகளுக்குப் பாராட்டும், விருந்தும் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தில்லி மாநகர் சென்ற தியாகச் செம்மல்களைச் சென்னை ரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன். அவர்கள் கண்களில் '' ஆனந்த பாஷ்யம் '' என்பார்களே, அதனைக் கண்டேன்.

தியாகிகளை மதிக்கும் அரசு இது! அதனால் தான் ஏழாயிரம் தியாகிகட்கு மாதம் ஐம்பது ரூபாய் மானியம் வழங்குகிறோம்! இனிமேல் அதனை 75 ரூபாயாக அளிக்க இருக்கிறோம்.

பாரதிக்கு, வ.உ.சி.க்கு மற்றும் பல வீரத் தளபதிகட்குச் சிலையெடுத்தோம். வள்ளியம்மை பெயராலே நகர் ஒன்றை ஏழு இலட்ச ரூபாய் செலவில் தில்லையாடியில் அமைத்துள்ளோம்.

வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு மானியம், கட்டபொம்மன் சந்ததிக்கு மானியம், நாமக்கல்லார், நெல்லையப்பர் குடும்பத்திற்கு மாதாந்தர உதவித் தொகை, சங்கரலிங்க நாடார் குடும்பத்திற்கு நிதி உதவி.

இத்தனையும் செய்திட்ட இந்த அரசு—கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்திட்ட செக்குதனைச் சென்னையிலே கண் காட்சிப் பொருளாக ஆக்குதற்கும் திட்டம் தீட்டியுள்ளது.

தியாகத்தைப் போற்றுகின்றோம்;

தியாகிகளைத் தெய்வமெனத் தொழுகின்றோம்;

அவர்கள் எதற்காகத் தியாக வேள்வி வளர்த்தனரோ! அந்த நோக்கம் பாழ்படாது பணியாற்றுவோம்!

சமதர்மம்—வெறும் உதட்டு உச்சரிப்பாக இல்லாமல் செயல்படுத்தப்பட வேண்டும்!

கவர்ச்சிகரமான முழக்கங்கள் எளிது! அதனை உளத் தூய்மையுடன் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

முற்போக்குக் கொள்கை வழி நின்று இந்தியா முன்னேற வேண்டும்! ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கையுள்ள தமிழகம், அந்த முற்போக்கு முகிழ்ப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற அளவுக்கு—பாமரப் பாட்டாளி மக்கள்—பட்டிக்காட்டு மக்கள்—வாழ்வை மையமாக வைத்துச் செயலாற்றி வருகிறது!

மேலும் அத்தொண்டு சிறந்திட—தொல்லைகள் அகற்றிட—தூய நெஞ்சங் கொண்டோர் அனைவரும் இந்நாளில் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

வணக்கம்.

[இந்திய விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி, 15-8-1972 மாலை 6-30 மணிக்கு முதல்வர் கலைஞர் வானொலியில் ஆற்றிய உரை.]

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## பொதுப்பணித் துறை

### சென்னை செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்.—சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள கலைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் அரசினர் தேர்வுத் துறை ஆணையர் அலுவலகங்களுக்காக தேர்வுக் கட்டடத்தில் ( Examination Hall ) மேல் இரண்டாவது மாடி கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29-9-1972 மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அங்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 20-9-1972 முதல் 28-9-1972 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1 ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

2 கட்டுத் தொகை.—ரூ. 3,450.

3 வேலையை முடிப்பதற்கான காலம்.—3 (மூன்று) மாதங்கள்.

4 ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலை.—ரூ. 20-ம் விற்பனைவரி 3½ சதவீதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித்தரமாட்டாது.

"P.W.D. Remittances LII other remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடகோட்டம் எண் 1 அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3½ சதவீதம்) அதே சலானில் " XII Sales tax b! receipt under State Sales tax Act. General sales tax " என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்படவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கற்பட்டு வட்டம், அவர்கள் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது எதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்,
சென்னை-5.

(த. 29)

---

## நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம் புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 7-9-1972 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்ளுவார். இந்த ஒப்பந்தப்புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

எண்.—1. மதுரை மாவட்டம்.

வேலையின் பெயர்.—பெரியகுளம் குமிளி சாலை கி. மீ. 15/6-ல் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் வேலை.

கட்டுத்தொகை.—ரூ. 7,000.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.—கோட்டப் பொறியாளர் (நெ. கி. ப.) மதுரை-2.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதின் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) மதுரை-2 விலாசத்திலிருந்து 23-8-1972 முதல் 6-9-1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெடியூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலைக் கிராமப்பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெடியூல்டு பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரன்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரன்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்
கண்காணிப்புப் பொறியாளர் (நெ. கி. ப.),
திருச்சிராப்பள்ளி-20.

(த. 25.)

---

## அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவமனை

### சென்னை-5.

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய் சேய் மருத்துவமனை, சென்னை-5க்கு 1-10-1972 முதல் 31-3-1973 வரை தேவையான மருந்து வகைகள் ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை கண்காணிப்பாளர் அவர்களால் 8-9-1972 காலை 11-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்பட வேண்டிய மருந்து பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5. "XXIII Medical (g) Miscellaneous other receipts" என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரி 0-19 காசு " XII Sales Tax Receipts under State Sales Tax Act— General Sales Tax " என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ சலான்களை தாக்கல் செய்து, கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, ஒப்பந்த நமூனாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய ரூ. 1-50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்படவேண்டும்.

கண்காணிப்பாளர்.

(த. 23.)

---

## தஞ்சாவூர் நகராட்சி

தஞ்சாவூர் நகராட்சியின் 5 மருந்தகங்களுக்கும் 1972-73-ம் ஆண்டிற்குத் தேவையான வருடாந்திர மருந்து தேவையை சப்ளை செய்வதற்குக் குறைந்த பட்ச மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி 13-9-1972 மாலை 4 மணிக்குள் பெற்றுக்கொள்ளப்படும். தேவையான மருந்து விவரப் பட்டியல் இதர விவரங்கள் தஞ்சாவூர் நகராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

ஆ. சேவுகபாண்டியன், பி.ஏ.,
ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி.

(த.1)

## பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்.—செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நிருவாகப் பொறியாளர் உதவிப் பொறியாளர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த அலுவலகங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 14—9—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர் கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தமுறை.—மொத்த தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 4,400.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்.—ரூ. 20 விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம்.

முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டமேற் பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 30—8—1972 தேதி முதல் 12—9—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20· (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் " P. W. D.— Remittances, — Other Remittances" என்ற தலைப்பின் கீழ் " நிர்வாகப் பொறியாளர், பொ. ப. துறை கட்டிடக் கோட்டம் காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப் பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII—Sales Tax b)Receipts Under State Sales Act—Genei Sales —Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்தச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத் துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு, வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்ட் டிராப்டாகவோ " ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் " ஷெடியூல்டு பாங்கு களின் " டிமாண்டு டிராப்ட்கள் " செய்தி பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத் தல் வேண்டும், மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராசன்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 22).

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,) திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிர மணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 7—9—1972 அன்று பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கிகுத் திறக்கப்படும்.

| எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம். |
|---|---|---|
| 1. தஞ்சாவூர் மாவட்டம்— | | |
| முத்துப்பேட்டை-மீமிசல் சாலை மைல் 15/1 (இ.மீ. 24/2ல்) பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 3,550 | கோட்டப் பொறியாளர் (நெகிப), தஞ்சாவூர். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 28—8—1972முதல்6-9-1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள் பிளான்க்ள் முதலிய வற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும்,12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெட்யூல்டு பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ்பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளி கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
கண்காணிப்புப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி-20.

(த. 20).

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி. டி. இராசன், சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15—9—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவ ருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—திருச்சி வடிகால் திட்டம்—மூன்றும் நிலை பிரிவு 1—மண்டலம் மூன்றில் வீட்டு இணைப்பு வசதிகளை செய்து கொடுத்தல்.

ஒப்பந்த வகை : மொத்த தொகை.

முன் வைப்புத் தொகை : ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும். (ரூ. 2,500).

இத்தொகை ஏதேனும் ஒரு தேசீய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ் நாடு குடிநீர் வடிகால் வரியம், திருச்சி செயற்கோட்டம்) அவர்களிட மிருந்து பி. 15, தில்லைநகர், மெயின்ரோடு, திருச்சி-18 என்ற முகவரி யில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 12—9—1972 மாலை 5-00 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜி. சீனிவாசன்,
மேற்பார்வைப் பொறியாளர், செயல்
வட்டம், த. கு. வ. வா., மதுரை-2.

(த. 14).

## நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை), திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 14—9—1972 அன்று பிற்பகல் 3·30 மணி (அலுவலக கடிகாரப்பட்டி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார்கள். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | | கட்டுத் தொகை. | ஒப்பந்த ஷெட்யூல் விலை ஒன்றுக்கு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| | | | ரூபாய். | ரூ. காசு. |
| 1 | மதுரை தொண்டிசாலை மைல் 45/6 (கி.மீ. 73/2) உள்ள பாலத்தைத் திரும்ப கட்டுதல் .. .. .. | | 5,620 | 20 70 |
| 2 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னியவாய்கா லிலிருந்து பாண்டிகண்மாய் ரயில்வே நிலையத்திற்குச் சாலை அமைத்தல் | கி.மீ. 0·0 முதல் 2·0 வரை .. .. | 2,340 | 15·53 |
| 3 | ஷை | கி.மீ. 2·0 முதல் 4·0 வரை .. .. | 2,440 | 15·53 |
| 4 | ஷை | கி.மீ. 4·0 முதல் 6·0 வரை .. .. | 2,455 | 15·53 |
| 5 | ஷை | கி.மீ. 6·0 முதல் 8·0 வரை .. .. | 2,575 | 15·53 |
| 6 | ஷை | கி.மீ. 8·0 முதல் 10·0 வரை .. .. | 2,500 | 15·53 |
| 7 | ஷை | கி.மீ. 10·0 முதல் 12·0 வரை .. .. | 2,465 | 15·53 |
| 8 | ஷை | கி.மீ. 12·0 முதல் 14·0 வரை .. .. | 2,405 | 15·53 |
| 9 | ஷை | கி.மீ. 14·0 முதல் 16·0 வரை .. .. | 2,460 | 15·53 |
| 10 | ஷை | கி.மீ. 16·0 முதல் 18·0 வரை .. .. | 2,425 | 15·53 |
| 11 | ஷை | கி.மீ. 18·0 முதல் 20·0 வரை .. .. | 3,045 | 15·53 |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட மேலே குறிப்பிட்டபடி பணம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை), சிவகங்கை விலாசத்திலிருந்து 1—9—1972 முதல் 13—9—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சாரவாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப் படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்

தி. ப. கந்தசாமி,

கண்காணிப்புப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை),
திருநெல்வேலி-2.

(த.9)

## மின்சார வாரியம்

### கே-2

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர் மின் திட்டம்—குறிப்பிடுகை எண் SUR 1B, SUR 3B, SUR 4B—சுருளியாறு நீர் முகாமில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவது.

1. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதிகளில் பிற்பகல் 3·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன் திறக்கப்படும்.

| குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பிரதியின் விலை (விற்பனை வரி உட்பட). | கட்டுத் தொகை. | ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளப் கடைசி தேதி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. காசு. | ரூபாய். | |
| (1) SUR 1B | .. சுருளி ஆறு நீர்முகாமில் நிரந்தர இட வகைக் கட்டடம் 5 பிளாக்குகள் கட்டுவது. | 10 35 | 2,600 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்). | 5—9—1972 |
| (2) SUR 3B | .. சுருளி ஆறு நீர்முகாமில் நிரந்தர இட வகைக் கட்டடம் பிளாக் 1-ம், 2-ம். | 10 35 | 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்). | 8—9—1972 |
| (3) SUR 4B | .. சுருளி ஆறு நீர்முகாமில் நிரந்தர இட வகைக் கட்டடம் கட்டுவது பிளாக் 3-ம், 4-ம். | 10 35 | 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்). | 2—9—1972 |

2. ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் 10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தி ஐந்து மட்டும்) விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர், சிவில், சுருளியாறு மின் திட்டம், கடலூர் மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எந்த காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத்தொகை (Earnest Money Deposit) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத்தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) அனுப்புவதினால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத்தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட தொகையையோ, வேறு தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்கு பிணை வைப்புத் தொகையை (Security Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5 சதவிகிதம் (ஐந்து சதவிகிதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும் கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடித்தபின் திருப்பித்தரப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டபிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

5. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளிவரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகளை சாதாரணத் தபாலிலேயோ அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதி தபாலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரம் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல.

(த.87)

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்,
34-ஏ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

## பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 14—9—1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4·30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரமும் வரைபடங்கள், விதிமுறைகள் முதலியன ரூ. 30·00 விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டுடன் நகராட்சி மராமத்துக் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 12—9—1972-ம் தேதி முடிய பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண். | கட்டின் நடப்பு. எண். | வேலை விவரம். | மதிப்பீடு தொகை. | முன் வைப்புத் தொகை. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூபாய். | ரூபாய். | |
| 1 | இ1/15116/70 .. | ... கோட்டூர் ரோடிலுள்ள தெப்பக் குளம் வழி ஆரம்பப் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடக் கட்டுதல். | 1,15,586 | 2,890 | 6 மாதம். |

(த.81)

பி. சேது [illegible],
ஆணையர்.

## குடிநீர்வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல்வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 13—9—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : மேலூர் குடிநீர்த்திட்டம்—முதல் நிலை—நீர் கொணரும் குழாய்ப் போக்கிற்கென உறுதிபெறுகற்காரைக் குழாய்களையும் தனி உறுப்புகளையும் பதித்து இணைத்தல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 8,940 (ரூபாய் எட்டு ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பது மட்டும்).

இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாவதம் இவற்றில் ஏதாவது ஒரு, வடிவில் நிருவாகப்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். மதுரை செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : பன்னிரண்டு மாதங்கள்

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 15-54 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், (நிருவாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 8—9—72 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.—இந்த ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரருக்கு முன் தொகையாக ரூபாய் 35,000 (ரூபாய் முப்பத்தி ஐந்து ஆயிரம்) வரை 9 சதவீத வட்டியில் வழங்கப்படும். ஒப்பந்ததாரர் இத்தொகைக்கான தேசிய வங்கி ஒன்றின் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 11)

---

## வனத்துறை—சேரங்கோடு தேயிலைக் கோட்டம்—கூடலூர் பஜார் அஞ்சல், நீலகிரி மாவட்டம்

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்ளுவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேன்மை தங்கிய தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக சேரங்கோடு தேயிலைக் கோட்ட வன அலுவலர் அவர்களால் 20—10—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வேலை விவரம் வருமாறு :—

| வரிசை எண். | வேலைகளின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | சேரங்கோடு மெயின் ரோடில் 1½" அளவுள்ள கருங்கல் ஜல்லி போடுதல் 800 மீட்டர் தூரம் வரை. | 6,900 | 200 |
| 2 | வேலையாட்கள் மனை "எல்" முதல் "யூ" வரை தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஒரு சிறிய அணை கட்டல். | 7,000 | 175 |
| 3 | கோட்ட வன அலுவலரின் குடியிருப்பு, அலுவலகம் மற்றும் சிப்பந்திகள் தங்கும் விடுதிகட்கு தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஒரு சிறிய அணை கட்டல். | 5,000 | 125 |
| 4 | லாரிகள் நிறுத்த கேரேஜ் ( garage ) கட்டல். | 7,000 | .175 |

ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் மேற்குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31-3-1973க்குள் முடிக்கப்படவேண்டும். ஒப்பந்த நமூனவும், மற்ற விவரங்களும் கோட்ட வன அலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது மணியார்டர் மூலமாகவோ ரூ. 4·13 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

எ. க. சோமசுந்தரம்,
கோட்ட வன அலுவலர்.

---

## பொதுப்பணித் துறை

## சென்னை-செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர் : சென்னை கன்னிகாபுரத்தில் அரிசன நல உயர் நிலைப்பள்ளிக்கான கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 29—9—1972 மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர் பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கீழ்க்கண்ட அலுவலகத்தில் 19—9—72 முதல் 28—9—72 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

2. கட்டுத்தொகை : ரூ. 14,000.

3. வேலையை முடிப்பதற்கான காலம் : 9 மாதங்கள்.

4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 20 (விற்பனை வரி 3½ சதவீதம்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை "P.W.D. Remittances III other remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடக்கோட்டம் எண II அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ, ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3½ சதவீதம்). அதே சலானில் "XII Sales tax b-receipt under State Sales tax act-General Sales tax". என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் வங்கியிலோ கட்ட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி பத்திரத்துக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களின் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ (அல்லது) ஏதாவது ஒரு ஒப்பந்தப்புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம், சென்னை-5.

---

## திரு பரிமளரெங்கநாதர் ஆலயம், திருஇந்தளூர், மாயூரம், தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திரு நந்தவனத்தின் காலி இடத்தில் திருமண மண்டபம் ஒன்று புதிதாக கட்டுவதற்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிருவாக அதிகாரியால் 29—9—1972 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நமூனக்கள் திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஷை ஒப்பந்தப் புள்ளிகளை அன்று பகல் 12-30 மணிக்கு ஷை ஆலய அலுவலகத்தில் அறங்காவலர்கள், ஆய்வர், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அறநிலைய ஆட்சித்துறை அங்கீகாரத்திற்குட்பட்டது. மற்ற வேண்டும் விவரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம். | | மதிப்பீடு தொகை. ரூ. | ஒப்பந்த நோட்டீஸ் கிரயம். ரூ. | ஒப்பந்தக் கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| திருமண மண்டபம் புதிதாக கட்ட | .. | 1,95,000 | 5 | 5,000 |

எஸ். ராமசாமி,
நிர்வாக அதிகாரி.

(மு. 60)

## மர ஏல விற்பனை

### வனத் துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கூடலூர் தாலுக்கா, நெல்லியாளம் கிராமம், மேபீல்டு எஸ்டேட், நெலக்கோட்டா அஞ்சலில் நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ 5-9-1972 அன்று ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

மரங்களின் அளவு.

| | | |
|---|---|---|
| ஈட்டி .. .. .. .. .. .. | 19.025 | கனமீட்டர். |
| வேங்கை, தடசு, நந்தி, மத்தி, வாகை .. | 115.587 | கனமீட்டர். |
| | 134.612 | |

மற்றும் 10 டிராக்டர் பாரம் விறகு.

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலருக்கோ அல்லது கூடலூர் உதவி வனப் பாதுகாப்பாளருக்கோ எழுதி பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த. 4.)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண் 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 14-9-1972 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—மேலூர் குடிநீர்த் திட்டம். இரண்டாம் நிலை—ஏழு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதிபெறு கற்காரை நீர்தாங்கி ஒன்றினைக் கட்டுதல்.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 3,660.

இத்தொகை ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பணஉத்திரவுச்சீட்டு அல்லது உத்திரவாதம் வடிவில் நிருவாகப்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டுஅதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 10-35 (விற்பனை வரி உட்பட) திருப்பித்தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மதுரை செயற்கோட்டம்) அவர்களிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 12-9-1972 செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.—இந்த ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரருக்கு முன்தொகையாக ரூ. 14,000 (ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) வரை 9 சதவீத வட்டியில் வழங்கப்படும். ஒப்பந்ததாரர் இத் தொகைக்கென தேசிய வங்கி ஒன்றின் உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 17)

## ஒப்பந்தப் புள்ளி

### கரூர் நகராட்சி

| | | கட்ட வேண்டிய கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| (1) | 7·5 குதிரை சக்தியுள்ள எலக்டிரிக் மோட்டாரை பழுது பார்த்து ரீவைண்டிங் செய்தல். | 25·00 |
| (2) | சிமென்ட் கலவை இயந்திரத்தைப் பழுது பார்த்தல். .. | 25·00 |

மேலே கண்டுள்ள இரண்டு வேலைகளுக்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13-9-1972-ம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

(3) நகராட்சிக்குச் சொந்தமான பழைய இரும்பு மடக்கு சேர்கள் 150-ஐ ஆணையர் அவர்களால் 13-9-1972-ம் தேதி காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் எடுப்பவர் ரூ. 25 முன் பணம் கட்டி ஏலம் கோர வேண்டும். மேலே கண்டுள்ளவைகளுக்கான முழு விவரங்கள் ஒப்பந்த கண்டிஷன் உட்பட பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்துகொள்ளலாம்.

பி. குமாரசாமி,
ஆணையர்.

(த.3)

## ஒப்பந்தப் புள்ளி

### சிவகாசி நகராட்சி

(இ. 2. 4433/72).

கீழ்க்காணும் சாமான்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-9-1972 மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். மேலுறையின் மீது "வார்ப்பு இரும்புக் குழாய்கள் வழங்க" எனக் குறிப்பிட வேண்டும். கிடைக்கப் பெறும் ஒப்பந்தப் புள்ளிகளை அன்று மாலை 4-30 மணிக்கு ஆணையர் அவர்களால் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 200 கட்டுத் தொகை நகராட்சி கருவூலகத்தில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைத்து அனுப்பப்பட வேண்டும். அல்லது பாங்க் டிராப்டுகள் இணைத்து அனுப்பலாம். காசோலைகளுடன் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்வது நகர மன்றத்தின் முடிவுக்கு உட்பட்டதாகும். இதர விவரங்கள் வேண்டுவோர் நகராட்சிப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் அறியலாம்.

| | | |
|---|---|---|
| 1. | 12" C. I (S/S) PIPE 18' —0" Long .... | 10 Nos. |
| 2. | 12" C. I. Collars ... | 12 Nos. |
| 3. | PIG LEAD .... | 200 Kgms. |
| 4. | LEAD WOOL (Best Quality) | 100 Kgms. |

எஸ். அரங்கநாதன், எம்.ஏ.,
ஆணையர்.

(த.2)

## மனைகள் விற்பனை

### வீட்டு வசதி வாரியம்—சேலம் வீட்டுவசதிப் பிரிவு

தருமபுரி மாவட்ட A. ஜெட்டிஹள்ளி கிராமத்தில் பட்டா எண். 217-ல், தமிழ்நாடு வீட்டுவசதிப் பிரிவின் "புறநகரமைப்பு" திட்டத்தின் கீழ் தவணைமுறையிலோ அல்லது முழு விற்பனை முறையிலோ மனைகள் விற்கப்படும்.

ஒரு மனையின் அளவு சுமார் 5 செண்டுகள், விலை சுமார் 3,000 ரூபாய்.

தருமபுரி மாவட்டம் அல்லது தருமபுரி மாவட்டத்தின் வெளியில் சொந்தமாக வீடு இல்லாதவர்கள் மட்டும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விருப்பமுள்ளோர் கீழே கையொப்பம் இட்டுள்ளவரிடமிருந்து ரூ. 1-ஐ மணியார்டர் மூலமோ அல்லது நேரிடையாக அலுவலக நேரங்களில் இவ்வலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி விண்ணப்பங்கள் 15—9—1972-க்குள் இவ்வலுவலகத்தில் வந்து சேரவேண்டும்.

பி. செங்கோடன்,
நிருவாகப் பொறியாளர்,
நிருவாக அதிகாரி,
சேலம் வீட்டுவசதிப் பிரிவு,
சேலம்.

(த. 21)

## பயிற்சி

### மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3

கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் உபயோகிப்பது, சிறிய படகுகளைப் பராமரிப்பது, மரைன் என்ஜின்களுள்ள இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடித்தல்—அவைகளில் பத்து மாத காலத்திற்குப் பயிற்சிப் பெறுவதற்காக உள்ள பாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் 35 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் 18 வயதிற்கு குறையாதவர்களாகவும், குறைந்தது 5 வருடம் கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஆனால் எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது தகுதியற்றதாக கருதப்பட மாட்டாது.

பயிற்சி காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூபாய் 50 (ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளமும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் தினங்களில் நாள் ஒன்றுக்கு 0-50 காசு (ஐம்பது காசு மட்டும்) படியும் அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த இலாக்காவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமே கடலூரில் நடத்தப்படும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பப் பாரங்கள், சேர்ப்பதற்கான தகவல்கள் குறிப்பீடுகளும் வேண்டியவர்கள் மீன்துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3 அவர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பதாளின் தலைப்பில் "நவீன மீன்பிடி பயிற்சி" என்று எழுத வேண்டும். நேர்முகத் தேர்வின் தேதியும், இடமும் அவர்களுக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்படும்.

பயிற்சி நிலையத்தில் மீன் பிடிப்பதற்காக படகுகளில் போகும்போது ஏற்படக்கூடிய எதிர்பாராத விபத்திற்கு அரசு பொறுப்பல்ல.

விண்ணப்பங்கள் மீன்துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3 என்ற விலாசத்திற்கு 8—9—1972 மாலை 4 மணிக்குள் தபாலின் மூலம் கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்.

**துணை இயக்குநர்,**
மீன்துறை,
(மண்டலம்), சென்னை-6.

(த 44)

---

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 20—9—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : கோவில்பட்டி குடிநீர்த்திட்டம்—நகர் அழுத்த நீரேற்று நிலையம்—நீரேற்றிகளும் அதன் சாதனங்களும் அளித்தல் நிர்மானித்தல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 2,950 (ரூபாய் இரண்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பது மட்டும்).

இத்தொகை, பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதாவதொரு வடிவில் மட்டும் கோவில்பட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 15·55. (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்களை வேண்டுவோர் கோவில்பட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்காக மேற்குறித்த விலையினைச் செலுத்தி 16—9—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம்,
செயல் வட்டம், மதுரை-2.

(த. 42)

---

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண் SE/ETS/6/72-73.

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்—உபயோகப்படுத்தப்பட்ட (கட்டுமான) தளவாடங்கள்" வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண் SE/ETS/6/72-73 எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 29—9—1972 மாலை 3-30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) விற்பனைக்குள்ள (கட்டுமான) தளவாடங்கள், ஏர் கம்பரசர், காங்கிரீட் மிக்சர், பம்பு செட்டுகள் மோட்டாருடன் இணைக்கப்பட்டது அல்லது இணைக்கப்படாதது, வேகன் டிரில், டீசல் எஞ்சின்கள், டிரெய்லர்கள், ஒர்க்ஷாப் எந்திரங்கள், பார்கோ டிப்பர் இன்னும் பிற.

(3) ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) எண்ணூர் அனல் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இந்தத்தொகை யாதொரு காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதிகமாக 1 ரூபாய் (மேற்கூறிய ஒப்பந்தப் பிரதிகள் தொகையைத் தவிர) செலுத்த வேண்டும்.

(4) இந்த வேலைக்கான முன்பணம் ஒப்பந்தப்புள்ளிப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும்.

(5) மின்சார வாரியத்தைச் சேர்ந்த நமூனக்கள் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித்தேதிக்கும் நேரத்திற்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது தள்ளுபடி செய்வதற்கும் ஒப்பந்தங்களைப் பிரித்துக் கொடுக்கவும் எண்ணூர் அனல் மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

(6) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

(த. 41)

---

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—9—1972 மாலை 3 மணிவரை நகராட்சி பொதுப் பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 12—9—1972-ம் தேதி மாலை 3·30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர், அவர்களால் திறக்கப்படும். இவ் வேலைக்கான ஷெட்யூல் பாரங்கள் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை, ரூ.10·35 நகராட்சிக்கருவூலத்தில் செலுத்தி, பொதுப்பணி பொறியாளர், அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | பட்டியல் தொகை. | கட்டுத் தொகை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| (1) கோவை ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல். | 55,000 | 1,130 | 4 மாதம். |

**ஆணையர்.**

(த-38)

## நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

சாத்தூர் கோட்டம்.

கோட்டப் பொறியாளர் (நெகிப) சாத்தூர் அவர்களால் கீழே கொடுக்கப்பட்டுள்ள மைல்டு எஃகு கம்பிகளுக்கு (பரிசோதிக்கப்பட்ட) அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 13—9—1972 தேதியன்று பிற்பகல் 3-30 மணிவரையிலும் கோரப்படுகின்றன.

| பொருட்களின் விவரம். | தேவையான அளவு (சுமாராக) மெட்ரிக் டன். |
|---|---|
| 6 மில்லி மீட்டர் .. .. .. .. | 0·70 |
| 10 மில்லி மீட்டர் .. .. .. .. | 5·80 |
| 12 மில்லி மீட்டர் .. .. .. .. | 1·73 |
| 16 மில்லி மீட்டர் .. .. .. .. | 2·30 |
| 20 மில்லி மீட்டர் .. .. .. .. | 1·32 |
| 25 மில்லி மீட்டர் .. .. .. .. | 7·07 |

குறிப்பு.—

(1) ஒப்பந்த அறிக்கை, நிபந்தனை, ஒப்பந்த விவரம் முதலியவைகளை கோட்டப் பொறியாளர் (நெகிப) அலுவலகத்தில், அலுவலக நாட்களில், ரூ. 5·15-ஐ தொகையாக செலுத்தி (விற்பனைவரி உட்பட) 5—9—1972 மாலை 5·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒப்பந்தங்கள் குறிப்பிடப்பட்ட நமூனாவில்தான் இருத்தல் வேண்டும். மற்ற நமூனாக்களில் கொடுக்கப்படும் ஒப்பந்தங்கள் முழுமையாக நிராகரிக்கப்படும்.

(3) பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட கம்பிகளுக்குத்தான் விலை கேட்கப்படல் வேண்டும்.

**கோட்டப் பொறியாளர் (நெகிப),**
சாத்தூர் கோட்டம்.

(த. 12)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம் அண்ணாசாலை சென்னை-2

வரும் இரண்டு ஆண்டுகளுக்கு பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் அசோக் நகர் பேருந்து நிலையத்திலுள்ள சிற்றுண்டிச் சாலை ஒன்று குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட கவர்கள் 13—9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அந்த சிற்றுண்டி சாலையின் அளவு 30 × 20 அடி. முத்திரையிட்ட கவர்கள் அதே நாள் 13—9—1972 மாலை 3-15 மணிக்கு செயலாளரால் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள் சென்னை பல்லவா போக்குவரத்துக் கழகம், செயலாளர் அவர்களிடம் ரூ. 1·04 கட்டி, ஆபீஸ் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

**நிருவாக இயக்குநர்.**

(த. 19)

---

## கரூர் நகராட்சி

நகராட்சியால் சப்ளை செய்யப்படும் "பர்கோ" லாரி சேசிசில் கேபின் கட்டவும், இலாக்கா மூலம் சப்ளை செய்யப்படும் 1,000 காலன் கொள்ளளவுள்ள இரும்பு டாங்கை பைப்கனெக்ஷன் போட்டு பிட்டிங் செய்து கொடுக்கவும் 14—9—1972 தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். டேங் பிட்டிங் செய்வதற்கான முழு விவரமும், கேபின் கட்டுவதற்கான முழு விவரமும் ஒப்பந்த கண்டிஷனுக்கும் பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தம் கொடுப்பவர்கள் கட்டுத் தொகை ரூ. 250 செலுத்தி ஒப்பந்தம் கொடுக்க வேண்டும்.

**பி. குமாரசாமி,**
ஆணையர்.

(த. 33).

---

## எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண். AEP 109.

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் உறையில் Ennore Thermal Scheme, Supply Enamel Grey Paint AEP 109 எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 2-30 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(2) தேவையான பொருட்கள், குறிப்பு எண், முன்பணம், முடிவு தேதி முதலியன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| Description. | Spec. No. | EMD Payable. | Cost of Tender Set. | Due date. |
|---|---|---|---|---|
| Enamel Grey Paint to IS 2932/64. | AEP 109. | Rs. 500. | Rs. 5. | 15-9-1972 |

(3) ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து 20-8-1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(4) துறையினரைச் சார்ந்த நமூனாக்களில்லாத ஒப்பந்தங்களும், முடிவு தேதியிலும், நேரத்துக்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். எதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

(5) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
எண்ணூர் அனல் மின்திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண் 59556 (5 Lines Ext. 18)
தந்தி : Entermal
(த. 34)

---

## கோதையாறு நீர் மின்திட்டம்

1. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்பட்டு வருவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3·00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4·00 மணிகு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்—1.

குறிப்பிடுகை எண்—1/72.

வேலையின் பெயர்—20 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு.

ஒப்பந்த செட்டின் விலை (விற்பனை வரி உள்பட)—ரூபாய் 3·00

கட்டுத் தொகை—ரூபாய் 200.

ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசி தேதி—15—9—1972.

2. ஒப்பந்த செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மறுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப்புள்ளிகளையும் கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (Demand Draft) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தம் அனுப்பக் கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நிபந்தனைகள் படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத்தொகை கட்டியதை இணைத்துக் கொள்ள கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப்பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கோதையாறு மின்மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

(த-39)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் இராமநாதபுரம் மாவட்டம், மதுரை-1

ந. க. 23819/72 வ. 8.

நாள் 10—8—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப்பொறியாள அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நி உரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 8-9-1972 மாலை 4 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட் உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண். | வேலைகளின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் படிவம். | ஒப்பந்தப்புள்ளியின் விலை. |
|---|---|---|---|---|
| | **பெரியாறு மண் அணை** | | | |
| | | ரூ. | | |
| 1 | மண் அணையின் பின்புறத்தில் வடிகட்டும் அமைப்பு வேலை, கசிவு நீர் தாங்கிச் செல்லும் வாய்க்கால் வேலை ஆகியவைகளைச் செய்தல் எல். எஸ். 0 மீட்டர் முதல் 110-வது மீட்டர் முடிய எல்.எஸ். 230-வது மீட்டர் முதல் 310-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. | 2,130 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |
| 2 | மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும், சரள் மண் அடுக்கு தலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 0 மீட்டர் முதல் 300-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. .. .. | 4,250 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |
| 3 | மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும், சரள் மண் அடுக்கு தலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 300-வது மீட்டர் முதல் 555-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. .. | 6,000 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |
| | **கோவிலாறு மண் அணை** | | | |
| 1 | மண் அணையின் பின்புறத்தில் வடிகட்டும் அமைப்பு வேலை, கசிவு நீர் தாங்கிச் செல்லும் வாய்க்கால் வேலை ஆகிய பணிகளைச் செய்தல் எல். எஸ். 60-வது மீட்டர் முதல் 150-வது மீட்டர் முடிய எல்.எஸ். 240-வது மீட்டர் முதல் 660-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. | 3,500 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |
| 2 | மண் அணையின் முன் புறத்தில் அலைகல் பாவுதலும் சரள் மண் அடுக்கு தலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 0 மீட்டர் முதல் 300-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. .. .. | 4,750 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |
| 3 | மண் அணையின் முன்புறத்தில் அலைகல் பாவுதலும் சரள் மண் அடுக்கு தலும் ஆகிய வேலைகளைச் செய்தல் எல்.எஸ். 300-வது மீட்டர் முதல் 660-வது மீட்டர் முடிய .. .. .. .. .. .. .. | 3,430 | கே. 2 | ரூ. 20 விற்பனை வரி ரூ. 0·70 |

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 8-9-1972 அன்று மாலை 4-30 மணிக்கு வந்த ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தத்திற்கான தொகை ரூ.20·70 அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை-1 என்ற விலாசத்தில் மனு செய்தால் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் வரைபடங்கள் முதலியவைகள் ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ பி.டபிள்யூ.டி.111 ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை பிளவுக்கல் கோட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கான ரூ. 0·70 காசை "12 விற்பனை வரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித் தனியாக செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும்பொழுது உறையில் மேல் வேலையின் பெயரும் கருவூலத்தில் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ.ப.து.) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை அலுவலகத்தில் 30-8-1972 முதல் 6-9-1972 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 6-9-1972 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். இதற்குப்பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்பிற்கு இத்துறையினர் பொறுப்பாகமாட்டார்கள். இது போன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டுகள் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு அல்லது தற்போதைய மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி விற்பனை வரி முதலியவைகளை செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதாரர்கள் பங்கு எடுத்துக்கொண்டால் டிப்டி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிகேட்டும் இத்திட்டத்தில் பயன் பெறும் கண்மாயில் ஆயக்கட்டுதார் என்பதற்கும் அத்தாட்சி வாங்கி ஒப்பந்தத்துடன இணைக்க வேண்டும்.

கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டு கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப்பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப்புள்ளி களையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

கே. எஸ். இராமசாமி,
மேற்பார்வைப்பொறியாளர், பொ.ப.து.,
இராமநாதபுரம் வட்டம், மதுரை.

(த. 52)

## சென்னை வட்டத்தில் தமிழ்நாடு கல்வி சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள், மற்றும் சிறப்பாசிரியர்கள் அலுவலர் இடங்களுக்கு நியமனங்கள்

சென்னை வட்டத்தில் உள்ள "ஏ" பிரிவு அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில், சென்னை வட்ட மகளிர் பள்ளி ஆய்வாளரின் நியமன வரம்பிற்குட்பட்ட கீழ்க்கண்ட அலுவல் இடங்களுக்கு ஆசிரியர்களை நேரிடையாகத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டித் தகுதியுள்ள பெண் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

### எதிர்பார்க்கும் காலியிடங்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| 1. | இடைநிலை ஆசிரியர்கள் தமிழில் போதனை செய்யக் கூடியவர்கள் .. .. .. .. .. .. .. | 2 |
| 2. | இரண்டாம் நிலை தமிழ்மொழிப் புலவர் .. .. .. | 3 |
| 3. | இரண்டாம்நிலை உருது மொழிப் புலவர் .. .. .. | 2 |
| 4. | இசை ஆசிரியை .. .. .. .. .. | 1 |
| 5. | இரண்டாம்நிலை உடற்பயிற்சி ஆசிரியை .. .. .. | 1 |

குறிப்பு.—பெண் வேட்பாளர்கள் மட்டுமே மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

2. மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளும், ஊதிய அளவு வீதமும்.

### (அ) இடைநிலை ஆசிரியை (தமிழ்)

தகுதி :—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேணடும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (ஆ) இரண்டாம் நிலை தமிழ்மொழிப் புலவர்

தகுதி :—சென்னை, மதுரை அல்லது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியில் கீழ்த்திசை பயிற்சி நூல் பட்டம் பெற்றவராகவும், இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வழங்கும் கற்பித்தலுக்கான டிப்ளமா பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (இ) இரண்டாம் நிலை உருது மொழிப் புலவர்

தகுதி :—அடிப—இ—பஸில் என்ற உருது மொழி கீழ்த்திசை பயிற்சிப் பட்டம் பெற்றவராகவும், இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (ஈ) இசை ஆசிரியை

தகுதிகள் :—உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதியவராகவும், மத்திய கர்நாடக இசைக் கல்லூரியில் வழங்கப்பட்ட சங்கீத வித்வான் பட்டமோ அல்லது இந்திய இசையில் டிப்ளமா பட்டமோ அல்லது சென்னை பல்கலைக் கழகம் வழங்கும் சங்கீத சிரோன்மணி பட்டமோ அல்லது அண்ணுமலை பல்கலைக் கழகம் வழங்கும் சங்கீத பூஷண பட்டமோ அல்லது இந்திய இசையில் ஹையர் கிரேடு சான்றிதழோ பெற்றவராகவும் உயர்நிலைத்தர கைத்தொழிலாசிரியர் சான்று ஒன்றே பெற்றவராக இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு :—ரூபாய். 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (உ) இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியை

தகுதிகள் :—மாநில அரசினரால் வழங்கப்பட்ட கீழ்நிலை (லோயர் கிரேடு) உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்

3. வயது :—மேற்குறித்த அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் 1—7—1972 ஆம் நாளன்று, 30 வயதுக்கும் மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

4. தமிழ்மொழியில் போதிய அறிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

விளக்கம் :—இவ்விதியின் கருத்தில், தமிழில் போதுமான அறிவு வாய்ந்த (i) உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழ் அறிவு பெற்றிருப்பவர் அல்லது (ii) ஒருவரது தாய்மொழி தமிழாயிருப்பினும் அவ்வாறு இல்லையெனினும், தமிழில் பேச வாசிக்க எழுதத் திறமை உள்ளவர் அல்லது (iii) "தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில்" தேறியிருப்பவர் ஆவார்.

குறிப்பு :—தமிழில் போதுமான அறிவு பெருதவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனல் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவோர்களேயானல், தகுதிகாண் பருவத்திற்குள், அல்லது நியமன தேதியிலிருந்து, நான்காண்டுகளுக்குள்ளாக, தமிழ் இரண்டாம் மொழித் தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும். இல்லையேல் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் இந்த அறிவிப்பின் அட்டவணையில்கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் எண். 481, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-84ல் உள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் அவர்களுக்கு 30—9—1972ஆம் நாளன்றே அல்லது அதற்கு முன்பாகவோ சேரும்படியாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது, தொழில் மற்றும் தொழில் நுணுக்கச் சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படவேண்டும்.

பொறுப்பு வாய்ந்த இரண்டு நபர்களிடமிருந்து 1—1—1972-க்குப் பின்னர் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ்களை அசலாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

அரசு, உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார் பள்ளிகளில் தற்காலிக நியமனத்தின் கீழ் ஏற்கெனவே நியமனம் ஆகி, பணியில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பள்ளித் தலைமை ஆசிரியைகள் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசாங்கக் கருவூலத்தில் ரூபாய் 10-ஐ (பத்து ரூபாய்) "22 கல்வி—இ—பொது—பலவகை—மற்ற இனங்கள்—என்ற தலைப்பில் செலுத்தி, அசல் செல்லுச் சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செலுத்தப்பட்ட தொகையைத் திரும்ப அளிக்க இயலாது.

வேட்பாளர்களுடன் நேர் காணல் நடத்தியமுடிவுகளின் அடிப்படையில் சென்னை மகளிர் பள்ளி ஆய்வாளரால் நியமனங்களுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். நேர் காணலுக்கு அழைக்கப்படும்போது வேட்பாளர்கள் தங்கள் சொந்தச் செலவில் வரத் தயாராக இருக்க வேண்டும்.

தேர்வும் அதற்குப்பின்னர் நியமனமும் அரசுப் பணிக்கு உட்படுத்திக் கொள்ள இறுதியானது என உரிமை கொள்ள முடியாது.

அலுவலக உறுப்பினர்கள் மூலமாகவோ, நேரடியாகவோ, அல்லது நண்பர்கள், உறவினர்கள் ஆதரவாளர்கள், அலுவலர்கள் போன்றவர்கள் மூலமாகவோ, ஆதரவு தேடும், அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளரிடம் செல்வாக்கு கொண்டுவர முயற்சி செய்யும் வேட்பாளர்கள் எந்த காரணத்தையும் குறிப்பிடாமலே எப்படியிருந்தாலும் தேர்வு செய்வதிலிருந்து, முழுவதுமாக தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்.

போதிய தகுதிகள் இல்லாதவர்களும், அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்படாத வேட்பாளர்களும், விண்ணப்பிக்கவேண்டியதில்லை.

உரிய இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பத்தை அனுப்பும் போது உறையின் மீது "..............................." ஆசிரியர் அலுவலர் பணிக்கு விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

### தமிழ்நாடு கல்விச் சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியைகள் மற்றும் சிறப்பு ஆசிரியைகள் அலுவல்களுக்கு நேரடி நியமனம் கோரும் விண்ணப்ப நமூனு.

1. விண்ணப்பிக்கும் அலுவல் இடத்தின் பெயர்

2. விண்ணப்பதாரரின் பெயர்.

3. (அ) தகப்பனர் பெயரும், அலுவல் அல்லது தொழில்.

(ஆ) மணமானவரானல் கணவர் பெயரும், அவருடைய அலுவல் தொழில்.

4. விண்ணப்பதாரர் கல்வி பயின்ற நிலையங்கள்.

கல்வி நிலையத்தின் பெயர் .. ..

வகுப்பு அல்லது படிவம் .. ..

படித்த வருடம் .. .. ..

. தாய் மொழி .. .. .. ..

6. (அ) தேசிய இனம் .. .. ..

(ஆ) மதம், ஜாதி மற்றும் இனம் ..

(இ) விண்ணப்பதாரர் அட்டவணையில் கண்ட இனங்கள்/அட்டவணையில் கண்ட பழங்குடியினர்/பிற்பட்ட வகுப்பினர் அல்லது கிருஸ்துவ மதத்திற்கு மாறிய இனத்தைச் சேர்ந்தவரா? (ஆம் எனில் குறிப்பிடுக).

7. பிறந்த தேதி .. .. .. ..

8. (அ) மிக அதிகமாகப் பெற்ற பொதுக் கல்வித் தகுதி.

(சான்றிதழ் எண். வருடம் எஸ்.எஸ்.எல்.சி. யில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற மதிப் பெண்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) தொழில் மற்றும் தொழில் நுணுக்கத் தகுதிகள் சான்றிதழ் எண்., வருடம், தேறிய வகுப்பு அல்லது தரம் ஆகியவைகளைக் குறிப்பிடப்பட வேண்டும்.

9. எஸ். எஸ். எல். சி. அல்லது இதர பள்ளியில் படித்த பாட மொழி.

10. தெரிந்த இதர மொழிகள் (பேசவும், எழுதவும், படிக்கவும் தெரியுமா என்பதைக் குறிப்பிடுக).

11. முன் அனுபவம் இருப்பின் அதுபற்றிய விவரம்.

பள்ளியின் பெயர் .. .. ..

வகித்த பதவி .. .. .. ..

ஊதியம் .. .. .. ..

ஊழிய காலம்.

தேதி முதல் தேதி வரை .. ..

நீங்கியதற்கான காரணம் .. ..

12. விளையாட்டு, என். சி. சி., எ. சி. சி. முதலியவைகளில் வேட்பாளர்களின் பங்கு பணிகள் பற்றிய விவரம் ..

13. சரியான முழு அஞ்சல் முகவரி

14. ரூபாய் 10 செலுத்திய கருவூலத்தின் பெயரும் செல்லுச் சீட்டின் எண்ணும் தேதியும் .. .. .. ..

15. நன்னடத்தைச் சான்றிதழ் அளித்துள்ள நபர்களின் பெயர்கள் .. ..

சான்றிதழ் அளித்த நபரின் பெயர் ..

முழு விலாசம் .. .. .. ..

சான்றிதழின் தேதி .. .. ..

உறுதி மொழி

திருமதி/செல்வி.......................................... ஆகிய நான், இதற்கு முன்னர் எப்போதாவது, அரசு ஊழியத்திற்குத் தகுதி இல்லையென மருத்துவ அதிகாரிக் குழுவினால் ஆக்கப்படவில்லை எனவும், இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரை உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

கௌசல்யா கோவிந்தராஜன்,
மகளிர் பள்ளி ஆய்வாளர்,
சென்னை வட்டம், சென்னை.

(த.54)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—சேலம் மாவட்டம், ராசிபுரம், திருவள்ளூர் அரசு கலைக் கல்லூரிக்கு விடுதிக் கட்டடம் (Hostel Building) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சேலம்—தருமபுரி வட்டம், சேலம்-4 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—9—1972 மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 10,000

(சலான் வடிவிலோ அல்லது தேசிய சேமிப்பு சர்டிபிகேட் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டெபாசிட் அட் கால் ரிசிப்ட்ஸ் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்டுகள் அல்லது மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் அல்லது சென்னை மாநில மின்வாரியப் பத்திரங்கள் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும்).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 25·00.

(கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "P.W. Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கட்டடக் கோட்டம், சேலம்-4 அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.88.

(XII Sales-tax (d) Miscellaneous) என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—12 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சேலம்—தருமபுரி வட்டம், சேலம்-4-ல் ஒப்பந்தப்பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் நாள்—11—9—1972 முதல் 25—9—1972 வரை.

மாநில அரசு உறுதிப் பத்திரங்கள் மற்றும் மாநிலப் மின்வாரியப் பத்திரங்கள் உண்மை மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

டெபாசிட் கால் ரிசிப்டுகள் மற்றும் பிக்ஸட் டெபாசிட் ரிசிப்ட்கள் கட்டுத் தொகையாக ஒப்பந்தப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
சேலம், தருமபுரிவட்டம்,
சேலம்-4.

(த.13)

### திருச்செங்கோடு நகராட்சி, சேலம் மாவட்டம்

கீழ்க்கண்ட பொருட்கள் விநியோகம் செய்ய ரூ. 200 காப்புத் தொகை செலுத்திய மூடிய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 19-9-1972-ம் நாள் மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மற்ற நிபந்தனைகள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(1) மூன்று பெரிய இரும்பு பீரோக்கள்.
(2) 19 எஸ்டைப் காட்ரேஜ் நாற்காலிகள்.
(3) ஒரு ஆர்னமெண்டல் நாற்காலி (மன்றத் தலைவருக்கு).

ப. பத்மநாபன்,
ஆணையர்.
திருச்செங்கோடு.

(த. 64)

### தொழில் நுட்பக் கல்வித் துறை

சென்னை—25

தோல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு 1972-73ஆம் ஆண்டிற்கு, ரா ஹைட்ஸ் மற்றும் ஸ்கின்ஸ்வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11—9—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை—25 அவர்களிடம், இரண்டு தனித் தனிச் சலான்களில் ஒன்றில் ரூபாய் 5 ஒப்பந்தப் பத்திரக் கட்டணமாகத் தமிழ்நாடு அரசின் கணக்கில் " XXII Education—E. Technical Education—a fee and other charge" என்ற தலைப்பிலும் மற்றொன்றில் ரூபாய் 0.15 காசு விற்பனை வரியாக " XII other taxes and duties" தலைப்பிலும் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை எந்த சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஒப்பந்தப் பத்திரங்களின் விலையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.

(த.16)

## ஒப்பந்தப் புள்ளி

### உணவுப் பொருள் வழங்குதுறை

### காலி சாக்குபைகள் விற்பனை

வேலூர் தாலுக்கா அரசினர் கிடங்கிலும், மற்றும் இதர தாலுக்காக்களில் தாலுக்கா உணவு விநியோக அதிகாரிகளிடம் வைக்கப்பட்டுள்ள உபயோகப்படுத்தக்கூடிய நல்ல நிலையில் உள்ள காலி சாக்குகள், ஒட்டுப் போட்ட உபயோகப்படக்கூடிய சாக்குகள், பழுதடைந்த சாக்குகளை வடார்க்காடு மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களிடமிருந்து ஒப்பந்தம் மூலமாக விலைக்கு வாங்குவதற்காக அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளடங்கிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் (சிவில் சப்ளை பிரிவு) பெற்றுக்கொள்ள வேண்டியது.

2. ஒப்பந்தப் படிவங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்தப் படிவத்தின் விலை ரூ. 5-ம் $3\frac{1}{2}$ சதவிகிதம் விற்பனை வரியும் ஆக ரூ. 5·18 கருவூலத்தில் " P.D. Account of the Commissioner of civil supplies Madras " என்ற தலைப்பில் செலுத்தி செலானை இவ்வலுவலகத்தில் கொடுத்து மேற்படி படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடன் கட்டுத் தொகைக்காக ரூ. 2,000-த்துக்கு டிமாண்ட் டிராப்ட் வாங்கி அனுப்ப வேண்டியது.

3. அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 4—9—1972 பிற்பகல் 1 மணி வரை முதுநிலை கணக்கு அலுவலர், அல்லது மாவட்ட விநியோக அதிகாரி அல்லது மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று அதாவது 4–9–1972 மாலை 3 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் ஆஜராகி இருப்பின் அவர்கள் முன்னிலையில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியால் பிரிக்கப்படும்.

4. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் மாநில உணவு விநியோக கமிஷனர் (commissioner of civil supplies Madras.) ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்

கு. சண்முகம்,
மாவட்ட வருவாய் அதிகாரி.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகர்மன்றத்திற்குத் தேவையான 50 புதிய கஃசு டப்பாக்கள் வழங்க நகர்மன்ற ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1972-ம் தேதி மாலை 4 மணி வரை டிபாசிட் ரூ. 150 உடன் வரவழைக்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1972 மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். கஃசு டப்பாக்கள் அளவு விவரம் முதலியவைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 47)

## ஏல அறிவிப்பு

### மாயூரம் நகராட்சி

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதி காலை 10 மணிக்கும் அதன் பிறகு ஒத்திவைக்கப்படும் தேதிகளிலும் மாயூரம் நகராட்சி அலுவலகத்தில் துலாஉற்சவ காலத்தில் (12–10–1972 முதல் 20–11–1972 முடிய) சுங்கச் சாவடிகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமையை ஆணையர் அவர்களால் பொது ஏலத்தில் விடப்படும்.

ஏல நிபந்தனைகளையும் இதர விவரங்களையும் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 51)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று பிற்பகல் 3–30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—கீழ்க்கரை குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—நான்கு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த்தாங்கி ஒன்றினைக் கட்டுதல்.

ஒப்பந்த வகை :—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை :—ரூ. 2,140 (ரூபாய் இரண்டாயிரத்து நூற்று நாற்பது மட்டும்.)

இத்தொகை, ஏதாவது ஒரு தேசிய வங்கியின் பண உத்தரவுச் சீட்டு அல்லது உத்தரவாதம் வடிவில் நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருப்புக்கோட்டை செயற் கோட்டம்) அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு :—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை :—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட) ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அருப்புக்கோட்டை செயற் கோட்டம்) அவர்களிடமிருந்து 18–8–1 நகராட்சிப் பயணிகள் விடுதி சாலை, அருப்புக்கோட்டை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி சனிக்கிழமை மாலை 5–00 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
செயல் வட்டம்,
குடிநீர் வடிகால்
வாரியம், மதுரை-2.

(த. 43)

## ஏல விற்பனை

### தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊட்ட உணவுத் திட்ட தோட்டங்களிலிருந்து எடுத்து வரப்பட்ட 8 (எட்டு) எண்ணை நீர் இறைவை இயந்திரங்களை ஊராட்சி ஒன்றிய ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 20–9–1972-ம் நாள் புதன்கிழமை மாலை 3–00 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் ஏலம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஏல நிபந்தனைகள்.

(1) ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ஒவ்வொரு இயந்திரத்திற்கும் பிணைப்புத் தொகை முன் பணமாக ரூ. 500-ஐ செலுத்த வேண்டும்.

(2) ஏலம் முடிந்தவுடன் ஏலம் கோரிய முழுத் தொகையையும் செலுத்திவிடவேண்டும்.

(3) ஷி ஏலம் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அனுமதிபெற்ற பின்பு தான் ஊர்ஜிதம் செய்யப்படும்.

(4) ஏலத்தை நிறுத்தவோ மறு ஏலம் போடவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

(5) ஷி ஆயில் இன்ஜின்களைப் பார்க்க விரும்புபவர்கள் தே. கல்லுப்பட்டி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் பார்வையிடலாம்.

தா. பாலசுப்ரமணியம், பி. ஏ.,
ஆணையர்.

(த. 66)

## ஒப்பந்தப் புள்ளி

### வேலூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி மாலை 4 மணி வரை 60 வட்டவடிவமுள்ள சிமெண்ட் கான்கிரீட் குப்பைத் தொட்டிகள் சப்ளை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை ரூ. 150 நகராட்சி கருவூலத்தில் கட்டி செலானை ஒப்பந்தத்துடன் அனுப்பவேண்டும். செக்கும், டிராப்டும் கூடஅனுப்பலாம்.

ஒப்பந்த நிபந்தனைகள், வரை படம், அளவுகள் முதலியன ரூ. 2 கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஜோசப்,
ஆணையர்.

(த. 65)

## வேலை வாய்ப்பு

### உடுமலைப்பேட்டை நகராட்சி

கீழ்க்கண்ட பதவிக்காக 15–9–1972 மாலை 5–00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொறியர் பிரிவில் டிராப்ட்ஸ்மேன் கிரேடு—2.

சம்பளம் : 210—5—245—10—322.

வயது : 25 வயதுக்குக் குறைவாக.

தகுதி விவரங்கள் : தமிழ்நாடு நகராட்சி மாநில சர்வீஸ் சம்பந்தமாக அரசு உத்திரவு 20- உள்ளாட்சித்துறை 5–1–1972 நாள் உத்திரவில் கண்டுள்ளபடி (Class IV Category 5) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (Schedule Caste) முதல் சலுகை தரப்படும்.

எஸ். இரத்தினகிரி,
ஆணையர்.

(த. 62)

## தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டி, தஞ்சாவூர்

தஞ்சாவூர் டவுன் மேலவீதி நெ. 173-ல் உள்ள தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டி அலுவலகத்தை ரூ. 25,300 மதிப்பீட்டில் பழுது பார்க்கவும், மறு உருவமைப்பதற்கான வேலைகளுக்கு அடியிற் கையொப்பமிட்டுள்ளவரால் 8—9—1972 மதியம் 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்த நமூனு, அட்டவணை விரும்புவோர், ஒப்பந்தம் வந்து சேர வேண்டிய கடைசி நாளைத்தவிர ஏனைய வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ஒவ்வொரு வேலைக்கான விவரத்திற்கும் ரூ. 5 (திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது) நேரிலோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் 9—9—1972 மாலை 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

குறிப்பிட்ட ஒப்பந்தத்தையோ, அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ, காரணம் எதுமின்றி ஏற்கவோ, மறுக்கவோ, அடியிற் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

கே. வைத்தியநாதன். பி.ஏ.,
செயலாளர், தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டி, தஞ்சாவூர்.

(த.58)

## சங்கரன்கோவில் நகராட்சி

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைக்களுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13—9—1972-ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையர்அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேல் உறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் சங்கரன்கோவில் நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பிவைக்க வேண்டும். வேலைகளுக்கு எதிராக குறிப்பிட்ட தொகையை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டுத் தொகையாக கட்டவேண்டும். பாக்கியுள்ள கட்டுத் தொகையை ஒப்பந்தம் ஒப்புக் கொண்டவுடன் கட்டவேண்டும். நிபந்தனைகளும் ஒப்பந்தப் புள்ளிகளும், ஷெடியூல்களும், நகராட்சி அலுவலகத்தில் ரூ. 10·35 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்கள் அலுவலக வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரங்கள். | | மதிப்பீடு. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|
| 1 புதிதாக தினசரி சந்தை கட்டுதல் | .. | 1,97,000 | 3,700 |
| 2 புதிதாக பேருந்து நிலையம் கட்டுதல் | .. | 1,90,000 | 4,500 |

வெ. ஜானகிராமன்,
ஆணையர்.

(த.68)

## சிதம்பரம் நகராட்சி

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், நகராட்சி ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் 15—9—1972 அன்று மாலை 4-00 மணி வரை, கழிவு நீர் கடத்தும் "ஸ்டோன் வேர் பைப்புகள்" ( Stone ware pipes) மற்றும் "ஆர்.சி.சி. ஸ்பன் பைப்புகள்" (R.C.C. spun pipes) வழங்கும் வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன. கட்டுத் தொகை முறையே ரூ. 170; ரூ. 135. முழு விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

எம். கோவிந்தன்குட்டி நாயர்,
ஆணையர்.

(த.45)

## மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிப் பராமரிப்பிலுள்ள இரண்டு சாலைகளுக்கு தார் சாலைகள் போட ரூ. 27,000 மதிப்பீடுகளுக்கான வேலைக்கு 13-9-1972 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வி. டி. உமாபதி, பி.எஸ்சி.,
ஆணையர்.

(த.50)

## இராஜபாளையம் நகராட்சி

சுமார் ரூ. 2,69,550 மதிப்பீட்டில் இந்நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட தெருக்களில் அணைசுவர் ரோடு மற்றும் இதர வேலைகள் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாளது செப்டம்பர் மாதம் 12–ம் தேதி மாலை 4–00 மணிக்கு அடியிற்கையெழுத்திட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக கொடுக்க வேண்டும். அன்று மாலை 4–15 மணிக்கு அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப் படிவம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2 விற்பனை வரி 3½ சதமும் கட்டி நகர்மன்றப் பொறியாளரிடம் செப்டம்பர் மாதம் 8–ம் தேதிக்குள் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த கட்டுத் தொகை மற்றும் விவரங்கள் மன்ற பொறியாளரிடம், அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

வி. பிருதிவி,
நகராட்சி சுகாதார அதிகாரி அன்டு ஆணையர்
பொறுப்பு, இராஜபாளையம்.

(த.48)

## வடஆர்க்காடு மாவட்டக் கமிட்டி, வேலூர்

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்த புள்ளிகள் 11—9—1972 மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்த புள்ளிகள் கீழ் காணும் வேலைகளுக்கு எதிரே தரப்பட்ட தொகையை பிணை வைப்புத்தொகையாக கட்டி இருக்க வேண்டும். ஷெட்யூல் மற்றும் விவரங்கள் கீழ்க்கண்ட அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளவும்.

| வரிசை எண்ணும், விவரமும். | பிணைவைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1 சேத்துப்பட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிணறு ஒன்று வெட்ட. | 200 |
| 2 திருவண்ணுமலை, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தற்போதுள்ள மதில் சுவரை மேலும் எழுப்புதல். | 133 |

த. ரா. தம்புரெட்டி, பி.எஸ்சி.,
செயலாளர், வட ஆர்க்காடு மார்க்கட் கமிட்டி,
வேலூர்.

(த.49)

## தூத்துக்குடி நகராட்சி
## உள்ளாட்சி நிருவாகத் துறை

வளநாடு, நீர்வழங்கு தலைமை நிலயத்தில் (பாளையம் கோட்டையிலிருந்து 5 மைல்) பூஸ்டர் டிரான்ஸ்பார்மர்கள் பொருத்துவதற்கு, ஓசிபி சேஞ் ஓவர் சுவிட்ச், கேபிள் மற்றும் ஒரு புதிய சுவிட்ச் போர்டு மற்றவைகள் வழங்க, முதல்தர ( A. Class ) மின்சார ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15–9–1792 மாலை 4–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி ஆணையரின் நேர்முக உதவியாளர், தூத்துக்குடி நகராட்சி அவர்களுக்கு "பூஸ்டர் டிரான்ஸ்பார்மர் மற்றவைகள் பொருத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளிகளுடனும் கட்டுத்தொகை ரூ. 100-க்கான டிமாண்டு டிராப்ட் அல்லது நகராட்சிக் கருவூலச் சலான் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அதே நாள் மாலை 4–30 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரம் விவர வரைப்படத்துடன், நகராட்சிப் பொறியாளர் அவர்களிடம் ரூ. 5 மற்றும் விற்பனை வரியை, மணியாடர் அல்லது நகராட்சிக் கருவூலச் சலான் மூலம் செலுத்தி தபால் மூலம் பெறலாம்.

சி. சங்கரலிங்கம், பி.ஏ.,
ஆணையர், தூத்துக்குடி நகராட்சி.

(த.6)

## பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 29,600-ல் நான்கு வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால் 13-9-1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன தகுந்த முன் வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் எவ்வித முகாந்திரமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் நகராட்சி பொறியியல் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

கு. பொன்னுசாமி, பி. ஏ.,
ஆணையர்.

(த.67)

## மர ஏல விற்பனை

### வனத்துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் மத்திய மரக் கிடங்கு கார்குடி பாதை ஓரமுள்ள மரக் கிடங்கு, தொரப்பள்ளி, மத்திய மரக் கிடங்கு, சேரம்பாடி ஆகிய மரக்கிடங்குகளில் நீலகிரி வடக்குக் கோட்ட மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ ஏலத்தில் விடப்படும். ஏலம் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம் :—மத்திய மரக் கிடங்கு, கார்குடி, பாதை ஓரமுள்ள மரக் கிடங்கு, தொரப்பள்ளி.

நாள் :—12—9—1972.

மரங்களின் அளவு.

| | | |
|---|---|---|
| 1. | தேக்கு | 400 கன மீட்டர். |
| 2. | மத்தி | 250 கன மீட்டர். |
| 3. | தடசு | 10 ,, |
| 4. | ஹொன்னே | 25 ,, |
| 5. | நந்தி | 20 ,, |
| 6. | வட்ட ஆரங்கள் | 75 செட். |
| 7. | விறகு அட்டிகள் | 420 அட்டிகள். |

இடம் :—மத்திய மரக் கிடங்கு, சேரம்பாடி,

நாள் :—27—9—1972.

மரங்களின் அளவு.

| | | |
|---|---|---|
| 1. | அயினி | 100 கன மீட்டர். |
| 2. | ஈட்டி | 57 கன மீட்டர். |
| 3. | வெண்தேக்கு | 52 ,, |
| 4. | ரெட்சிடார் | 35 ,, |
| 5. | வேங்கை | 26 ,, |
| 6. | பில்லுமருது | 15 ,, |
| 7. | நாவல் | 25 ,, |
| 8. | விறகு அட்டிகள் | 40 |

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்குக் கோட்டம் மாவட்ட வன அலுவலருக்கோ அல்லது வனச் சரக அலுவலர், முதுமலை சரகம், கார்குடி அவர்களுக்கோ அல்லது வனச் சரக அலுவலர், சேரம்பாடி சரகம், சேரம்பாடி அவர்களுக்கோ எழுதிப் பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த. 35)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை), திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 14—9—1972 அன்று பிற்பகல் 3-30 மணிக்கு (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார்கள். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரம் விலை ஒன்றுக்கு. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| | | ரூபாய். | ரூ. | காசு. |
| 1 | மதுரை தொண்டி சாலை மைல் 45/6 (கி.மீ 73/2) உள்ள பாலத்தை திரும்ப கட்டுதல் .. .. | 5,620 | 20 | 70 |
| 2 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல் கி.மீ. 0.0 முதல் 2.0 வரை. | 2,340 | 15 | 53 |
| 3 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலைஅமைத்தல்—கி.மீ 2.0 முதல் 4.0 வரை. | 2,440 | 15 | 53 |
| 4 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 4.0 முதல் 6.0 வரை. | 2,455 | 15 | 53 |
| 5 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 6.0 முதல் 8.0 வரை. | 2,575 | 15 | 53 |
| 6 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 8.0 முதல் 10.0 வரை. | 2,500 | 15 | 53 |
| 7 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 10.0 முதல் 12.0 வரை. | 2,465 | 15 | 53 |
| 8 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 12.0 முதல் 14.0 வரை. | 2,405 | 15 | 53 |
| 9 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 14.0 முதல் 16.0 வரை. | 2,460 | 15 | 53 |
| 10 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 16.0 முதல் 18.0 வரை. | 2,425 | 15 | 53 |
| 11 | பரமகுடி முதுகுளத்தூர் சாலையில் இருக்கும் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டி கண்மாய் ரயில்வே நிலையத்திற்கு சாலை அமைத்தல்—கி.மீ. 18.0 முதல் 20.6 வரை. | 3,045 | 15 | 53 |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட மேலே குறிப்பிட்டபடி பணம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன்மூலம் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) சிவகங்கை விலாசத்திலிருந்து 1—9—1972 முதல் 13—9—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றை பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்டு டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும் பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தி. ப. கந்தசாமி,
கண்காணிப்புப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை),
திருநெல்வேலி-2.

(த. 40)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ அவரது அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 10-ம், மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் சேர்த்து நகராட்சி கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டுகளுடன் நகராட்சி மராமத்து பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி முடிய பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு மராமத்து பொறியரிடம் அலுவலக நேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண். | கட்டின் நடப்பு எண். | வேலை விவரம். | மதிப்பீடு தொகை. | முன் வைப்புத் தொகை. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூ. | ரூ. | |
| 1 | இ1/23452/70 | காந்தி சந்தையில் மாடு வதை செய்யும் கட்டடம் கட்டுதல் .. .. | 20,387 | 510 | 3 மாதம். |
| 2 | இ1/19133/69 | தோட்டிகள் காலனி குடியிருப்பில் உள்ள வீடுகளுக்குக் குளியலறைக் கதவுகள் பொருத்துதல் மற்றும் ஜன்னல்களுக்குச் சன்சேடு பொருத்துதல். | 9,172 | 230 | 1 மாதம். |
| 3 | இ1/9029/72 | காந்தி சந்தையில் உள்ள கடைகளுக்கு மராமத்து செய்தல். .. .. | 16,044 | 402 | 2 மாதம். |
| 4 | இ1/6541/72 | மரப்பேட்டை பள்ளம் இட்டேரிக்கு ஊத்துக்காடு ரோடு சந்திப்பிலிருந்து சுண்ணாம்புக்காளவாய் ரோடு வரை சாக்கடைத் தடுப்புச் சுவர் கட்டுதல். | 15,112 | 378 | ,, |
| 5 | இ1/9794/72 | தங்கமுத்து கவுண்டர் லேயவுட்டில் ரோடுகளுக்குத் தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் சாக்கடை தளம் போடுதல். | 14,650 | 367 | ,, |
| 6 | இ1/9808/72 | தரைமட்ட தண்ணீர் தேக்க நிலையத்தில் ஒரு தளவாட அறை கட்டுதல் | 11,815 | 296 | 3மாதம் |
| 7 | இ1/7527/72 | தெப்பக்குளம் பாத்ரூம்களுக்கு மராமத்து செய்தல் .. .. | 7,130 | 179 | 1 மாதம். |
| 8 | இ1/6206/71 | சுப்ரமணிய கவுண்டர் வீதி சாக்கடைக்கு (ஜூபிலி வீதியிலிருந்து தெற்கே ஓடை வரை) சிமெண்ட் மூடு கல் போடுதல். | 6,729 | 169 | ,, |

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

(த. 37)

### உடுமலை நகராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 13–9–1972-ஆம் தேதி புதன்கிழமை மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகளும், நமூனுக்களும் 12–9–72-ம் தேதி மாலை 4 மணி வரை, அந்தந்த வேலைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை நகராட்சி அலுவலகத்தில் நேரில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் 13–9–1972-ம் தேதி புதன் கிழமை மாலை 4-30 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் நகராட்சி ஆணையர் அவர்களால் திறக்கப்படும். நடப்பிலுள்ள எல்லா ஒப்பந்த நிபந்தனைகளும் இதற்கும் பொருந்தும்.

| | வேலையின் பெயர். | மதிப்பீடு. | செலுத்தவேண்டிய பொறுப்புத்தொகை. | ஒப்பந்த நமூனுவின் விலை. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | நகரின் மத்தியிலுள்ள குட்டையின் கரையில் கடைகள் கட்டுதல் .. .. | 2·70 லட்சம். | 4,500 | 25·88 |
| 2 | நகரசுத்தித் தொழிலாளர்களுக்கான 10 வீடுகள் கொண்ட முதல் யூனிட் | 21,000 | 525 | 10·35 |
| 3 | நகரசுத்தித் தொழிலாளர்களுக்கான 9 வீடுகள் கொண்ட இரண்டாவது யூனிட் | 18,900 | 475 | 10·35 |
| 4 | பஷீர் அகமது லேஅவுட் ரோடிற்கு மறுமுறை மெட்டல் போடுதல் .. .. | 2,700 | 70 | 1·04 |
| 5 | நகராட்சி ஊழியர்களுக்கு 1972–73-ம் வருடத்திற்கான கைத்தறி சேலைகள் சப்ளை செய்தல். | 4,000 | 100 | இல்லை. |

ஆணையர்.

(த. 63)

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2

வரும் இரண்டு ஆண்டுகளுக்கு, பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் மந்தவெளி பேருந்து நிலையத்திலுள்ள "சிற்றுண்டி சாலை" ஒன்று குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட கவர்கள் 13–9–1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. முத்திரையிட்ட கவர்கள் அதே நாள் 13–9–1972 மாலை 3-15 மணிக்கு செயலாளரால் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள் சென்னை பல்லவா போக்குவரத்துக் கழகம், செயலாளர் அவர்களிடம் ரூ. 1.04 கட்டி, ஆபீஸ் நேரங்களில்பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தை கொண்டும் இந்தப் பணம்திருப்பி தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 15)

---

## வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்

கீழ்க்கண்ட வேலைக்காக, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரை யிட்டதனித்தனியான ஒப்பந்தப்புள்ளிகள், கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 14–9–1972 மாலை 3-00 மணிக்கு மேற்படாதவாறு வந்துசேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதேநாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. வியாசர்பாடி அருகில் வட சென்னை அருகமைந்த (Nigh bourhood) திட்டத்தில் பிரிவுச் சாலைகளில் அகலத்தை சமப் படுத்துவதற்கு மெட்டல் வழங்குதலும் அமைத்தலும் (M E 7/3848/72) | 64,660 | 975 | 10+விற் பனைவரி. |
| 2. வியாசர்பாடி அருகில், வட சென்னை அருகமைந்த (Nigh bourhood) திட்ட ஏரியா 1-க்கு சீவேஸ் பம்பிங் ஸ்டேசன் அமைத்தல் (M E 5/1542/71). | 1,07,400 | 1,615 | 15+ விற் பனைவரி |

ஒப்பந்தப்பத்திர வரை படங்கள் மற்றும் இதர விவரங்கள், கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 16–8–1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை பணமாக செலுத்தி (திருப்பித்தரப்படமாட்டாது) சலானில் குறிப்பிட்டபடி பெற லாம். கீழ்க் கையொப்பமிட்டவருக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் காட்டாமல் ஏற்றுக் கொள்ள அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

எல். ஆர். சாஸ்திரி,
நிருவாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 24)

---

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக் காக, மின்பொறியாளர், பொதுப்பணித் துறை, திருச்சிராப்பள்ளி- அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–9–1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்தப் படிவத்தின் விலை. |
|---|---|
| | ரூ. |
| 1. கோயம்புத்தூர் மாவட்டம், கோபிசெட்டிபாளையம், அரசு மருத்துவமனையில், இறந்தவர்களை வைக்கும் பிரேதகிடங்கு (Mortuary Block) (Cold storage Plant) வழங்குதலும் நிறுவுதலும். | 10.37 |
| 2. 20 எச். பி. மோட்டார் மற்றும் மல்டிஸ்டேஜ் பம்புடன் பம்ப்செட் வழங்குதல். | 5.18 |

மேற்கண்ட ஒவ்வொரு வகைக்கும் ஒப்பந்தப் படிவம், 14–9–1972 வரை இந்த அலுவலகத்தில் விலையைச் சலான் வடிவில் "P. W. III O. R. Electrical Engineer, P. W. D. Tiruchirapalli-1" என்ற தலைப்பில் அல்லது "The Electrical Engineer, P. W. D. Tiruchirapalli-1" என்ற தலைப்பில் செலுத்தப்பட்ட எந்த செட்யூல்டு வங்கியினுடைய டிமாண்டு டிராப்ட்டோ கொடுத்து பெறலாம்.

வி. சி. எ. ஐசக்,
மின் பொறியாளர்,
பொதுப் பணித் துறை,

மின் பொறியாளர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி-1.

(த. 18)

---

## வேளாண்மைத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட டிராக் டர்கள், புள்டோசர்கள், பிளக்குகள் (Ploughs) ஸ்பேர்ஸ் "எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலையில்" வாங்குவதற்கு உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) அலுவலகம், கடலூரில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 28–9–1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் மற்ற விவரங்கள் மற்றும் விற்பனை நிபந்தனைகளுக்கும் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), ஐபி. பீச்ரோடு, கடலூர் அவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்,

| வரிசை எண்ணும் பொருளின் பெயரும். | | இடம். | யூனிட்களின் பொறுப்பு அலுவலர். |
|---|---|---|---|
| 1. டிராக்டர்கள்— | | | |
| (i) W 6 (MDF.724 MDK 2156 & MDC. 4436) | 3 | கடலூர் .. | உதவி வேளாண்மைப் பொறியாளர். (ஆய்வு). |
| (ii) John Deere-MSZ 1101 & MSZ 164) | 2 | ,, | ,, |
| (iii) David Brown: MDO- 1656 & MSZ-5156 | 2 | ,, | ,, |
| 2. புள்டோசர்கள்— TD14 (MDF 988 & MDX 2113) | 2 | ,, | ,, |
| 3. Ploughs | 8 | ,, | ,, |
| 4. Spare parts | | ,, | ,, |

ஒப்பந்தப்படிவம் விற்பதற்கான கடைசி நாள் 23–9–1972 ஒப்பந்தப் படிவங்கள் வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), கடலூர் அவர்களிடம் ரூ. 3 " XXV. Agriculture–Agricultural Engineering receipts–Miscellaneous " என்ற தலைப்பிலும், விற்பனை வரி 0.11 காசு "XII, (XII) Sales Tax receipts–under state sales Tax Act–general sales tax" என்ற தலைப்பிலும் கருவூலம், ஸ்டேட் பாங்கு அல்லது இந்த அலுவலகத்தில் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரங்கள், உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), கடலூர் அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்றவர்கள் முன்னிலையில் திறக்கப் படும்.

தபால் மூலம் ஒப்பந்தப்பத்திரங்கள் அனுப்பப்படும் போது அவைகள் தவறிவிட்டால் இந்த அலுவலகம் பொறுப்பேற்காது. 28–9–1972 ஆம் தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் சலான்கள் இணைக்கபடாத ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், கடலூர் உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய குறிப்பிட்டப் படிவத்திலேயே இருக்க வேண்டும். இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

(த. 28)

---

## உதகமண்டலம் நகராட்சி

எல். 1210/டி/42-166 மாடல் கொண்ட ஒரு புதிய டாட்டா டீசல் வண்டிக்கு பாடி கட்டுவதற்கு ஆணையர், உதகமண்டலம் நகராட்சி அவர்களால் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி மாலை 3-30 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒப்பந்தப்படிவம் நகராட்சி ஆணையர் அவர்களிடம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10.30 பணமாகச் செலுத்தி பெறலாம்.

ஆணையர் (பொறுப்பு),
உதகமண்டலம் நகராட்சி.

(த. 36)

## மறு ஒப்பந்தப் புள்ளி

தருமபுரி நகராட்சி கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகராட்சி ஆணையர் அவர்களால் 13-9-1972-ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை மேற்படி தேதியில் மாலை 4-15 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் திறக்கப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

| வரிசை எண்ணும், வேலைகளின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | காப்பீட்டுத் தொகை. | வேலை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1. நகராட்சி ஹரிஹரநாத சாமி கோவில் தெருவிற்குத் தார் தளம் போடுதல். | 24,000 | 1,220 | மூன்று மாதங்கள். |
| 2. நகராட்சி செங்கொடிபுரம் ரோட்டிற்குத் தார் தளம் போடுதல். | 29,000 | 1,450 | ஷை |

அ. இராமசாமி,
ஆணையர் பொறுப்பு.

(த.5)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3

மருந்து வகைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை சம்பந்தப்பட்ட பொருட்கள் ( Drugs, Medicine, Surgical instruments and Appliances, etc. ) ஆகியவற்றை அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3-க்கு 1—10—1972 முதல் 31—3—1973 முடிய சப்ளை செய்ய, குறிப்பிட்ட ஒப்பந்தப் பாரத்தில், நகலுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 14—9—1972 பிற்பகல் 2-00 மணி வரையிலும், பெயர் பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவங்களும், நிபந்தனைகளும் கீழ்க்கண்ட இரண்டு குறிப்பிட்ட தலைப்புகளில் ரிசர்வ் பாங்கில் தொகையைக் கட்டியதற்கான தனித்தனி இரண்டு சலான்களை விண்ணப்பத்துடன் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

| தொகை. | தலைப்பு. |
|---|---|
| (1) ரூ. 2·00 .. .. | XXIII Medical J. Miscellaneous |
| (2) ரூ. 0·07 .. .. | XII Sales Tax |

மேற்குறிப்பிட்ட தொகைகள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரமாட்டாது. 14—9—1972 பிற்பகல் 2-00 மணியளவில் மருத்துவ கண்காணிப்பாளர் (அல்லது) அவரால் நியமிக்கப்பட்டவரால் அது வரை வந்திருக்கும் ஒப்பந்தங்கள், அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

முடிவுத் தேதி, நேரத்திற்குப் பின்னர்வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது.-

கண்காணிப்பாளர்,
அரசினர் பொது மருத்துவமனை,
சென்னை-3.

(த. 78)

## பயிற்சி

### தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் இணையகம், அக்ரோ இல்லம், தொழிற்பேட்டை, கிண்டி சென்னை-32

தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்ற வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு ஒரு வாய்ப்பு

பொறி இயல், விவசாயப் பொறியியல், விவசாயம் முதலிய கல்வித் துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் தொழில் டிப்ளோமா கல்வி பயின்றவர்களுக்கும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் ஒரு பயிற்சித் திட்டம் வகுத்துள்ளது.

தற்சமயம் வேலையில்லாமல் இருக்கும் மேற்கண்ட பட்டதாரிகளுக்கும் டிப்ளோமா வாங்கியவர்களுக்கும் மட்டுமே இந்தத் திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் டிராக்டர்கள், மிஷின் கலப்பைகள் போன்ற விவசாய இயந்திர சாதனங்களை உபயோகப்படுத்தும் முறைகளும் அவற்றைச் செவ்வனே பராமரிக்கும் வழிகளும் மத்திய பிரதேசம் புத்னி, அல்லது ஹரியானா மாநிலம் ஹிஸ்ஸாரில் ஓர் நான்கு மாதப் பயிற்சியின் மூலம் சொல்லிக்கொடுக்கப்படும். பயிற்சியில் திறம்பட வெற்றி பெற்றவர்கள் தமிழ்நாட்டின் கிராமப் புறங்களில், விவசாயிகளுக்குப் பயன்தரும் விவசாயப் பணி நிலையங்களை (AGRO SERVICE CENTRES) அமைத்து விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர்கள், பவர் டில்லர்கள், போன்றவற்றை வாடகைக்கு வழங்கி, பிற பணிகளையும் செய்து தமக்கும் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறும் நிலையை அடைவார்கள். மேற்கண்ட பயிற்சியை நல்ல முறையில் பெற்று பயன்காண உண்மையான நாட்டம் கொண்டோர் விண்ணப்பதாளருக்குத் தேவையான தபாலும், தம் முகவரியும் உள்ள கடித உறையுடன் 6—9—1972-க்குள் எழுதவும்.

நிருவாக இயக்குநர்.

(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### மின் வாரியம், மதுரை மின்திட்டம்

கீழ்க்கண்ட வேலைகளுக்கு குத்தகை (டெண்டர்) ஒப்புக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்கான முத்திரையிடப்பட்ட குத்தகைகள் (சீல்ட் டெண்டர்கள்) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்திட்டம், கோ. புதூர், மதுரை-7 என்பவரால் 14—9—1972 அன்று பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

குத்தகை எண் 1 :—

மதுரை மின்திட்டத்திலுள்ள ஒரு பண்டகசாலை (ஸ்டோர்ஸ்)யிலிருந்து மற்றொரு பண்டகசாலைக்கும், மதுரை மின்திட்டத்திலுள்ள பண்டகசாலையிலிருந்து தமிழ்நாடு மின் வாரியத்திற்குட்பட்ட மற்ற திட்டத்திலுள்ள பண்டகசாலைகளுக்கும், மின் வாரியத்திற்குட்பட்ட மற்ற திட்டங்களில் உள்ள பண்டகசாலையிலிருந்து மதுரை மின்திட்டத்திலுள்ள பண்டகசாலைகளுக்கு மின் வாரிய பொருட்களை சாலைகளின் வழியாக ஏற்றிச் செல்லுதல்.

குத்தகை எண் 2 :—

மின்சார வேலைகளுக்காக 24 அடி, 27 அடி, 30 அடி, சிமெண்டு கம்பங்களை( R.C.C and P.S.C. ) மதுரை மின் திட்டத்தில் சிமிண்டு கம்பங்கள் உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து மதுரை மின் திட்டத்தின் மத்திய கிளை பண்டகசாலைகளுக்கும், வேலை நடக்கும் இடங்களுக்கும் சாலை வழியாக ஏற்றிச் செல்லுதல்.

விவரமான குத்தகைப் பாரங்கள், மற்றும் குத்தகை தஸ்தாவேஜுகள் இவைகளை ஒவ்வொரு குத்தகை எண்ணுக்கும் தனித்தனியாக மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின் திட்டம், மதுரை-7 அவர்கள் அலுவலகத்தில் ஒவ்வொரு செட்டுக்கும் கிரயம் ரூ. 5 செலுத்தியதற்கான ரசீதை, மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின் திட்டம், மதுரை-7 அவர்களிடம் சமர்ப்பித்து தெளிவான விலாசத்துடன் கூடிய விண்ணப்பத்தின் பேரில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

கட்டுத் தொகையுடன் அனுப்பப்படாத குத்தகை பாரங்களும் குறிப்பிட்ட தேதி, நேரம், இவற்றிற்கு பின்வரும் குத்தகைப் பாரங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

குத்தகை தஸ்தாவேஜுகள், விண்ணப்பதாருக்கு சாதாரண அஞ்சல் அனுப்பப்படும். ஒப்பந்தப் பாரங்கள் அஞ்சல் பிரயாணத்தின்போது, தவறினால் மின் வாரியம் பொறுப்பு ஏற்காது. குத்தகைப் பாரங்கள் மாற்றிக்கொள்ளப்படாதது.

ஆஜராயிருக்கும் குத்தகைக்காரர்கள் முன்னிலையில் 14—9—1972 அன்று பிற்பகல் 4 மணிக்கு குத்தகைப் பாரங்கள் திறக்கப்படும்

குத்தகை தஸ்தாவேஜுகள் 5—9—1972 தேதியிலிருந்து 12—9—1972 வரை அலுவலக நேரத்திற்குள் விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை மின் திட்டம், கோ. புதூர், மதுரை-2

(த. 72)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—திருவாரூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்ப அறிவிப்புகள் தமிழ் நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 14-9-1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. ஒப்பந்த வகை .. .. .. | மொத்தத் தொகை. |
| 2. பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). | ரூ. 7,250. |
| 3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலத்தில் "பொ.ப. செலுத்துத் தொகை மற்றைய செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்). | ரூ. 30.00. |
| 4. விற்பனை வரி. [அரசினர் கருவூலத்தில் "விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனைச் வரிச் சட்டத்தின் கீழ் பொது, விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.] | ரூ. 1.05. |
| 5. கால அளவு .. .. .. .. | 12 மாதங்கள். |
| 6. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள். | 25-8-1972. |

அ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித்துறை,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 8)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசு அருங்காட்சியகத்தில் உள்ள சிற்றுண்டி விடுதி

1. அருங்காட்சியகச் சுற்றுகத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலையை 1-11-1972 முதல் மூன்றாண்டுகளுக்குக் குத்தகை மூலம் நடத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளி 15-9-1972 மாலை 4 மணி வரை கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியால் அரசு அருங்காட்சியக அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சீல் செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கை "இயக்குநர், அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை-8" என்ற விலாசமிட்டு உறையின் மேல் "அருங்காட்சியகச் சிற்றுண்டிச் சாலை வாடகைதாரருக்கான ஒப்பந்தப் புள்ளி" என்று எழுதப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிகள் அருங்காட்சியக இயக்குநரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளியை ஏற்றுக் கொள்ளவோ, எந்தக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவோ இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

4. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் ரூ. 25-க்கான கருவூலச் செலான் (ஒரிஜினல்) வைத்து அனுப்பவேண்டும். இந்த 25 ரூபாய் முன் பணம் கருவூலத்திலோ அல்லது இந்தியச் சேம வங்கியிலோ கீழ்க் கண்ட கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

T. Deposits and Advances-Deposits not bearing interest C. Other deposit Accounts—Departmental and Judicial deposits—Revenue Deposits.

இந்த முன்பணம் ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப் புள்ளிதாரருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் வாடகையைப் போல் ஆறு மாத வாடகையை முன்பணமாகக் கட்டிய பின்னரே ஏற்கெனவே செலுத்திய முன்பணம் ரூ. 25 திருப்பித் தரப்படும். முன்பணமாக செலுத்திய ஆறுமாத வாடகைப் பணம் குத்தகைக் காலம் முடியும் போது திருப்பித் தரப்படும். வருடத்திற்கு ரூ. 1,200-க்குக் குறைவான வாடகை ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மற்ற நிபந்தனைகள் அடங்கிய முழு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை, இயக்குநர், அரசு அருங்காட்சியகம், சென்னை-8 என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துக் பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை-8.

(த. 32)

## ஏல விளம்பரம்

### கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான காந்தி பார்க் ரோட்டிலுள்ள 5-ம் எண் கடையில் 31-3-1974-ம் தேதி வரை வியாபாரம் செய்து கொள்ளும் உரிமையை 14-9-1972-ம் தேதி காலை 10 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கட்ட வேண்டிய டிபாசிட் தொகை ரூ. 100 மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். சால்வன்சி சான்றிதழ்கள் கொண்டு வராதவர்கள் டிபாசிட் தொகையை இரட்டிப்பாகச் செலுத்தி ஏலம் கோர வேண்டும்.

ஆணையர்.

(த. 60)

## விளம்பரம்

### திண்டுக்கல் நகராட்சி

திருத்தப்பட்ட 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 78 (3) பிரிவின்படி பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால் திண்டுக்கல் நகர்மன்றம் தனது 26—7—1972ம் தேதி 662-ம் எண் தீர்மானத்தின் நகராட்சி எல்லைக்குள் உட்பட்ட சொத்துக்களுக்குத் தற்போதைய நடைமுறையில் இருந்து வரும் சொத்து வரிக்குச் சம்பந்தப்பட்ட சாக்கடை நிதியில் ஏற்படும் பற்றுக்குறையைச் சரி செய்ய தற்பொழுதுள்ள நீரளிப்பு சாக்கடை வரி விகிதத்தை கீழ்க்கண்டபடி திருத்தி 1—10—1972 தேதி முதல் அமல் நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்தேச வரி விதிப்பு திருத்தத்திற்கு ஏதாவது ஆட்சேபணை அல்லது ஆலோசனைகள் இருந்தால் எழுத்து மூலமாக நகராட்சி ஆணையர் அவர்களுக்கு இவ்வறிக்கை பிரசுரமாகிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் தெரிவித்துக் கொண்டால் மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

| அரையாண்டிற்குத் தற்பொழுதுள்ள நீரளிப்பு சாக்கடை வரி விகிதம். | | அரையாண்டிற்குத் திருத்தப்படவிருக்கும் நீரளிப்பு சாக்கடை வரி விகிதம். | |
|---|---|---|---|
| நீரளிப்பு நிதி. | சாக்கடை நிதி. | நீரளிப்பு நிதி. | சாக்கடை நிதி. |
| 6·25 சதவீதம் | 1 சதவீதம் | 5.25 சதவீதம் | 2 சதவீதம் |

பி. வீரகேசவன்,
ஆணையர்.

(த.z)

## ஏல விளம்பரம்

### வனத்துறை

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம், 9-ம் தேதிகளில் காலை 10-00 மணியிலிருந்து மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ கீழ்க்காணும் தடி மரத் துண்டுகள் ஏல மிடப்படும்.

| | கன மீட்டர். |
|---|---|
| 1. தேக்கு .. .. .. .. | 330.450. |
| 2. ஈட்டி .. .. .. .. | 25.101 |
| 3. கருமருது .. .. .. .. | 13.944 |
| 4 வெந்தேக்கு .. .. .. .. | 17.835 |
| 5. அயினி .. .. .. .. | 12.336 |
| 6. அல்பிஸ்சு .. .. .. .. | 13.474 |
| 7. வேங்கை .. .. .. .. | 7.307 |
| 8. மற்ற வகைகள் .. .. .. | 3.800 |

மற்ற விவரங்களுக்கு மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை, கோவை-18 அல்லது வனச்சரக அலுவலர், அரசினர் மரக்கிடங்கு, மேட்டுப்பாளையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த. 61)

## ஒப்பந்தப் புள்ளி

### கதர் கிராமத் தொழில் வாரியம்
### கதர் கிராமத் தொழில் துறை

1972-73-ஆம் ஆண்டுக்குக் கதர் கிராமத் தொழில் துறைக்கு, வேண்டிய எழுது பொருள் (ஸ்டேஷனரி) சாமான்கள் சப்ளை செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற ஒப்பந்தங்கள் 30—9—1972 மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு 5—10—1972 காலை 11 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் ரூ. 10 க்கு (விற்பனை வரி தனி) டிமாண்ட் டிராப்ட் அல்லது ரொக்கம் கீழே கண்ட முகவரியில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதிக்கு முன்னதாக வாங்கப் பெற்ற டிமாண்டு டிராப்டுகள் ஏற்கப்பட மாட்டாது.

பொ. சோமசுந்தரம்,
இயக்குநர்,
கதர் கிராமத் தொழில் துறை, சென்னை-4.

(த. 69)

# தைமெட் 10-ஜி



அடிவரை ஊடுருவிச் செயல் புரிகிறது.

புழுப்பூச்சிகள் பயிர்களைத் தாக்கத் தொடங்குவதற்கு முன்பிருந்தே, சொல்லத் தரமற்ற சேதத்திலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கென வேர்வரை ஊடுருவிச் செயலாற்றத் தொடங்குகிறது தைமெட் 10 ஜி

தைமெட் 10-ஜி, பயிர் ஜீவாணுவில் ஊடுருவிச் செயலாற்றும் தன்மையும், தொடு நஞ்சாகவும் புகை நஞ்சாகவும் செயலாற்றும் தன்மையும் ஒப்பற்ற முறையில் இணையப் பெற்ற உயர்வு பூச்சிக் கொல்லியாகும். பயிர்களுக்கு நீண்டகால, முல்வழிப் பாதுகாப்பைத் தருகிறது. எனவே ஒரு முறை தைமெட் 10-ஜி பிரயோகம், வழக்கமான பூச்சிக் கொல்லிகளை பலமுறை பிரயோகிப்பதற்கு இணையாகிறது.

பயிர்ஜீவாணுவில் ஊடுருவிச் செயலாற்றும் தன்மையின் பயனாக தைமெட் 10-ஜி சீதோஷ்ண நிலைமைகளினால் பாதிக்கப் படுவதில்லை. முழுவளர்ச்சியடைந்த பயிர்களில் கெடுதலான விளைவுகள் எவற்றையும் தோற்றுவிப்பதில்லை —22க்கு மேற்பட்ட நாடுகளில் பிரபலமடைந்துள்ள தைமெட் 10-ஜி பயிர் செய்பவர்களின் பூச்சிப் பிரச்னைகளுக்கு சிக்கனமான தீர்வாகும்.




விவசாயப் பிரிவு
சயனமைட் இந்தியா லிமிடெட்
த.பெ. எண். 9109 பம்பாய்-25

CYANAMID

SISTA'S-CL-380 TAM

## வேலைவாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு லேபர் சர்வீஸில் லேபர் அதிகாரி பதவியில் இரண்டு நியமனத்திற்காக 1972 செப்டம்பர் 21 மாலை 5-00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி : (1) எந்தப் பல்கலைக் கழகத்திலாவது ஒரு பட்டம் மற்றும் (2) சமூக வேலையில் (Social Work) அல்லது ( Labour Relations and Social Welfare ) தொழிலாளர் தொடர்பில் சமூக விஞ்ஞானம் அல்லது சமூக நலத்தில் ஒரு பட்டம் அல்லது டிப்ளமா அல்லது சென்னை சட்டக் கல்லூரியில் நடத்தப்பட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாக சட்டத்தில் டிப்ளமா அல்லது எந்தப் பல்கலைக் கழகத்திலாவது சட்டப் பட்டம் (Law Degree)

வயது :—1—7—1972 அன்று 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

சுதந்தரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலிடம் (Preference) தரப்படும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாதவர்கள் 1—1—1963-ல் அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னுள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1972 அன்று 40 வயதிற்குக் குறைந்தவர்களாக இருப்பதற்குச் சலுகைகள் அளிப்பதோடு தகுதிகளும் தளர்த்தப்படும். 1—1—1964-ல் அல்லது அதற்கு பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும் இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ. மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0·35 காசு நூல் அஞ்சல் வில்லை 0·05 காசு அகதிகள் நிவாரண வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுகொள்ளலாம்.

(த. 70)

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு புள்ளி விவர (Statistics) சர்வீஸில், நேரடி ஆள் சேர்பின் மூலம் புள்ளி விவர (Statistical) அதிகாரி பதவிக்கு மாத சம்பளம் ரூ. 525—25—600—30—690—35—900-ல் ஒரு நியமனத்திற்கு 1972 செப்டம்பர் 21 மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி :—எம்.ஏ., எம்.எஸ்ஸி., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்) பட்டம் அல்லது புள்ளி விவரம் முக்கியப் பாடமாகக் ( Main Subject ) கொண்ட அல்லது கணக்கு முக்கியப் பாடமாகவும் மற்றும் புள்ளி விவரம் துணைப் பாடமாகவும் கொண்ட பி.ஏ. (ஹானர்ஸ்) அல்லது கணக்கு முக்கியப் பாடமாகக் கொண்ட பட்டத்துடன் மற்றும் புள்ளிவிவரத்தில் டிப்ளமா.

வயது :1—7—1972 அன்று 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகன்கள் 1—1—1963-ல் அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னுள் தேசிய மாணவர் படையை சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1972 அன்று 40 வயதிற்குக் குறைந்தவர்களாக இருப்பதற்குச் சலுகை அளிப்பதோடு தகுதிகளும் தளர்த்தப்படும் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும் இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0·35 காசு நூல் அஞ்சல் வில்லை 0·05 காசு அகதிகள் நிவாரண வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 71)

## அறிவிப்பு

500 எம் ஏ-யூனிட் வழங்குவதற்காக, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைப் பிரதி, விளக்கக் கருவி மாதிரிகள் மற்றும் ஒப்பந்தப்படிவங்கள், மருத்துவக் கல்வி இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெறலாம். ஒப்பந்தப் படிவம் மற்றவைகளுக்கான விலை ரூ. 10. இத் தொகை $3\frac{1}{2}$ சதவிகிதம் விற்பனை வரி மற்றும் 5 சதவிகிதம் சர்சார்ஜ் உள்ளடங்காதது. 5 சதவிகித சர்சார்ஜ் தொகை இந்திய ரிசர்வ் வங்கி அல்லது இந்திய ஸ்டேட் பேங்கின் எந்தப் பிரிவிலாவது அல்லது எந்தக் கருவூலத்திலாவது, தமிழ்நாடு அரசின் கணக்கில் "XII Medical II Director of Medical Education J. Miscellaneous" என்ற தலைப்பில், செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்படிவ விலை மற்றும் விற்பனை வரி "XII Sales Tax-Receipts under the State Sales Tax Act-General Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்பட்டு உண்மைச் சலான்கள் கொடுக்கப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

விலைக்குறிப்பீடுகள் (Quotation) மூடி முத்திரையிடப்பட்ட உறையில் "500 எம் ஏ யூனிட் வழங்குவதற்கான 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதிய விலைக்குறிப்பீடு (Quotation)" என்று குறிப்பிட்டு மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

கொடுப்பதற்கான நாள் மற்றும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் கொட்டேசன்கள் மற்றும் மேற்கண்டவாறு குறிப்பிடப்படாதவைகளும் நிராகரிக்கப்படும்.

மற்ற விவரங்கள் ஏதாவது தேவைப்படுமானுல், மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை அவர்களிடம் பெறலாம்.

**என். ஆர். ரத்தினக்கண்ணன்,**

எழிலகம்,
சேப்பாக்கம், சென்னை-5. மருத்துவக் கல்வி இயக்குநர்.

(த. 26)

### கதிர் கிராமத் தொழில் வாரியம்

வழங்கும் சுத்தமான

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய்
கடலை எண்ணெய்

ஆகியவற்றையே வாங்கி உபயோகியுங்கள்.

ஏனென்ருல் அவை

மலிவானவை ;
தரமானவை ;
சுத்தமானவை ;
சத்துள்ளவை ;
சுவையுள்ளவை ;
மணமுள்ளவை :

தமிழகமெங்குமுள்ள எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செக்கு மூலம் உற்பத்தி செய்யப்படும் இந்த எண்ணெய்கள் தரமானவை என்று அக்மார்க் செய்யப்பட்டவை.

### கிடைக்குமிடம்

காஞ்சிபுரம் எண்ணெய் மற்றும் சோப்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், லிமிடெட், சின்னகாஞ்சிபுரம்.

பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், லிமிடெட், பேட்டை, திருநெல்வேலி.

கதர் கைத் தொழில் அங்காடி
(குறளகம்)
சென்னை-1.

மற்றும்
தமிழகமெங்குமுள்ள
கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள்.

வெளியீடு,
கதர் கிராமத் தொழில் இயக்குநர்,
2, சர் தேசிகாச்சாரி சாலை, சென்னை-4.

**பொ. சோமசுந்தரம்,**

(த. 53) இயக்குநர், கதர் கிராமத் தொழில்.

## தமிழ்நாடு மின்சார வாரியம்
## மேட்டூர் மின் இயக்கத் திட்டம்

மேட்டூர் அணை-1.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு, மேட்டூர் மின் திட்ட மேற்பார்வை மின் பொறியாளரால் 29—9—1972ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனை சீட்டுகள் ((Sealed Tender)மேட்டூர் கான்கிரீட்டு கம்பங்கள் செய்யும் இடங்களாகிய (1) நேரு நகர் (2) டி.டி.சி. சென்டர் அருகி லுள்ள தொட்டிகளிலிருந்து மேட்டூர் மின்திட்ட எல்லைக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு 7·30 மீட்டர், 8·25 மீட்டர் மற்றும் 9·15 மீட்டர் கான்கிரீட்டு கம்பங்களைக் குத்தகைச் சீட்டு ஒப்புக் கொள்ளக் கூடிய தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குக் கொண்டு சேர்க்கின்ற வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன.

குத்தகை விவரங்கள், நிபந்தனைத்தாள்கள், பிரதி ஒன்றுக்கு ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத்தக்கது அல்ல)பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ, மேட்டூர் மின் இயக்கத் திட்டத் தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 25—9—1972, குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்ட அடையாளம் பெற்று) அனுப்பப்படும், அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினாலோ அல்லது உரிய காலத்தில் கிடைக்காது போனாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் மாற்றித்தரத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகை சீட்டையோ அல்லது எல்லா குத்தகை சீட்டுகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட குத்தகை தாரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத் தொகையாக மேட்டூர் மின் திட்டத் தலைமைக் கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது செடியூல் வங்கியில் செலுத்தப்பட்ட (Demand draft) பணமாற்றோலையோ குத்தகை நிபந்தனை தாளுடன் இணைத்து அனுப்பவேண்டும். பணமாற்றோலையோ அல்லது கட்டுத் தொகை செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப் படாத குத்தகைதாள்கள் தள்ளுபடி செய்யப்படும். குத்தகைதாள் கள், வந்திருக்கும் குத்தகைத்தாரர்கள் முன்னிலையில் 29—9—1972 தேதி பிற்பகல் 4-00 மணியளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும் குத்தகைத்தாள்களும் 31—8—1972ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேட்டூர் மின் திட்டம்,
மேட்டூர் அணை-1.

(த.75)

---

## பொதுப்பணித் துறை
## தனிக்கட்டட வட்டம், சென்னை-5.

வேலையின் பெயர் :—வடார்க்காடு மாவட்டம்—வேலூரில் 64 காவலர் களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக தனிக் கட்டட வட்ட கண்காணிப்புப் பொறி யாளர் அவர்களால் 12—10—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் தனிக் கட்டட வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர் களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை :—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை :—ரூ. 14,900.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன் :—ரூ.20 விற்பனை வரி 3½ சதவிகிதம்.

முடிக்கவேண்டிய காலம் : —10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கண்காணிப்புப் பொறியாளர், தனிக் கட்டட வட்டம், சென்னை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 20—9—1972 தேதி முதல் 11—10—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W.D. Remittances III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொ.ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனைவரி ரூ 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **"XII Sales tax (b) Receipts under State Sales Tax Act.—General Sales tax "** என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண் டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத் திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு, வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ. ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின் வாரிய பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பி. கே. கந்தசாமி,
கண்காணிப்புப் பொறியாளர் (பொறுப்பு)
தனிக்கட்டட வட்டம், சென்னை-5.

(த. 73)

---

## பொதுப்பணித் துறை
## தனிக்கட்டட வட்டம், சென்னை-5

வேலையின் பெயர் : வடார்க்காடு மாவட்டம், காட்பாடியில், ஒரு துணை ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள் மற்றும் பதினாறு காவலர் களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித் துறை மற்றும், அரசினா பிற துறைகளில் பதிவு செய் துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கள் மேற் குறிப்பிட்ட பணிக்காகத் தனிக்கட்டட வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் 12—10—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலை யில் தனிக் கட்டட வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை : —மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை ரூ. 4,500

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படங்களுடன் :— ரூபாய் 20 விற்பனை வரி 3½ சதவிகிதம் வீதம்.

முடிக்க வேண்டிய காலம் :— 8 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் கண்காணிப்புப் பொறியாளர், தனிக்கட்டட வட்டம், சென்னை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 20-9—1972 தேதி முதல் 11-10-1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20 (அது எந்தச் சூழ் நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ்வங்கி ஆகிய வற்றில் "P. W. D.—Remittances III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொ.ப. து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **" XII Sales tax (b) Receipts under Sales Tax Act.— General Sales tax "** என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத் திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு, வடிவிலோ, தேசிய சேமிப்பு பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காககொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின் வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தா லும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பி. கே. கந்தசாமி,
கண்காணிப்புப் பொறியாளர் (பொறுப்பு),
தனிக் கட்டட வட்டம், சென்னை-5.

(த. 77)

## முன்னேற்றத்திலும்
## செழிப்பிலும்
## எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

# TANSI

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை பேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- மெருகிற சாமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள், அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள நிருவாகப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில், 15—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பாரங்கள் விற்பனைவரி உட்பட. | முடிக்கும் காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1 திருத்தணி—துணை பணி மனையில் தார் சாலை அமைத்தல். | 1,700 | 20·80 | 2 மாதங்கள். |
| 2 பொன்னேரி—துணை பணி மனையில் தார் சாலை அமைத்தல். | 2,350 | 20·80 | 2 மாதங்கள் |

ஒப்பந்தம் :—மொத்தத் தொகை.

ஒப்பந்தங்கள் நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய அதே தேதியில் மாலை 3-15 -க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைப் படங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2-ல் உள்ள அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (30-8-1972 முதல் 14—9—1972 முடிய) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை, பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஏ. வி. சுப்பிரமணியம்,
நிருவாகப் பொறியாளர்.

(த. 74)

## பயிற்சி

### தொழில் வணிகத் துறை சென்னை-5

விருத்தாசலம் அரசினர் கலைத்திறன் மட்பாண்ட தொழில் நிலையத்தில் கலைத்திறன் அமைந்த பீங்கான் பொருள்கள் செய்வதற்கான ஓராண்டுப் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு பிரதி மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உதவிப் பணம் பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படும். பெண்களும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் உருப்படிவம், வண்ணம் தீட்டுதல் அல்லது வேறு விதமான கலைத்திறன்களில் தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும். எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். 18 முதல் 25 வயது உடையவர்களாக இருக்கவேண்டும்.

வேண்டப்படும் போது விண்ணப்பதாரர்கள் விருத்தாசலத்திற்கு தகுதி தேர்வுக்காக அவருடைய சொந்தச் செலவில் வர வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய வயது, படிப்பு முதலிய தகுதிகளை 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதிக்குள்ளாக, முதல்வர், அரசினர் பீங்கான் பயிற்சி நிலையம், விருத்தாசலம், தென் ஆர்க்காடு மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் கைப்பட எழுதி இருக்க வேண்டும். இப்பயிற்சி அரசினர் மட்பாண்ட நிலையங்களில் வேலை பெற உத்தரவாதம் அளிக்காது.

இயக்குநர்,
தொழில் வணிகத்துறை, சென்னை-5.

(த. 55)

## வேலை வாய்ப்பு

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு சென்னை-25.

ஹைட்ராலிக்ஸ் மற்றும் நீர் வழங்கு துறை, பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னை-25 " DIGITAL SIMULATION OF DRAINAGE" BASING சி.எஸ்.ஐ. ஆர். திட்டத்தில் ஒரு சீனியர் ரிசர்ச் பெல்லோ பதவியில் வேலை செய்வதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

காலம் :—நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 2 ஆண்டுகாலத்திற்கு இப்பதவி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சம்பளம் :—ரூ. 400 மாதம் ஒன்றுக்கு (திட்டவட்டமானது).

தகுதி அனுபவம் :—மனுதாரர் ஹைட்ராலிக் பொறியல் அல்லது சாயில் மெக்கானிக்ஸ் மற்றும் பவுண்டேசனில் எம்.எஸ்.சி. அல்லது எலெக்ட்ரிகல் அல்லது எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிக்கேஷன் பொறியியலில் எம்.எஸ்சி. பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது :—1—4—1972-ல் மனுதாரர் 35 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கலாகாது.

மனுக்கள் வயது, தகுதி, அனுபவம், வெளியீட்டுப் பட்டியல் இருந்தால் வெள்ளைத் தாளில் குறிப்பிட்டு உண்மையான விவரங்களுடன் பட்ட மேற்படிப்பு டீன், பொறியியல் கல்லூரி, சென்னை-25 அவர்களுக்கு 9—9—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

(த. 57)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

### 122, அண்ணாசாலை, சென்னை-6

(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)

வகை எண் 1 :—(SIDCO) சிட்கோ, தொழிற் பேட்டை அம்பத்தூரில் தொழிற் கூடங்கள், 5 எண்ணிக்கை 90' 40' 2 எண்ணிக்கை 80' 40' 1. எண்ணிக்கை 65' 30' 3 எண்ணிக்கை 60' 40' மற்றும் 1 எண்ணிக்கை 36' 30' என்ற விஸ்தீரண அளவுகளில் கட்டுதல்.

வகை எண் 2 :—சிட்கோ தொழிற் பேட்டை, அம்பத்தூரில் தொழிற் கூடங்கள் 5 எண்ணிக்கை 90' 40' 3 எண்ணிக்கை 80' 40' 2 எண்ணிக்கை 60' 40' 1 எண்ணிக்கை 50' 30' மற்றும் 2 எண்ணிக்கை 36' 30' என்ற விஸ்தீரண அளவுகளில் கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்காகத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்டின் பொது மேலாளர் அவர்களால், மாநிலம் மற்றும் மத்திய அரசுகளில் பதிவுசெய்து கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—9—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பொது மேலாளர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட், கணணம்மை கட்டடம் 7-வது அடுக்கு, 122 அண்ணாசாலை, சென்னை-6 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | வகை எண் 1. | வகை. எண் 2. |
|---|---|---|
| அ. ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| ஆ. கட்டுத்தொகை .. .. | ரூ. 15,000 | ரூ. 15,700. |
| இ. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரைப்படங்களுடன் | ரூ. 20+வி. வரி ரூ. 0.75 | ரூ. 20+வி. வரி 0·75. |
| ஈ. வேலை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். | 6 மாதங்கள். |
| உ. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் நாள். | 28—8—1972 | 28—8—1972 |
| ஊ. பதிவு செய்யப்பட்ட உரிய பிரிவு ஒப்பந்ததாரர்கள். | இரண்டாவது வகுப்பு மற்றும் மேலும். | இரண்டாவது வகுப்பு மற்றும் மேலும். |

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரி உட்பட ரூ. 20·75 பணமாகச் செலுத்தப்பட வேண்டும் (திருப்பித்தரப்பட மாட்டாது).

கட்டுத் தொகை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம் லிமிடெட் பெறும்வகையில் பாங்கு காரண்டி வடிவில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது 3 ஆண்டு அனுபவமாவது பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு சிறுதொழிற் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்டின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் அவர்களுக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை-5.

(த. 56

## 1972 ஆகஸ்டுத் திங்கள் 18-ஆம் நாள்

### சட்டமன்றத்தில்

# முதல் அமைச்சர் அளித்த

# அறிக்கை !

இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராய தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் அக்குழு சமர்ப்பித்த அறிக்கையினையும், பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒருசேர ஆய்வு செய்தது. அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன்.

2. பட்டதாரி ஆசிரியர்களது சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 275—10—375—15—450 என்பதிலிருந்து ரூ. 300—10—350—15—500 ஆக மாற்றி உயர்த்தப்படும். இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்குப் பட்டப் படிப்பு தகுதியாக அமைந்துள்ள, முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழிபெயர்ப்பு உதவியாளர்கள் ஆகியோர் சம்பள விகிதங்களும் தற்போதுள்ள ரூ. 275—10—375—15—450 என்பதிலிருந்து ரூ. 300—10—350—15—500 என மாற்றி உயர்த்தப்படும். இந்த உயர்வினால், பட்டதாரி ஆசிரியர் 25,000 உட்பட 31,000 பயன் பெறுவர்.

3. கால்நடை உதவி மருத்துவர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 400—15—475—20—575—25—650 என்பதிலிருந்து ரூ. 425—20—525—25—700 என மாற்றி உயர்த்தப்படும். அதன் பயனாக ஏறத்தாழ 900 பேர் பயனடைவர்.

4. இளம் பொறியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 400—15—475—20—575—25—650 என்பதிலிருந்து ரூ. 425—20—525—25—700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் விளைவாக ஏறத்தாழ 1900 பேர் பயன் பெறுவர்.

5. இளநிலை உதவியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 200—5—250—300 என்பதிலிருந்து ரூ. 210—5-245—10—325 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் அடைவர்.

6. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250—10—300—15—450 என மாற்றி உயர்த்தப்படும்.

7. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 350—15—500—20—600 என்பதிலிருந்து ரூ. 350—15—425—25—600 என மாற்றியமைக்கப்படும். இதன் பயனாக ஏறத்தாழ 1100 பேர் பயன் அடைவர்.

8. வருவாய்த் துறையின் கீழ் வரும் கிராம அதிகாரிகள் ஊழியர்கள் மதிப்பூதியம் (Honorarium) மாதமொன்றுக்கு ரூ. 7 வீதம் உயர்த்தப்படும். மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

9. இடைநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 225—5—250—10—350 என்பதிலிருந்து ரூ. 250—10—400 என மாற்றி உயர்த்தப்படும். இத்துடன் தேர்வு நிலை ஆசிரியர்களிடமிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக்காட்ட சிறப்பூதியமாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும். இதனால் 4900 தலைமை ஆசிரியர்கள் பலனடைவர்.

10. சம்பள விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த, மற்றப் பதவிகளில், புதிய விகிதங்களில் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும். இதன்படி பழைய பணிக்காலத்திற்கு இரண்டு மூன்று, ஆண்டுகள் பணிக்கு ஒரு உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும். கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இரண்டாண்டுக்கும் ஒரு உயர்வு எனக் கொண்டு, ஐந்து உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள் மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

இச்சலுகைகள் வரும் செப்டம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—70 அடிப்படைத் தேதியாகக் கொள்ளப்படும்.

தனி நபர் குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச் சலுகைகளின் விளைவாகத் தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக்கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச்சலுகைகளை அனைவரும் வரவேற்றிடுவீர் என்றும், இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகிறேன்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.